சனாதிபதி செயலகம்

# காணி சீர்திருத்த ஆணைக்குழு

# LAND REFORM COMMISSION

# ஆண்டறிக்கை

# ANNUAL REPORT

2011

2011 ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதி தொடக்கம்

2011 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி வரை

*FROM 1 st of January -31 st of December*

## காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் தகவல்கள்

| | |
|---|---|
| **நிறுவனம்** | காணி சீர்திருத்த ஆணைக்குழு |
| **அமைச்சு** | சனாதிபதி செயலகம் |
| **முகவரி** | சீ, 82 ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தை,<br>கொழும்பு – 07 |
| **மின்னஞ்சல் முகவரி** | hrmdlrc@gmail.com |
| **தொலைபேசி இலக்கங்கள்** | 011-2694251.∴.0112-672273 |
| **பெக்ஸ் இலக்கங்கள்** | 011-2693438.∴.698849 |
| **கணக்காய்வாளர்கள்** | கணக்காய்வாளர் தலைமை அதிபதி<br>கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்<br>கொழும்பு - 07. |
| **வங்கியாளர்கள்:** | இலங்கை வங்கி,<br>நிறுவனக் கிளை,<br>கோட்டை.<br>தேசிய சேமிப்பு வங்கி,<br>பொறலை.<br>அரச ஈட்டு முதலீட்டு வங்கி,<br>கொள்ளுப்பிட்டி. |

# அறிமுகம்

1972 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க காணி சீர்திருத்தச் சட்டத்தால் ஸ்தாபிக்கப்பட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழு 1972 ஆம் ஆண்டு வரை நீண்டுச் செல்லும் வரலாற்றைக் கொண்டுள்ளது.

ஆணைக்குழுவானது, ஏறத்தாழ 35 வருடங்களாக காணி சீர்திருத்த சட்டத்தினால் அளிக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் மற்றும் அராங்கத்தால் அவ்வப்போது மேற்கொள்கின்ற கொள்கை ரீதியான தீர்மானங்கள் ஆகியவற்றுக்கமைவாக அதன் பணிகளை வழிநடாத்தியது. காணி உரிமையாளர்களின் சட்ட ரீதியான பொறுப்புகளை வழங்குதல், அவர்களுக்கு நட்டஈடு செலுத்துதல், ஏற்கப்பட்ட காணிகளை பயனுள்ள முதலீடுகளில் ஈடுபடுத்தல் மற்றும் ஆணைக்குழுவிற்கு கிடைக்க வேண்டிய வருமானங்களை சேகரித்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டதுடன், பிரதான கடமைப்பொறுப்புகள் சார்பாக கடைபிடிக்கப்பட்ட செயற் சட்டங்கள் அவ்வப்போது மாற்று வடிவை கொண்டிருந்தது.

2005 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட சனாதிபதி தேர்தலின் பின்னர் அதிமேதகு சனாதிபதி அவர்களின் மஹிந்த சிந்தனை கொள்கைகளுக்கு அமைவாக, ஒரு இலட்சம் காணித்துண்டுகளை பொதுமக்களிடம் பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ், அப் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதனை இலக்காகக்கொண்டு ஆணைக்குழுவின் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. மேலும் மேற்படி பணியினுள் நிறுவனத்தின் ஊழியர்களது சம்பளம் அதிகரிக்கப்பட்டதுடன் தொழில் கட்டுக்காப்பை ஏற்படுத்துவதன் மூலம் புத்துயிரூட்டும் நிகழ்ச்சித்திட்டமொன்றும் ஆரம்பிக்கப்பட்டது.

**அதன் பிரகாரம்**

i. ஆணைக்குழுவிற்குச் சொந்தமான இனம்காணப்படாத காணிகளை பெற்றுக்கொள்ளுதல்.

ii. பயனற்ற முதலீடுகளுக்கு கையளிக்கப்பட்ட காணிகளை மீளப் பெற்றுக் கொள்ளுதல்.

iii. 2002 – 2004 காலப்பகுதியில் சட்டப்படியின்றி வழங்கப்பட்ட காணிகள் தொடர்பில் அமைச்சரவை தீர்மானத்திற்கமைவாக நடவடிக்கைகளை மேற்கொண்டு, குறித்த காணிகளை மீள கையேற்கப்பட்டு பயனுள்ள முதலீடுகளில் ஈடுபடுத்தல்.

iv. ஒரு இலட்சம் காணித்துண்டுகளை பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் ஆணைக்குழுவிற்குரியதான பகிர்ந்தளிக்க முடியுமான காணிகளை பகிர்ந்தளிப்பதற்கு துரித வேலைத்திட்டமொன்றை தயாரித்தல் மற்றும் இதுவரை பகிர்ந்தளித்திருந்த

காணிகளில் வதிவிடலாளர்களின் பொருட்டு ஒழுங்குப்படுத்தியிருந்த நிகழச்சித்திட்டத்திற்கு புது வடிவம் கொடுத்து தேசிய பணியாக ரன்பிம உறுதி வழங்கல் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

v. வருமானத்தை அதிகரிக்கும் நிகழ்ச்சித் திட்டம்:

(அ) ரணவிரு சேவை அதிகாரசபை

(ஆ) அரசினால் ஏற்கப்பட்ட காணிகளுக்கு நட்டஈடு செலுத்துதல்

(இ) அரச நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள காணிகளுக்கான வருமானங்களை பெறுதல்

(ஈ) குத்தகை அடிப்படையில் ஆட்களுக்கு கையளிக்கப்பட்ட காணிகளின் பொருட்டு இதுவரை அறவிட முடியாதுள்ள குத்தகை பணத்தை அறவிடுவதற்காக முறையான வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்.

(உ) கருங்கற்களை குத்தகைக்கு விடுதல் மற்றும் அதற்கான வருமானங்களை சேகரித்தல்.

(ஊ) இரத்தினக்கல் காணிகளுக்கு ஏற்புடையதாக புதிய ஒழுங்கு விதிகளை விதித்து வருமானம் சேகரித்தல்

(எ) சிலிக்கா, டொலமையிட், மணல் போன்ற கனிமப்பொருட்கள் உள்ள காணிகளில் இருந்து வருமானம் பெறுதல்.

நிறுவனத்தின் மேற்படி கடமைப்பொறுப்புகள் தொடர்பாக பணிற்றொகுதியை அறிவுறுத்தல் மற்றும் அலுவலர்களின் கருத்துக்கள், பிரேரணைகள் ஆகியவற்றை பெற்றுக் கொள்வதற்காக ஒவ்வொரு பணியின் பொருட்டும் நிறுவனத்தைச் சேர்ந்த அனைத்து அலுவலர்களையும் கொண்டமைந்த குழுக்களை நியமித்தல், செயலமர்வுகளை நடாத்துதல் ஆகியவற்றை மேற்கொள்ளப்பட்டன. அதே போன்று பணிற்றொகுதிகளை பயிற்றுவிப்பதற்காக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் நடாத்தப்பட்டன.

அதிமேதகு சனாதிபதி அவர்களின் மஹிந்த சிந்தனையின் பிரகாரமும், அரசாங்க கொள்கைகளுக்கு ஏற்புடையதாக காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிகளை முன்னெடுப்பதற்கும் துரிதகதியில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. ஆகையால் காலத்திற்கேற்ற நடவடிக்கையாக கௌரவ விவசாய அபிவிருத்தி அமைச்சரின் தலைமையில் அவ்வப்போது கூட்டங்களை நடாத்தி தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அதன் பின்னர் அத்தீர்மானங்களை நடைமுறைப்படுத்தி பின்னூட்டலும் மேற்கொள்ளப்பட்டன. மேலும் பொது

மக்களின் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக அவர்களை அழைத்து கௌரவ அமைச்சர் அவர்களின் தலைமையிலும் அமைச்சர் அவர்களால் நியமிக்கப்பட்ட குழுக்களாலும் நேரடி உரையாடல்களை நடாத்தி உடனடித் தீர்மானங்களை மேற்கொள்ளப்பட்டது.

இதற்கு மேலதிகமாக பயனுள்ள முதலீடுகளை இனம்கண்டு அதன் பொருட்டு காணிகளை வழங்குவதற்காக, கௌரவ அமைச்சர் அவர்களின் அறிவுரைகளுக்கமைவாக நிபுணத்துவ அறிவுடைய ஆலோசனை குழுவின் பரிந்துரைகளின் படி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

மேலும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவால் கையேற்கப்பட்ட பத்து இலட்சம் ஏக்கர் அளவிலான காணிகளுள் ஆணைக்குழுவிற்குறித்தாகியுள்ள காணிகள் தொடர்பாக, எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அதிமேதகு சனாதிபதி அவர்களின் ஆலோசனைப்படி அமைச்சர்களுக்கிடையிலான குழுவொன்றை ஸ்தாபிக்கப்பட்டது.

இவ்வேலைத்திட்டத்தின் மூலம் நிறுவனத்திடமிருந்து இல்லாது போன வளங்களை கொண்டு நிறுவனத்தின் முன்னேற்றத்திற்கு மட்டுமல்லாது நாட்டின் பொருளாதார சமூக அபிவிருத்தியிலும் பங்களிப்புகளை மேற்கொள்ளப்பட்டது.

# காணி சீர்திருத்த ஆணைக்குழு

## நோக்குகை

காணி சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் பராதீனப்படுத்திய காணிகள், பௌதீக வளங்கள் ஆகியவற்றை மக்கள் மற்றும் தேசத்தின் சுபீட்சம் கருதி வழிநடாத்தும் முன்னணி நிறுவனமாக செயற்படுதல்

# காணி சீர்திருத்த ஆணைக்குழு

## செயற்பணி

காணி சீர்திருத்த தொழிற்பாடு மற்றும் உச்ச எல்லைக்கு அதிகமான காணிகள் ஆகியவற்றை நாட்டின் நலன்கருதி அவற்றின் உற்பத்தி திறனை அதிகரித்தும், பௌதீக வளங்களின் உரிமையை பாதுகாத்து நிர்வகித்தும், காணிகளின் உச்ச எல்லையை காலத்திற்கேற்றவாறு நடைமுறைப்படுத்தியும், சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நட்டஈடு செலுத்தி பொருளாதார நடவடிக்கைகளில் முதலீடு செய்தும், எதிர்கால சந்ததியினரின் மேம்பாட்டின் பொருட்டு பயன்படுத்த முடியுமான காணி ஒதுக்கமொன்றை பேணிக்கொண்டும் தேசிய அபிவிருத்தியில் முனைப்பாக பங்களிப்புச் செய்தல்.

## நோக்கங்கள்:

01. காணிகளைப் பற்றிய தகவல்களை திரட்டுதல்

i. வெளிப்படுத்திய போதும், இனம் காணப்படாத காணிகளை இனம்காணுதல்.

i. பொது மக்களிடமிருந்து கிடைக்கும் தகவல்களின் படி காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளை இனம்காணுதல்.

ii. கையளிக்கப்படினும் அச் செயற்பாடு நிறைவேறாதிருப்பின் அக் காணிகளை ஆணைக்குழுவிற்கு கையேற்றல்.

02. ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பாக,

i. நியதிச்சட்ட முறையிலான தீர்மானங்கள் மற்றும் சட்டமுறையிலான பிணைப்புகள் ஆகியவற்றை விடுவித்தல்.

ii. உச்ச எல்லைக்கு மேற்பட்ட காணிகளை ஆணைக்குழுவிற்கு கையேற்றல்.

iii. ஏற்கப்பட்ட காணிகளுக்காக ந்'டஈடு வழங்குதல்.

iv. வெளிப்படுத்திய எனினும் வெளிப்படாதோரின் காணிகளை மீள வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொள்ளுதல்

03. நாட்டின் பொருளாதார, சமூக அபிவிருத்திக்காக அரசினால் மேற்கொள்ளப்படும் கொள்கை முறையிலான தீர்மானங்களையும் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி ஏற்கப்பட்ட காணிகளையும் பயனுள்ள முதலீடுகளில் ஈடுபடுத்தல்.

04. ஆணைக்குழுவிற்குரியதாக உள்ள காணிகளால் கிடைக்க வேண்டிய வருமானங்களை சேகரித்தல் மற்றும் அதன் மூலம் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி செயற்பாட்டில் பங்களித்தல்.

## தொழிற்பாடுகள்:

- காணி சீர்திருத்தச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக ஆளொருவர் வைத்திருக்க முடியுமான ஆகக் கூடிய காணி அளவினை சட்ட முறைப்படுத்தல்.
- உச்ச எல்லைக்கு மேற்பட்ட காணிகளை அடையாளம் கண்டு ஆணைக்குழுவிற்கு சுவீகரித்துக் கொள்ளல்.
- சட்டங்களிலிருந்து கிடைக்கப்பெற்றிருக்கும் ஏற்பாடுகளின் படி சட்டமுறையிலான பிணைப்புகளிலிருந்து விடுவித்தல்.
- ஆணைக்குழுவிற்கு சுவீகரித்துக்கொண்ட காணிகளின் பொருட்டு வெளிப்படுத்துனர்களுக்கு ந்'டஈடு செலுத்துதல்.
- பாராதீனப்படுத்தியிருப்பினும் சட்டத்திற்குப் புறம்பான காணிகளை மீள வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- காணிகள் தொடர்பான பதிவேடுகளை நாளது வரைப்படுத்தல் மற்றும் வெளிக்கள துறையை தொடர்பு கொண்டு காணிகள் பற்றிய தகவல்களை சேகரித்தல்.

  i. வெளிப்படுத்தியிருப்பினும் அடையாளம் காணப்படாத காணிகள்.
  ii. உச்ச எல்லைக்கு மேற்பட்ட வெளிப்படுத்தப்படாத காணிகள்.
  iii. கையளிக்கப்பட்டிருப்பினும் பயனுள்ள முறையில் முதலீடு செய்யப்படாத காணிகள்

❋ நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் பங்களிக்கச் செய்தல்.

1. முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களுக்காக காணி வழங்குதல்.
2. கமத்தொழில் சார்ந்த கருத்திட்டஙகள் மற்றும் பயிர்ச்செய்கைகளுக்கு தேவையான காணிகள் என்பவற்றை வழங்குதல்.
3. கைத்தொழில்களுக்கான காணிகளை வழங்குதல்.

❋ நாட்டின் சமூக அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்தல்.

i. காணிகள் இல்லாத மக்களுக்கு வீடமைப்பு நோக்கத்திற்காக காணி வழங்குதல்.
ii. அரச கொள்கை ரீதியில் மேற்கொள்ளப்படும் விசேட கருத்திட்டங்களுக்காக காணி வழங்குதல்.
iii. வழிப்பாட்டிடங்களுக்கு காணி வழங்குதல்.
iv. மக்களுக்காக பொது அலுவலகங்களின் பொருட்டு காணி வழங்குதல்
v. அரச நிறுவனங்களுக்காக காணி வழங்குதல்.

ழூ வருமானம் சேகரிக்கும் கருத்திட்டங்களை செயற்படுத்தல்.

1. நிலத்திலுள்ள வளங்களினால் வருமானங்களை சேகரித்தல்.
ii. வுரி அடிப்படையில் காணிகளை கையளித்து குத்தகை வருமானங்களை சேகரித்தல்.
iii. அரசு சார்ந்த, அரசு சாராத அத்துடன் ஆட்களிடம் இருந்து கிடைக்கவுள்ள பணத்தொகைகளை அறவிடுதல்.

* நிறுவனத்தின் அமைப்பான்மை கட்டமைப்பை அமைவுபடுத்தல்.

i. பயிற்சி மற்றும் வினைத்திறமையான பணிற்றொகுதியை உருவாக்குதல்

ii. முறையாக கடமைகளை கையளித்தல்

iii. அதிகாரங்களை பண்முகப்படுத்தி கடமைகளை

கையளித்தல்

iv. கலந்துரையாடல்கள், செயலமர்வுகள், மற்றும் பயிற்றுவிப்புகள் என்பவற்றுக்கு பணிற்றொகுதியினரை ஈடுபடுத்தல்

- ❖ நிறுவனத்தின் வினைத்திறமையான உற்பத்திதிறனை ஏற்படுத்துவதற்காக பௌதிக வளங்களின் உற்பத்தி மற்றும் தேவையான வசதிகள் என்பவற்றை ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## காணி சீர்திருத்த ஆணைக்குழு

### கடமைப்பொறுப்புகள்

சட்ட ஏற்பாடுகளுக்கமைவாக கையளிக்கப்பட்டுள்ள கடமைப்பொறுப்புகளுக்கு மேலதிகமாக அவ்வப்போது அரசாங்கத்தால் மேற்கொள்ளகின்ற கொள்கை முறையிலான தீர்மானங்களுக்கேற்ப மேற்படி கடமைப்பொறுப்புகளை விரிவான விடயவெல்லைக்குள் அமுல்படுத்த வேண்டியுள்ளது.

## காணி சீர்திருத்த ஆணைக்குழு

## சட்ட அதிகாரம் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான சட்டங்கள்

1. 1972 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க காணி சீர்திருத்த சட்டம்.
2. 1975 ஆம் ஆண்டு 39 ஆம் இலக்க காணி சீர்திருத்த (திருத்தச்) சட்டம்
3. 1981 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க காணி சீர்திருத்த (திருத்தச்) சட்டம்
4. 1981 ஆம் ஆண்டு 39 ஆம் இலக்க காணி சீர்திருத்த (விசேட ஏற்பாடுகள்) சட்டம்.
5. 1986 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க காணி சீர்திருத்த (விசேட ஏற்பாடுகள்) சட்டம்.
6. 1986 ஆம் ஆண்டு 18 ஆம் இலக்க காணி சீர்திருத்த (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்.

சட்ட இலக்கங்கள் (1) மற்றும் (2) ஆகியவற்றின் படி

| | | | |
|---|---|---|---|
| 1. | உள்ளக வெளிப்படுத்துநர்கள் | - | ஏக்கர் 593449 |
| 2. | தங்கப்பவுன் கம்பனிகள் | - | ஏக்கர் 195644 |
| 3. | ரூபா கம்பனிகள் | - | ஏக்கர் 228813 |
| | | | ஏக்கர் 987906 |

என்ற வகையில் 987900 ஏக்கர் அளவிலான காணிகள், காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளன. மேற்படி சட்ட இலக்கங்கள் (1) மற்றும் (2) ஆகியவற்றின் படி,

1. திருத்தங்கள் - சட்ட இலக்கங்கள் 3 மற்றும் 6 ஆகியவற்றிலும்

ii. ஏற்பாடுகள் - சட்ட இலக்கங்கள் 4, 5 மற்றும் 6 ஆகியவற்றிலும் அளிக்கப்பட்டுள்ளன.

1. கௌரவ விடயபொறுப்பு அமைச்சர் அவர்களால் நியமனம் செய்கின்ற - தவிசாளர்
2. கௌரவ விடயபொறுப்பு அமைச்சர் அவர்களால் நியமனம் செய்கின்ற - உறுப்பினர்கள் 5
3. உத்தியோகபூர்வ முறையில் நியமனம் பெறுகின்ற உறுப்பினர்கள் -3

ஆணைக்குழுவின் பணிகளை அமுல்படுத்தும் பொருட்டு இவ் ஆணைக்குழுவால் மேற்கொள்கின்ற தீர்மானங்கள் மற்றும் அங்கீகாரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன் ஒவ்வொரு பணிகளுக்கும் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுகிறது. 1972 ஆம் ஆண்டு தொடக்கம் 2011.12.31 ஆந் திகதி வரை 627 சபை கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

**சட்டத்தில் பிரிவு 45 (1) அ இன் கீழ் நியமனம் செய்யப்பட்ட தவிசாளர்**

| தொடர் இல. | பெயர் | நிரந்தர பதவி | நியமனத் திகதியும் அங்கத்துவம் வகித்த காலப் பகுதியும் | அலுவலக முகவரி | தொலை பேசி இல. |
|---|---|---|---|---|---|
| 01 | சட்டத்தரணி நிமல் ஜீ புஞ்சிஹேவா | தவிசாளர் காணி சீர்திருத்த ஆணைக்குழு | 2008.03.12 தொடக்கம் இன்று வரை | C/ 82 ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தை கொழும்பு - 07. | 011-2698798 |

**02. சட்டத்தின் பிரிவு 45(1) அ வின் கீழ் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்கள்**

| தொடர் இல | பெயர் | நிரந்தர பதவி | நியமனத் திகதியும் அங்கத்துவம் வகித்த காலப் பகுதியும் | அலுவலக முகவரி | தொலை பேசி இல. |
|---|---|---|---|---|---|
| 01 | சட்டத்தரணி திரு. ஹரிகுப்தா ரோஹனதீர | நிறைவேற்றுப் பணிப்பாளர் | 2008.06.04 தொடக்கம் இன்று வரை | காணி சீர்திருத்த ஆணைக்குழு, C/ 82, ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தை, கொழும்பு - 07. | 011-2693967 |
| 02 | திரு.சுனில் குணவர்தன<br><br>திருமதி.ஏ.எல்.ஏ. ரம்யகாந்தி | பணிப்பாளர்<br><br>பணிப்பாளர் | 2010.06.16 தொடக்கம் 2011.06.23 வரை<br><br>2011.06.24 தொடக்கம் இன்று வரை | தேசிய வரவுசெலவு திணைக்களம், பொதுச் திறைசேரி, கொழும்பு-01. | 011-2484500 |
| 03 | திரு.பீ.எல்.யூ.திசா நாயக்க | மேலதிக செயலாளர் | 2009.10.21 தொடக்கம் இன்று வரை | பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு, 55/75, வொக் ஷோல் வீதி, கொழும்பு – 02. | 011-2438707 |
| 04 | திரு. ஜீ.டப். சேனாரத்ன | ஆலோசகர் | 2007.01.01 தொடக்கம் இன்று வரை | மிலோதா நிறுவனம், ஓல்கட் மாவத்தை, கொழும்பு 11 | |

03. சட்டத்தில் பிரிவு 45 (1) இ பிரிவின் கீழ் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்

| தொடர் இல | பெயர் | நிரந்தர பதவி | நியமனத் திகதியும் அங்கத்துவம் வகித்த காலப் பகுதியும் | அலுவலக முகவரி | தொலை பேசி இல. |
|---|---|---|---|---|---|
| 01 | திரு.ஆர்.பீ.ஆர். ராஜபக்ஷ | காணி ஆணையாளர் நாயகம் | 2010.08.19 தொடக்கம் இன்று வரை | காணிஆணையாளர் திணைக்களம், ஹெக்டர் கொப்பேகடுவ, மாவத்தை, கொழும்பு – 07. | 0112-866172 |
| 02 | திரு.ஆர் ஹேவாவித்தாரண | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் | 2008.03.10 தொடக்கம் இன்று வரை | கமநல அபிவிருத்தித் திணைக்களம், இல: 42, ஸ்ரீமத் மாக்ஸ்பர்னாண்டோ மாவத்தை, கொழும்பு-07. | 0112-672712 |
| 03 | திரு கமல் மான்கொட்டி | கமத்தொழில் பணிப்பாளர் நாயகம் | 2010.07.15 தொடக்கம் இன்று வரை | கமத்தொழில் திணைக்களம் கன்னோறுவ பேராதனை | 081-2388331 |

# பௌதீக வளங்களின் முகாமைத்துவம்

| தொடர் இல. | சொத்துக்களின் வகை | ஆண்டு தொடக்கத்தில் இருந்த நிலை | ஆண்டிற்குள் ஏற்பட்ட மாற்றங்கள் | | | | ஆண்டு முடிவில் இருந்த நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | கெப் வண்டிகள் | 10 | 03 | | | | 13 |
| 02 | மோட்டார் வாகனங்கள் | 01 | | | | | 01 |
| 03 | மைக்ரோ கயிரன் ஜீப் வண்டிகள் | 02 | | | | | 02 |
| 04 | வேன் | 01 | | | | | 01 |
| 05 | மோட்டார் சைக்கிள் | 01 | | | | | 01 |
| 06 | டுப்ளோ இயந்திரங்கள் | 01 | | | | | 01 |
| 07 | நிழற் பட பிரதி இயந்திரங்கள் | 05 | 01 | | | | 06 |
| 08 | கணினி | 31 | 10 | | | | 41 |
| 09 | கணினி அச்சுப் பொறிகள் | 31 | | | | | 31 |
| 10. | லெப்டொப் கணினிகள் | 01 | | | | | 01 |
| 11 | பெக்ஸ் இயந்திரங்கள் | 20 | | | | | 20 |
| 12 | தட்டச்சுக்கள் | 21 | | | | | 21 |
| 13 | காப்புப் பெட்டிகள் | 10 | | | | | 10 |
| 14 | கெமராக்கள் | 01 | | | | | 01 |
| 15 | தொலைக்காட்சிப் பெட்டிகள் | 01 | | | | | 01 |
| 16 | குளிர்சாதனப் பெட்டிகள் | 01 | | | | | 01 |
| 17 | றோனியோ இயந்திரங்கள் | 02 | | | | | 02 |
| 18 | ஒலிப்பெருக்கி இயந்திரங்கள் | 01 | | | | | 01 |

## காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிற்றொகுதி

காணி சீர்திருத்த சட்டத்தின் கீழ் கையளிக்கப்பட்ட காணிகள் மற்றும் பௌதீக வளங்கள் ஆகியவற்றை மக்களினதும் தேசத்தினதும் சுபீட்சம் கருதி வழிநடாத்தும் முன்னணி நிறுவனமாக உருவாகுதல் எதிர்கால நோக்கமாகும். இதனை அடிப்படையாகக்கொண்டு காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பிரதான நிறைவேற்று அலுவலராக தவிசாளர் பணியாற்றுவதுடன், அவரின் உதவிக்காக நிறைவேற்றுப்பணிப்பாளர், பிரிவுக்கு பொறுப்பான பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர்கள் உள்ளிட்ட 409 உத்தியோகத்தர்களை கொண்ட பணிற்றொகுதி காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றுகின்றது.

குறித்த பணிற்றொகுதி தலைமை அலுவலகத்தில் 14 பிரிவுகளையும், மாவட்ட அலுவலகங்கள் 19 ம் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

2010.12.31 ஆந் திகதியில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிற்றொகுதி

| தொடர் இலக்கம் | பதவி | எண்ணிக்கை க | நிரந்தர | ஓபபந்த | அமய |
|---|---|---|---|---|---|
| 01 | தவிசாளர் | 01 | 01 | - | - |
| 02 | நிறைவேற்றுப் பணிப்பாளர் | 01 | 01 | - | - |
| 03 | செயலாளர் | 01 | 01 | - | - |
| 04 | ஆலோசகர் | 01 | - | - | 01 |
| 05 | பணிப்பாளர் I | 02 | 01 | 01 | - |
| 06 | பணிப்பாளர் II | 03 | 03 | - | - |
| 07 | பணிப்பாளர் III | 01 | 01 | - | - |
| 08 | கணக்காளர் III | 01 | 01 | - | - |
| 09 | உதவிப்பணிப்பாளர் iv | 28 | 28 | - | - |
| 10 | தனிப்பட்ட உதவியாளர் | 01 | 01 | - | - |
| 11 | சட்ட அலுவலர் IV | 01 | 01 | - | - |
| 12 | மதிப்பீட்டு பரிசோதகர் IV | 01 | 01 | - | - |
| 13 | சட்ட உதவியாளர் V | 02 | 02 | - | - |
| 14 | பதவிநிலை உதவியாளர் V | 30 | 30 | - | - |
| 15 | போக்குவரத்து அலுவலர் IV | 01 | 01 | - | - |
| 16 | சுருக்கெழுத்தாளர் V | 02 | 02 | - | - |
| 17 | கணக்கீட்டு அலுவலர் V | 06 | 06 | - | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 18 | எழுதுநர் Vi | 64 | 64 | - | - |
| 19 | எழுதுநர் VI1 | 102 | 101 | 01 | - |
| 20 | கணக்கீட்டு எழுதுநர் V11 | 03 | 03 | - | - |
| 21 | வெளிக்கள அலுவலர் V1 | 10 | 10 | - | - |
| 22 | வெளிக்கள அலுவலர் V11 | 47 | 46 | 01 | - |
| 23 | நீதிமன்ற அலுவலர் V1 | 02 | 02 | - | - |
| 24 | தட்டெழுத்தாளர் v1 | 18 | 18 | - | - |
| 25. | தட்டெழுத்தாளர் எனை | 19 | 17 | - | 02 |
| 26 | சிறாப்பர் vi | | | | |
| 27 | படவரைஞர் V1 | - | - | - | - |
| 28 | மொழிபெயர்ப்பாளர் | 01 | - | - | 01 |
| 29 | தொலைபேசி இயக்குனர் vi | - | - | - | - |
| 30 | றோனியோ இயந்திர இயக்குனர் viii | 01 | 01 | - | - |
| 31 | நிழற்பட பிரதி இயந்திர இயக்குனர் viii | 01 | 01 | - | - |
| 32 | சாரதிகள் viii | 16 | 16 | - | - |
| 33 | புத்தகம் கட்டுநர் viii | 01 | 01 | - | - |
| 34 | அலுவலக பணியாளர் சேவை viii | 33 | 33 | - | - |
| 35 | பாதுகாப்பு உத்தியோகத்தர் viii | 07 | 07 | - | - |
| 36 | கூட்டிணைப்பாளர் (கையளித்தல) | 01 | - | - | 01 |
| | **மொத்தம்** | **409** | **401** | **03** | **05** |

<u>காணி சீர்திருத்த ஆணைக்குழு</u>

<u>நடைமுறை அலுவலக திட்டம்</u>



பணிகள்

i. காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் அனைத்து அலுவலர்களுக்கும் ஏற்புடையதாகும் வண்ணம் அனைத்து நிர்வாக நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.

ii. ஊழியர்களின் ஆட்சேர்பு, பதவி உயர்வுகள், இடமாற்றங்கள், வேதன வேற்றங்களை வழங்குதல், ஊழியர்களின் நிர்வாகம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

iii. மாவட்ட அலுவலகங்களை கூட்டிணைத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

iv. அலுவலர்களுக்கான நலன்புரி பணிகளை மேற்கொள்ளுதல்

v. அலுவலக தேவைகளை பூர்த்திசெய்தல்

vi. அன்றாட அலுவலக பேணுதல் நடவடிக்கைகளை பேணிச்செல்லுதல்

vii. பெறுகை நடவடிக்கைகளை பேணிச்செல்லுதல்

viii. நிறுவனத்தின் இணைந்த திட்டம், செயற்றிட்டம், ஆண்டறிக்கைகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை தயாரித்தல்.

ix. காணி சீர்திருத்த ஆணைக்குழுக்குவிற்கு ஏற்புடையதான நிர்வாக சுற்றறிக்கைகளை வெளியிடுதல்.

x. ஓய்வுபெறச்செய்வித்த மற்றும் இராஜினமா செய்த அலுவலர்களுக்காக பணிக்கொடை , ஊழியர் சேமநல நிதியத்தின் படிகள் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் படிகள் என்பவற்றை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

xi. பொது வைபவங்களை ஒழுங்கமைத்தல்

xii. பொது வாகன முகாமைத்துவ முறைமையை பேணிச்செல்லுதல்.

xiii. நிறுவனத்தின் பணிற்றொகுதியின் ஒழுக்காற்று நடவடிக்கைகளை பேணிச்செல்லுதல்

கணக்காய்வு அறிக்கைகளை பேணிச்செல்லுதல் மற்றும் அரச கூட்டுமுயற்சி தொடர்பான கணக்கு செயற்குழுவிற்கு தேவையான தகவல் அறிக்கைகளை சமர்ப்பித்தல்.

xv. வருடாந்த அறிக்கைகளை அமைச்சரவையிடம் மற்றும் பாராளுமன்றத்திடம் சமர்ப்பித்தல்

xvi. மாவட்ட அலுவலகங்களின் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

2011.01.01 ஆந் திகதி தொடக்கம் 2011.12.31 ஆந் திகதி வரை நிறைவேற்றிய பிரதான பணிகள்

i. நிறுவனத்தின் அமைப்பான்மை கட்டமைப்பு மற்றும் பணிற்றொகுதியின் முகாமைத்துவம்

ii. ஆட்சேர்ப்புத் திட்டத்தை நாளதுவரைப்படுத்தல்

iii. பணிற்றொகுதியின் பயிற்சி மற்றும் அபிவிருத்தி

iv. மாவட்ட அலுவலகங்களை முறைசார்படுத்தல்

v. வருடாந்த இடமாற்றங்களை நடைமுறைப்படுத்தல்

vi. ஒழுங்கு முறையான பதவி உயர்வு முறையினை ஏற்படுத்தல்.

vii. அலுவலக தேவைகளை பூர்த்திசெய்தல்

viii. பிரதான அலுவலக கட்டிடத்தை பேணிச்செல்லுதல்

ix. காணி சீர்திருத்த ஆணைக்குழுவால் வழங்கப்படும் ரன்பிம உறுதிகளை வழங்குவதற்காக தேசிய மட்டத்தில் வைபவங்களை ஒழுங்கமைத்தல்.

x. சுதந்திர ஊழியர் சங்கம் மற்றும் நலனோம்பல் சங்கம் என்பவற்றுடன் இணைந்து கூட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

xi. சேவை பெறுநர்களின் உபசரணைகள் - பொது மக்கள் தினத்தை நடாத்திச் செல்லுதல்.

## 1. நிறுவனத்தின் அமைப்பான்மை கட்டமைப்பு மற்றும் பணிற்றொகுதியின் முகாமைத்துவம்

காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் அமைப்பான்மை கட்டமைப்பு, பணிற்றொகுதி மற்றும் பதவிகள் ஆகியன குறித்து அங்கீகாரம் பெறுவதற்காக நீண்டகாலமாக நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், இற்றைவரைக்கும் அதனை நடைமுறைப்படுத்துவதில் சிரமங்கள் உள்ளன.

மேற்படி பிரச்சினைகளுடன் கூடிய நிலைமை தொடர்பாக பல முறை முகாமைத்துவ சேவைகள் திணைக்களம், தேசிய சம்பள பணிற்றொகுதி ஆணைக்குழு மற்றும் சனாதிபதி செயலகம் ஆகியவற்றுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு தற்போதுள்ள நிலைமை தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டது.

தேசிய சம்பள மற்றும் பணிற்றொகுதி ஆணைக்குழுவுடன் நடாத்திய கலந்துரையாடல்களின் பின்னர் கிடைக்கப்பெற்ற ஆலோசனைகளுக்கமைவாக, பணிற்றொகுதியினரின் பொருட்டு அனுமதி பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் அனுமதியை பெற்றுக்கொள்ளும் படி அறிவிக்கப்பட்டிருந்தது. ஆகையால் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிற்றொகுதி மற்றும் அமைப்பாண்மை கட்டமைப்பு ஆகியவற்றுக்கான அனைத்து தகவல்களுடன் சனாதிபதி செயலகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது.

சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த பின்னர் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிற்றொகுதியை அங்கீகரித்துக்கொள்வதற்காக, ஏற்புடைய பதவி அட்டவணையின் பொருட்டு சனாதபதி செயலாளரின் RDID/2/2/1/2 மற்றும் 2010.11.30 ஆந் திகதியில் தேசிய சம்பள மற்றும் பணிற்றொகுதி ஆணைக்குழுவிடம் பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

## 11. ஆட்சேர்ப்புத் திட்டத்தை நாளதுவரைப்படுத்தல்

பணிற்றொகுதியை அங்கீகரித்துக்கொள்வதற்கு அனுமதி வழங்குதல் தொடர்பில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மற்றும் தேசிய சம்பள, பணிற்றொகுதி ஆணைக்குழுவுடன் கலந்துரையாடிய பின்னர், காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிற்றொகுதியை, முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 30 இன் பிரகாரம் மீள்கட்டமைப்பு செய்ய வேண்டுமென அறிவிக்கப்பட்டதால், சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் பரிந்துரைகளையும் சம்பள, பணிற்றொகுதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளையும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன் படி காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிற்றொகுதியை மீள்கட்டமைப்பு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. குறித்த மீள்கட்டமைப்பின் படி புதிய ஆட்சேர்ப்புத்திட்டத்தை தயாரித்து அதன் பிரகாரம், பணிற்றொகுதியை அங்கீகரித்துக்கொள்வதற்கு சமர்ப்பிக்கும் படி முகமைத்துவ திணைக்களத்தால் ஆலோசனை வழங்கப்பட்டது. அதன் படி புதிய ஆட்சேர்ப்புத்திட்டத்தின் வரையுள் பிரதியினை தேசிய சம்பள மற்றும் பணிற்றொகுதி ஆணைக்குழுவிடம் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆட்சேர்புத்திட்டமும் பணிற்றொகுதி தொடர்பான விடயங்களையும் ஆராய்ந்த பின்னர் பணிற்றொகுதியின் பொருட்டும் ஆட்சேர்புத்திட்டத்தின் பொருட்டும் அங்கீகாரம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக தேசிய சம்பள மற்றும் பணிற்றொகுதி ஆணைக்குழு மற்றும் முகாமைத்துவ திணைக்களம் ஆகியவற்றிலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது.

**iii பணிற்றொகுதியை மேம்படுத்தல்**

- ❈ பணிற்றொகுதியினரின் அறிவு, ஆற்றல் மற்றும் அனுபவம் என்பவற்றை மேம்படுத்தும் நோக்கத்தில் ஆங்கிலம், தமிழ் ஆகிய பாடநெறிகளை கற்பதற்காக 120 அலுவலர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது.

- ❈ சனாதிபதி செயலகம், தகவல் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் பட்ட நிலை பின் படிப்பு முகாமைத்துவ நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து ஒழுங்கமைக்கப்பட்ட இ-அரச கொள்கை தொடர்பாக, புதிய அலுவலர்களுக்கான டிப்ளோமா பாடநெறியில் பங்குபற்றுவதற்காக முகாமைத்துவ, மனிதவள பணிப்பாளருக்கு குறித்த நிறுவனத்தால் புலமைப்பரிசீல் வழங்கப்பட்டது.

- ❈ நிர்மாணிப்பு பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் மூலம் வழிநடாத்திய போக்குவரத்து முகாமைத்துவம் தொடர்பாக ஒரு நாள் பயிற்சி செயலமர்வுக்காக நான்கு அலுவலர்களையும், களஞ்சிய முகாமைத்துவம் மற்றும் வழங்கல் முகாமைத்துவம் தொடர்பான ஒரு நாள் பயிற்சி செயலமர்வுக்கு இரண்டு அலுவலர்களையும் பங்குபற்றச் செய்விக்கப்பட்டது.

- ❈ சேவைக்கு ஆட்சேர்ப்புச்செய்வதற்கு முன்னர் அலுவலக நடவடிக்கைகள் தொடர்பான அறிவை வழங்கும் பொருட்டு ஐந்து அலுவலர்களுக்காக இரண்டு வாரங்களிலான பயிற்சியை வழங்குதல்.

- ❈ கணினி பயன்பாடு தொடர்பான அறிவை மேம்படுத்துவதற்காக திறன் அபிவிருத்தி அமைச்சிடம் அடிப்படை கணினி பயிற்சி பாடநெறியை கற்பதற்காக இருபத்தைந்து அலுவலர்களை பங்குபற்றச்செய்விக்கப்பட்டது.

- ❈ உரிய முறைமையியலை கடைபிடித்து உள்ளக அலுவலர்களுக்கிடையில் ஆறு பதவிநிலை உதவி அலுவலர்களுக்கும், ஐந்து கணக்கு அலுவலர்களுக்கும் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன.

**iv. மாவட்ட அலுவலகங்களை முறைசார்ப்படுத்தல்**

- ❈ மாவட்ட அலுவலகங்களின் பணிகளை வினைத்திறனாகவும் விதிமுறையாகவும் பேணிச்செல்வதற்கு 5S எண்ணக்கருவை அறிமுகப்படுத்தப்பட்டதுடன், பெரும்பாலான மாவட்ட அலுவலகங்கள் தற்போது அப்பணிகளை ஆரம்பித்து நடைமுறைப்படுத்துகின்றன.

- ❈ அலுவலக பணிகளின் பொருட்டு இரண்டு கட்டங்களில் கணனிகள் மற்றும் பெக்ஸ் இயந்திரங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், அன்றாட

கடமைகளின் பொருட்டு தேவையான அலுவலக உபகரணங்கள் வழங்கப்படாத பல அலுவலகங்களுக்காக பல கட்டங்களின் கீழ் தேவையான அலுவலக உபகரணங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- ❋ மாவட்ட கடமைகளை துரிதப்படுத்தும் பொருட்டும் வருமான விருத்தியின் பொருட்டும் 14 நாள்கள் என்ற வகையில் கடமையின் பொருட்டு வாகன வசதிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- ❋ மாவட்டத்தின் கடமை பணிகளை துரிதப்படுத்துவதற்காகவும் வருமானத்தை விருத்தி செய்வதற்காகவும் கண்டி, குருணாகல், புத்தளம் ஆகிய மூன்று மாவட்ட அலுவலகங்களுக்கு நிரந்தர அடிப்படையில் கடமை பொருட்டான வாகன வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதனை இலக்காகக்கொள்ளப்பட்டுள்ளதுடன், வாகனத்திற்கான மாதாந்த குத்தகை பணத்தை சம்பந்தப்பட்ட மாவட்ட அலுவலகங்களுக்கு வழங்க வேண்டியுள்ளது.

- ❋ மாவட்ட ரீதியாக நடாத்தப்பட்ட நடமாடும் சேவைகளுக்கு தலைவர்/நிறைவேற்று பணிப்பாளர் அனுமதிக்கமைவாக பங்குகொள்ளுதல்.

**எ வருடாந்த இடமாற்றங்களை நடைமுறைப்படுத்தல்**

காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு ஏற்புடையதாக தயாரிக்கப்பட்டுள்ள இடமாற்றத் திட்டத்தின் படி 2011 ஆம் ஆண்டின் இடமாற்றம் பெறவுள்ள அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு தகுந்த இடமாற்றச் சபையொன்றின் மூலம் இயன்ற வரை நியாயமான முறையிலும் வெளிப்படைத்தன்மையுடனும் இடமாற்றம் வழங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது

**vi. முறையான பதவி உயர்வு முறையொன்றை ஏற்படுத்துதல்**

ஆணைக்குழுவின் பணிற்றொகுதி தொடர்பாக கவனத்தில் கொள்ளும் போது அனைத்து பணிகளிலும் முறையான விருத்தி ஏற்பட்டுள்ளது. விசேடமாக பணிற்றொகுதியின் உளப்பாங்கு விருத்தி, முறையான வேலை கற்கை, நவீன முறைமையியல் மற்றும் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் தேவை ஆகியவற்றை இனம்காணப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் புதிய ஆட்சேர்ப்புத்திட்டம் மற்றும் பணிற்றொகுதி தொடர்பில் அனுமதி கிடைக்கப்பட்டதன் பின்னர் முறையான முறைமையியலை கடைபிடித்து தகைமைகளை பூர்த்தி செய்துள்ள அலுவலர்களை உரிய தரங்களில் உள்ளீர்ப்பு செய்வதற்கோ அல்லது பதவி உயர்வுகளை வழங்குவதற்கோ உத்தேசிக்கப்பட்டுள்ளது. புதிய ஆட்சேர்ப்புத்திட்டம் மற்றும் பணிற்றொகுதி தொடர்பாக அனுமதியை பெற்றுக்கொண்டதன் பின்னர் தற்போது

வெற்றிடமாக உள்ள பதவிகளின் பொருட்டு உத்தேச புதிய சம்பளத்தின் படி பொருத்தமான அலுவலர்களை ஆட்சேர்ப்புச்செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**vii. அலுவலகத் தேவைகளை பூர்த்தி செய்தல்**

- ❋ உரிய செயற்றிட்டத்தை கடைபிடித்து அலுவலகத்தில் அன்றாட கடமைகளை வினைத்திறனாக நிறைவேற்றும் பொருட்டு புதிய 03 கெப் வண்டிகளை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
- ❋ அலுவலகத்திற்காக புதிய கொள்ளலவில் டிஜிற்றல் வகையிலான நிழற்பட இயந்திரங்கள் இரண்டினை கொள்வனவு செய்தல்.
- ❋ நீண்ட காலமாக ஆவணவாக்கல் கூடத்தில் வைக்கப்பட்டிருந்த கடிதகோவைகளை முறையாக நாளதுவரைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேற்படி பிரதான கடமைகளுக்கு மேலதிகமாக ஆட்சேர்ப்புச்செய்தல், இடமாற்றங்கள் மற்றும் சம்பளவேற்றங்களை வழங்குதல் போன்ற அன்றாட பணிகளை மேற்கொண்டதுடன் 2011 ஆம் ஆண்டு பெப்ரவரி 04 ஆந் திகதி புத்தலையில் நடைபெற்ற தெயட்ட கிருள தேசிய அபிவிருத்தி கண்காட்சியின் பொருட்டு வெற்றிகரமான கண்காட்சி கூடத்தை பேணிச்செல்வதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

**viii பிரதான அலுவலக கட்டிடத்தை பேணிச்செல்லுதல்**

1972 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைமை அலுவலகம் இது வரை ஹெக்டர் கொப்பாகடுவ மாவத்தை, கொழும்பு 7 இல் அமைந்துள்ள அரசாங்க நிர்வாக அமைச்சிற்கு சொந்தமான சீ.81, மற்றும் சீ.82 இலக்கங்களை கொண்டுள்ள கட்டிடங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடத்திற்கான வாடகை தொகை அதிகரிப்பதன் காரணமாக, அது தொடர்பாக அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளருடன் பல கலந்துரையாடல் சுற்றுகளை நடாத்தப்பட்டது. அதன் போது இக்கட்டிடத்தை காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடம் கையேற்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் படி கூறப்பட்டது. அவ்வாறு கிடைக்கப்பெற்ற ஆலோசனைக்கமைவாக சனாதிபதி அலுவலகத்தை அறிவுறுத்திய பின்னர் அதற்கு ஏற்புடையதாக அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றை தயாரிப்பதற்கு தேவையான அடிப்படை நடவடிக்கைகள் தயாரிக்கப்பட்டன.

**ix காணி இல்லாத குடும்பங்களுக்கு தேசிய மட்டத்தில் ரன்பிம உறுதி வழங்கும் வைபவங்களை ஒழுங்கமைத்தல்.**

நாட்டின் அனைத்து மாவட்டங்களும் உள்ளடங்கும் வண்ணம் காணி இல்லாத குடும்பங்களுக்காக காணி உறுதி வழங்கும் ரன்பிம உறுதி வைபவம் 2011 ஏப்பிரல் மாதம் 03 ஆந் திகதியிலும், திசெம்பர் மாதம் 01 ஆந் திகதியிலும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமைத்துவத்திலும் அழைக்கப்பட்ட அதிதிகளின் பங்களிப்புடனும் அலரி மாளிகையில் மேற்கொள்ளப்பட்டது.

**x. சுதந்திர ஊழியர் சங்கம் மற்றும் நலனோம்பல் சங்கம் என்பவற்றுடன் இணைந்து கூட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.**

- சனவரி மாதம் 01 ஆந் திகதி பணிற்றொகுதியின் பங்களிப்புடன் புதிய ஆண்டை கொண்டாடுவதற்காக சிறிய வைபவமொன்றை ஒழுங்கமைத்தல்.
- மார்ச் மாதம் 17 ஆந் திகதி கௌரவ சனாதிபதியின் செயலாளரது தலைமைத்துவத்திலும் அழைக்கப்பட்ட அதிதிகளின் பங்களிப்புடனும் ரன்பிம உறுதி வைபத்தை ஒழுங்கமைத்தல்.
- சிங்களம் மற்றும் தமிழ் புத்தாண்டை முன்னிட்டு ஏப்பிரல் 18 ஆந் திகதி பணிற்றொகுதியின் பங்களிப்புடன் புத்தாண்டு வைபவத்தை நடாத்துதல்.
- பிரதான அலுவலகத்திற்காக சிற்றுண்டிச்சாலையை திறந்து வைத்தல்.
- காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் ஸ்தாபகர் காலஞ்சென்ற கௌரவ ஹெக்டர் கொப்பாகடுவ அவர்களின் 28 ஆவது நினைவு நாளுக்காக தானம் வழங்கும் வைபவம் பணிற்றொகுதியின் பங்களிப்புடன் ஒக்டோபர் மாதம் 26, 27, 28 ஆகிய திகதிகளில் யாழ்ப்பாணம் நாக விகாரையில் சங்கத தானமும் சிறுவர் இல்லத்திற்காக மதிய உணவும் வழங்கப்பட்டது.
- இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் கௌரவ பிரதமர் தி.மு.ஜயரத்ன அவர்களின் தலைமைத்துவத்திலும் அழைக்கப்பட்ட அதிதிகளின் பங்களிப்புடனும் ரன்பிம உறுதி வழங்கும் வைபவம் செப்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி பிரதான அலுவலகத்தில் நடாத்தப்பட்டது.
- பணிற்றொகுதியின் குழு உணர்வை விருத்தி செய்வதற்காக அனைத்து மாவட்ட அலுவலகங்கள் மற்றும் பிரதான அலுவலகம் ஆகியவற்றுடன் இணைந்து யாழ்ப்பாணம் மற்றும் அநுராதபுரம் ஆகிய இடங்களில் சுற்றுலா பயனமொன்றை ஒழுங்கமைக்கப்பட்டது.

- ❋ அதே போன்று பணிற்றொகுதியின் ஒற்றுமை உணர்வை விருத்தி செய்வதற்காக திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி தெகிவளை விடுமுறை விடுதயில் விளையாட்டு வைபவமொன்றும் பணிற்றொகுதிக்காக மதிய நேர உணவும் வழங்குவதற்கு ஒழுங்கமைக்கப்பட்டது.

- ❋ நலனோம்பல் சங்கத்துடன் இணைந்து பணிற்றொகுதிக்காக சலுகை முறையில் செலுத்தும் அடிப்படையில் வியாபார நிலையங்களுடன் இணைந்து உடுதுணிகள் மற்றும் இரத்திரனியல் பொருட்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டமும், பணிற்றொகுதியின் தேவைக்கேற்ப க்லியர் வி'ன் நிறுவனத்துடன் இணைந்து சலுகை முறையில் செலுத்தும் அடிப்படையில் மூக்குக்கண்ணாடிகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டமும் ஒழுங்கமைக்கப்பட்டது.

**xi. சேவை பெறுநர்களின் உபசரணைகள் - பொது மக்கள் தினத்தை நடாத்திச் செல்லுதல்.**

சேவைப்பெறுநர்களின் முறைப்பாடுகளுக்கு சலுகை வழங்கும் முறைமையியல்

காணி பிரச்சினைகளை தீர்த்து வைத்தல், பிரச்சினைகளை இனம்காணுதல், கலந்துரையாடல்களை மேற்கொள்ளுதல், முறைப்பாடுகளை புலனாய்வு செய்தல் என்பவற்றுக்காக பிரதான அலுவலகத்தின் ஒவ்வொரு புதன் கிழமையும் மு.ப.9.00 மணி தொடக்கம் பி.ப. 4.00 மணி வரை பொது மக்கள் தினம் நடாத்தப்படும். மொத்த நாடும் உள்ளடங்கும் வண்ணம் நாளொன்றுக்கு 200 -300 அளவிலான எண்ணிக்கையினர் சேவை பெறுநர்களாக பங்குகொள்வதுடன், தலைவர், நிறைவேற்றுப்பணிப்பாளர், உள்ளிட்ட பிரிவுகளுக்கு பொறுப்பான பணிப்பாளர்கள் ஆகியோரிடம் நேரடியாகவே தமது பிரச்சினைகளை சமர்ப்பித்து அதற்கான தீர்வுகளை பெற்றுக்கொள்வதற்காக வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட அலுவலகங்களில் பொது மக்கள் தினமாக வாரத்தின் திங்கள்கிழமை மற்றும் புதன் கிழமை என்று இரண்டு நாள்கள் நடாத்தப்படுகின்றன.

**மாவட்ட அலுவலகங்கள்**

2011 ஆம் ஆண்டு திசெம்பர் மாதமாகும் போது 19 மாவட்ட அலுவலகங்கள் ஆரம்பிக்கப்பட்டு நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதுடன், திருகோணமலை மாவட்ட செயலகம் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட செயலகம் ஆரம்பிக்கும் அடிப்படை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்ட செயலகத்தின் பணிற்றொகுதியின் அமைப்பு கீழே குறிப்பிட்டுள்ளவாறாகும்.

| மாவட்டம் பெயர் | கொழும்பு | களுத்துறை | கம்பகா | அம்பாந்தோட்டை | மாத்தறை | காலி | இரத்தினபுரி | கேகாலை | எம்பிலிபிட்டிய | மொணராகலை | அம்பாறை | மட்டகளப்பு | குருணாகல் | புத்தளம் | அநுராதபுரம் | நுவரெலியா | மாத்தளை | பதுளை | கண்டி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உ.பணிப்பாளர் | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | - | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 18 |
| பதவிநிலை உதவியாளர் | 01 | 01 | 01 | - | - | 01 | 01 | - | - | - | - | - | - | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 11 |
| எழுதுநர் | 04 | 04 | 05 | 03 | 06 | 06 | 07 | 06 | 07 | 05 | 01 | 01 | 06 | 02 | 02 | 02 | 05 | 03 | 09 | 84 |
| கணக்கு அலுவலர் | - | 01 | - | - | 01 | | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 02 |
| கணக்கு எழுதுநர் | - | - | - | - | - | 01 | - | - | - | - | - | - | - | - | - | 01 | - | 01 | - | 03 |
| கள அலுவலர் | 02 | 03 | 03 | 02 | 04 | 04 | 04 | 02 | 03 | 02 | 02 | - | 05 | 03 | 03 | 01 | 01 | 04 | 03 | 51 |
| தட்டெழுத்தாளர் | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 02 | 01 | 01 | 01 | 02 | 01 | 01 | - | 01 | 01 | 01 | 20 |
| அ.ப.சேவை | 01 | 02 | - | 01 | 01 | 01 | 01 | 01 | - | 01 | 01 | 01 | 02 | 01 | - | 01 | 01 | - | 01 | 17 |
| ப.அ | - | - | - | - | 02 | - | - | - | 02 | 01 | - | - | - | 01 | - | - | - | 01 | - | 07 |
| மொத்தம் | 10 | 13 | 11 | 08 | 16 | 15 | 15 | 11 | 14 | 11 | 06 | 04 | 16 | 10 | 08 | 07 | 10 | 12 | 16 | 213 |

மாவட்ட அலுவலகங்களின் கடமைப்பொறுப்புகள்

- களை நடவடிக்கைகளில் ஈடுபடுதல்
- காணி பகிர்ந்தளிப்பவர்களை தெரிவு செய்கின்ற விசாரணைகளில் பங்குபற்றுதல் மற்றும் அவர்களை அறிவுறுத்துதல்.
- அரசாங்கத்தின் தேவைக்காக நிறுவனங்களுக்கு மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு காணி வழங்கும் போது அவற்றில் தலையிடுதல்.
- பிரதான அலுவலகத்தின் அனுமதிக்கமைவாக பகிர்ந்தளிப்பதற்குள்ள காணிகளை அரசாங்க நிறுவனங்களிலிருந்து விடுவித்துக்கொள்ளும் நடைமுறையை செயற்படுத்தல்
- காணி பகிர்ந்தளிப்பவர்களுக்கு விண்ணப்பங்களை பகிர்ந்தளிப்பதற்காக ஏ/எல் படிவத்தை பரிசீலனை செய்து பார்த்து பரிந்துரை செய்தல்.
- தலைவர், நிறைவேற்றுப்பணிப்பாளர் ஆகியோரின் ஆலோசனைக்கமைவாக தேவையான சந்தர்ப்பங்களில் விசேட கள விசாரணைகளில் பங்குகொள்ளுதல்
- அலுவலகத்தில் புதன்.்.திங்கள் ஆகிய தினங்களில் பொது மக்கள் தினத்தை நடாத்துதல் மற்றும் அதற்கு ஏற்புடையதான கடமை அலுவல்களை நிறைவேற்றுதல்
- காணி பதிவேடு மற்றும் பணிற்றொகுதியின் கோவைகளை பேணிச்செல்லுதல்
- மாவட்டத்தில் காணி வழக்குகளுக்கு பணிப்பாளர்கள் செல்ல வேண்டிய சந்தர்ப்பங்களில் பங்குபற்றுதல்
- கொள்கைகள் மற்றும் முக்கியமான தீர்மானங்களின் பொருட்டு தலைவருக்கு அறிக்கையிடுதல்
- கடமை அலுவல்களின் பொருட்டு வருகை தரும் மக்களுக்காகவும் வெளிப்படுத்துநர்களுக்காகவும் தலைவரின் கண்காணிப்பின் கீழ் அவர்களிடமிருந்து தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு தேவையான ஆலோசனை வழங்குதல்.
- மாவட்ட அலுவலகத்தின் நிதிசார் நடவடிக்கைகளின் கண்காணிப்பு
- வருமானம் வசூலித்தல்
- கள அலுவலர்களின் கள நடவடிக்கைகளின் கண்காணிப்பு மற்றும் பயிற்றுவிப்பு

- வெளிப்படுத்தியுள்ள துறையில் இனம்காணப்படாத காணிகள் மற்றும் வெளிப்படுத்தாத 50 ஏக்கர்களுக்கு அதிகமான காணிகள் தொடர்பில் தகவல்களை கண்டறிதல்.
- ஆணைக்குழுவின் எதிர் கால நிலைப்பாட்டின் பொருட்டு வருமான நிலையை மேம்படுத்திக்கொள்வதற்கு பணியாற்றுதல்
- கள அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் விசாரணை அறிக்கைகள் தொடர்பில் தேவையான களங்களை பரிசீலனை செய்தல்.
- காணிப்பகிர்வாளர்களை அறிவுறுத்துதல் மற்றும் தெரிவு செய்தல் விசாரணைகளில் பங்குபற்றுதல்
- காணி நிருணயம் தொடர்பான விசாரணைகளை நடாத்துதல் மற்றும் உறுதி வழங்கும் வைபவங்களை ஒழுங்கமைக்கும் நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்

04. **கணினிப்பிரிவு**

**அமைப்பு**

| தொடர் இலக்கம் | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சுருக்கெழுத்தாளர் மற்றும் தட்டெழுத்தாளர் | 01 |
| 2 | எழுதுநர் | 02 |
| 3 | தட்டெழுத்தாளர் | 01 |
| மொத்தம் | | 04 |

05. **உள்ளக கணக்காய்வுப்பிரிவு**

**அமைப்பு**

| தொடர் இலக்கம் | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | உதவிப்பணிப்பாளர் | 01 |
| 2 | பதவிநிலை உதவியாளர் | 01 |
| 3 | எழுதுநர் | 03 |
| 4 | தட்டெழுத்தாளர் | 01 |
| மொத்தம் | | 06 |

காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் உள்ளக கணக்காய்வுப்பிரிவு, பதில் கடமையாற்றும் பணிப்பாளர் திரு. ரீ. நரேந்திரநாதன் அவர்களின் பூரண கண்காணிப்பின் கீழ் இயங்குகின்றது.

- அறிமுகம் மற்றும் பணிகள்

i. 1972 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க காணி சீர்திருத்த சட்டம் மற்றும் 1971 ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் படி தயாரிக்கப்பட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவில் நிதிக் கோவையின் பகுதி 11 பிரிவு 2 உப பிரிவு 01-03 இன் கீழ் கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம் கடமைகளை நிறைவேற்றுதல்.

ii. காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ள விவசாய காணிகளுக்கான நட்டஈடு மற்றும் வட்டி செலுத்தல் தொடர்பான முன் கணக்காய்வுகளை மேற்கொள்ளுதல்.

iii. உறுதிகளை தயாரிக்கும் போது அதற்கு ஏற்புடையதான கடித ஆவணங்கள், மதிப்பீட்டு அறிக்கைகளில் உள்ள பணத்தை அறவிடுதல், ஆள்களின் நிலைமை ஆகியவற்றின் செவ்வைத்தன்மையை பரிசீலனை செய்தல்.

iv. கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை பிரகாரம் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் இறுதி கணக்குகளில் குறிப்பிடுகின்ற குறைபாடுகளை குறைத்துக்கொண்டு எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உதவுதல்.

v. கணக்காய்வாளர் அதிபதியிடமிருந்து கிடைக்கப்பெறும் கணக்காய்வு உசாவுதல்களுக்கு ஏற்புடையதாக சம்பந்தப்பட்ட பிரிவுகளிடமிருந்து தகவல்களை கோருதல், அளவினை பரிசீலனை செய்தல் மற்றும் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் பிரகாரம் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

2011.01.01 ஆந் திகதி தொடக்கம் 2011.12.31 ஆந் திகதி வரை நிறைவேற்றியுள்ள பிரதான பணிகள்.

- 2011 ஆம் ஆண்டுக்காக ஆணைக்குழு மூலம் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்களை நடாத்துதல்.
- மாவட்ட செயலகங்களின் திடீர் முற்றுகையிடல் சிலவற்றை மேற்கொண்டதன் பின்னர் 04 அலுவலர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொண்டதன் மூலம் கடமைகள் தொடர்பாக சரியான முறைமையியலை ஏற்படுத்தப்பட்டது.
- நட்டஈடுகளின் பொருட்டு 12 கடிதக்கோவைகளை கணக்காய்விற்கு உட்படுத்தல்

- ❈ வட்டி செலுத்துவதற்காக 10 கடிதக்கோவைகளை கணக்காய்விற்கு உட்படுத்தல்

- ❈ 2010 ஆம் ஆண்டிற்கு ஏற்புடையதாக கணக்காய்வாளர் அதிபதி திணைக்களத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற 16 கணக்காய்வு உசாவுதல்களுக்கும் இறுதி கணக்காய்வாளர் அதிபதி அறிக்கைக்கும் பதில் அளித்தல்

- ❈ உறுதிகளை தயாரிப்பதற்காக ஏ.எல்.விண்ணப்பபடிவங்களை பரிசீலனை செய்தல்.

05. **காணிகளின் உச்ச எல்லைப்பிரிவு அமைப்பு.**

| தொடர் இலக்கம் | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பணிப்பாளர் | 01 |
| 2 | உதவிப்பணிப்பாளர் | 02 |
| 3 | பதவிநிலை உதவியாளர் | 02 |
| 4 | கையளிப்பு அடிப்படையில் | 01 |
| 5 | எழுதுநர் | 12 |
| 6 | தட்டெழுத்தாளர் | 01 |
| 7 | புத்தகம்கட்டுநர் | 01 |
| 8 | அலுவலக பணியாளர் சேவை | 01 |
| மொத்தம் | | 21 |

காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் காணி உச்ச எல்லைப்பிரிவில் பணிப்பாளராக திருமதி டபிள்யூ. எச்.எம். குசும் ஹேரத் அவர்கள் பணியாற்றுகின்றார்

i. உச்ச எல்லைக்கு கூடிய அதாவது 50 ஏக்கருக்கு அதிகமான விவசாய காணிகள் உரித்தாகியிருந்த நபர்களிடமிருந்து வெளிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல்.

ii. வெளிப்படுத்தல்களை சமர்ப்பித்த நபர்களிடமிருந்து அதாவது, வெளிப்படுத்துநர்களின் விருப்பம் படி அவர்களின் காணிகளில் 50 ஏக்கரை நியதிச்சட்ட தீர்மானத்தின் பிரகாரம் ஒதுக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடுதல்.

iii. வெளிப்படுத்துநர்களின் கோரிக்கை படி 1972.08.26 ஆந் திகதியில் 18 வயதை கடந்துள்ள அவரின் பிள்ளைகள் அல்லது பெற்றோர்கள் ஆகியோரில் ஒருவருக்கு 50 ஏக்கர் என்ற வரையறைக்கு அமைவாக காணி சீர்திருத்த சட்டத்தில் பிரிவு 14 இன் கீழ் காணிகளை வழங்குதல்.

iv. வெளிப்படுத்துநர்களின் வயது 1972.08.26 ஆந் திகதியில் 18 வயதுக்கு குறைவாக இருப்பினும், காணிகளின் உரித்து இருந்த பிள்ளைகளுக்கு வெளிப்படுத்துநரின் கோரிக்கை படி ஒருவருக்கு 50 ஏக்கர் என்ற உச்ச எல்லைக்கு அமைவாக சட்டத்தில் பிரிவு 22 ஈ இன் கீழ் காணித்துண்டுகளை வழங்குதல்.

v. மேற்படி சட்டத்துடனான பிணைப்புகளின் பொருட்டு காணிகளை வழங்கியதன் பின்னர், ஆணைக்குழுவிடம் கையளிக்கப்படும் காணிகளின் அளவு தொடர்பான தகவல்களை நட்டஈடு செலுத்துவதற்காக மதிப்பீட்டு மற்றும் நட்டஈட்டு பிரிவிடம் அனுப்பி வைத்தல்

2011.01.01 ஆந் திகதி தொடக்கம் 2011.12.31 ஆந் திகதி வரையில் முடிவுறுத்தப்பட்டுள்ள சட்டத்துடனான பிணைப்புகளின் எண்ணிக்கை.

| தொடர் இலக்கம் | விபரம் | நிறைவேற்றிய பணிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| i. | பிரிவு 19 இன் கீழ் நியதிச்சட்ட முறையிலான தீர்மானங்கள்- வர்த்தமானிகளை வெளியிடுதல் | 10 |
| ii. | நியதிச்சட்ட தீர்மானங்களின் பரிமாற்றங்களுக்காக பிரிவு 22(1) அ வின் கீழ் உறுதிகளை வரையுள்படுத்தல் | 20 |
| iii | நியதிச்சட்ட தீர்மானங்களின் பரிமாற்றங்களுக்காக பிரிவு 22(1) அ | 24 |
| iv | உறுதிகளை வழங்குதல் | 11 |
| v | i. பராயமடையாத பிள்ளைகளுக்கு பிரிவு 22(1) அ இன் கீழ் | 02 |
| vi | மாற்று காணிகளை வழங்குதல் | |
| vii | வெளியிடப்படாத காணித்துண்டுகளை விடுவித்தல் | 02 |

| | | |
|---|---|---|
| viii | விகாரை தேவாலயங்களுக்கான காணிகளை விடுவித்தல் | 02 |

காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பாகவும், ஆணைக்குழுவால் விடுவிக்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பாகவும் ஆணைக்குழுவிடம் தற்போதுள்ள காணிகள் தொடர்பான பதிவேடுகள் இருப்பினும், இறுதியானதும் செவ்வையானதுமான பதிவேடு இல்லாமை, நிறுவனம் நீண்ட காலமாக எதிர் நோக்கியுள்ள பிரச்சினையாகும்.

குறித்த நீண்ட கால பிரச்சினையை தீர்த்துக்கொள்ளும் நோக்கத்துடன், நியதிச்சட்ட வெளியிடுகளின் மூலம் இது வரை நியதிச்சட்ட பிணைப்புகளின் பொருட்டு வழங்க முடியாது போன காணிகளின் அளவுகளை, உறுதியாக கணக்கிடுவதற்கும், ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டள்ள அனைத்து காணிகளின் பயன்கொள்ளல் மற்றும் உரிமை ஆணைக்குழுவிற்கு உரித்தாகியுள்ளது என்பதை உறுதிப்படுத்திக்கொள்வதற்கும் அனுபவமுள்ள அலுவலர்களின் சேவையை பெற்றுக்கொண்டதன் பின்னர் நிறைவேற்றிக்கொள்வதற்கு உரியதாக இருந்த பணிகளில் 80% ஐ நிறைவெற்றிக்கொள்வதற்கு முடிந்துள்ளது.

| தொடர் இலக்கம் | கடிதக் கோவை இலக்கம் | கையளிக்கப்படுபவரின் பெயர் | காணியின் பெயர் | அளவைப்பட இலக்கம் | துண்டு இலக்கம் | வழங்கியுள்ள பிரிவு | உறுதி இலக்கம் | அளவு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | ஏக் | ரூட் | பேர்ச் |
| 01. | கொ/3217 | லக்மிணி ரமணி ஹெலேனா விஜேசுந்தர | கொடவெலகும்புர | 1675 | 03 | 22(1)இ | 3379 | 02 | 0 | 00 |
| 02 | கா/118 | | கலஹுவத்தை | 568 | 01 | 22(1) ஆ | | 10 | 0 | 00 |
| 03. | கொ /1551 | சுனில் அபேவர்தன | சென்பிரிஜட் வத்தை | 197/2011 | 01 | 22(1) அ | 2662 | 01 | 3 | 38 |
| 04. | கொ | சுனில் அபேவர்தன | நாகலந்த வத்தை | 2010/20 | 01 | 22(1) அ | 2303 | 00 | 2 | 30 |
| 05 | கொ | சுனில் அபேவர்தன | கீனகலைவத்தை | 9991 | 01 | 22(1) அ | – | 00 | 2 | 30 |
| 06 | கொ /1591 | வரையறுக்கப்பட்ட லெவன்ட் தோட்ட கம்பனி | மீகொடவத்தை | 6892 | 01–11 வரை | 22(1) அ | – | 50 | 0 | 00 |
| 07. | கொ /1168 | தம்மிக்க ஜயநாத் அமரதுங்க | வல்பொத்தலை வத்தை | 453/94<br>454/94<br>298/94 | 01 – 04 வரை | 22(1) இ | 2649 | 03<br>04<br>07 | 2<br>2<br>3 | 01.18<br>30.6<br>29.0 |
| 08. | 6/1 வலவே கெபொக் மொரஹுல | திருமதி விஷாக்கா எல்லாவலை | வர்ணகலவத்தை | 1144 | 01 | 22(1) அ | – | 10 | 2 | 03 |
| 09 | கொ | திருமதி | கிரிமெட்டியவத்தை | 3877 | 01 | 22(1) அ | | 06 | 1 | 16 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | சீ.ஏ.எல்லாவளை. | | | | | | | | |
| 10. | கண்/259 | திரு. கெம்முனு ஜயசிங்க திருமதி சமந்த அமரசிங்க (வெளிப்படுத்தாத) . | வுட்லண்ட் வத்தை குருணாகல் | 6697 | 409 A | 22(1) அ | 2289 | 31<br>16 | 1<br>0 | 22<br>00 |
| 11. | கண்டி /303 | பீ.எச்.லலித் குணசேன , பீ.எச் காமிணி குணசேன பீ.எச்.இந்திராணி குணசேன (பராயமடையாத) | கிரின்வுட்வத்தை | 195/2010 | 1 A<br>2 A<br>3 A | 22(1) அ | | 10<br>10<br>10 | 1<br>1<br>1 | 32<br>32<br>32 |
| 12. | கண்டி /613<br>கண்டி /614<br>கண்டி /615<br>கண்டி /616<br>கண்டி /617<br>கண்டி /618<br>கண்டி /619<br>கண்டி /620 | பீ.எச்.சுகததாஸ<br>எச்.சுகததாஸ<br>பீ.எச். குணசேன<br>அட்லின் பிட்டகொட்டுவகே<br>பீ.எச்.என் ஜயவர்தன<br>பீ.எச்.டி.பீ. குணசேன<br>பீ.எச்.பத்மதிலக்க<br>பீ.எச்.எஸ்.குணசேன<br>பீ.எச்.திலகரத்ன | கிரின்வுட்வத்தை | 108/2011 | 4 A<br>5 A<br>6 A<br>7 A<br>8 A<br>9 A<br>10 A<br>11 A }<br>11 C | 22(1) அ | 2313 | 09<br>09<br>09<br>09<br>09<br>09<br>09<br>{ 07<br>01 | 3<br>3<br>3<br>3<br>3<br>3<br>3<br>3<br>3 | 06.0<br>06.0<br>06.0<br>06.0<br>06.0<br>06.0<br>06.0<br>28.8<br>17.2 |
| 13 | கண்டி /195 | காமினி கீர்த்தி ஜயசேன | வாரியபொல வத்தை, | 998 | – | 22(1) அ | | 13 | 0 | 00 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | அப்லன்ட் பகுதி | | | | | | | |
| 14. | கண்டி 479 | டப்ளியூ.எம்.எம்..எஸ் பி.பாலம்மகும்புர | லியன்கஹபெல | 51 | 01 | 14 ஆவது பிரிவு | | 25 | 0 | 00 |
| 15. | கண்டி /562 | நாகூர் மிஹிரா | கடியன்லென | 2714/84 | 06 | 3(2)ටජ | 2304 | 25 | 0 | 00 |
| 16. | கண்டி /352 | ஜீ.எஸ்.எம். ஹில்மி | வல்பொத்தலை வத்தை | 1698 | 01 | 22(1) அ | 9609 | 30 | 2 | 34 |
**2011 ஆண்டில் புலனாய்வுப்பிரிவின் முன்னேற்றம்**

| தொடர் இலக்கம் | காணியின் பெயர் | மாவட்டம் | பி.செ | கிராம அலுவலர் பிரிவு | புலனாய்வுக்கு ஏற்புடையதான விடயம் மரம்/கனிமம்/ அளவை | முறைப்பாடு | விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட திகதி | அவதானிப்புகளுக்காக தலைவர் அவர்களின் கட்டளை | புலனாய்வின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | தங்வத்தை உடுமுள்ள கலே | காலி | பெந்தொட்டை | 8/பி வலஹுங்துவ | காணி பிணக்குகள் | பல நிலப் பகுதிகளுக்கு அண்மித்து தண்ணீர் வடிந்து செல்கின்ற அகழி தொடர்பாக | 2011.01.31 | அகழியிலியில் தடையேற்படுவதனை தவிர்ப்பதற்காக சம்பந்தப்பட்ட தரப்பினர்களை அழைத்து கலந்துரையாடும் படி அறிவிக்கப்பட்டுள்ளது | அழைக்கப்பட்டு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| 02 | மஞ்ஞொக்காஹேன | காலி | வெலிபிட்டிய | 223/ஏ. வடக்கு கிழக்கு | வீதிகளின் பிணக்குகள் | | 2011.05.03 | மீண்டும் வீதியை அமைப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.. | காலி மாவட்ட பணிப்பாளரிடம் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 03 | கெசெல்கஸ்ஹேன | காலி | அக்மீமன | | காணி பிணக்குகள் | அனுமதியின்றி குடியிருந்த காணி கை விடப்பட்டிருந்ததுடன், மற்றுமொருவர் அதிகாரத்துடன் குடியிருத்தல். | 2011.03.29 | ஆணைக்குழுவிடம் சமர்ப்பிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | ஆணைக்குழு விடம் அனுப்பிவைப்பதற்கு பணி/காணி கைளிப்பு பிரிவிடம் அனுப்பி வைக்கப்பட்டு |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | ள்ளது. |
| 04 | லொக்கு அப்புகே தெனிய கும்புர | காலி | பத்தேகம | | வயல் காணி தொடர்பான பிணக்குகள் | | 2011.05.31 | | |
| 05 | உஸ்கொடவில சின்ன மரிக்கார்யு | காலி | போத்தர | மீபாவலை | வயல் காணி பிணக்குகள் | பங்கு விளைவுக் கமக்காரனிடம் வேறு தரப்புகளால் பொய்யான உறுதியை தயாரித்து உரிமையை வெளியிடுதல். | 2011.09.13 | பங்குவிளைவுக்கமக்காரன் யாரென்பதை கமநல சேவை அலுவலகத்திலிருந்து உசாவுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.. | காலி மாவட்ட பண, கமநல சேவைகள் அலுவலகத்திற்கு சென்று தனிப்பட்ட முறையில் உசாவும் படி அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 06 | அரம்பே வத்தை | கம்பகா | தொம்பே | பரகடுமுல்லை | கனியம் | உட்பிரவேச வழியின் பிணக்கு | | தலைவரிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | தலைவர் அவர்களால் அளவையிடல் பிரிவிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 07 | பிட்டலியத்த கும்புர | கம்பகா | மீரிகம | பல்லேவளை | காணிப்பகுதியில் | காணிப்பகுதியில் உரிமை தொடர்பான பிணக்கு | 2011.10.25 | தலைவருக்கு அனுப்பி வைத்தல். | |
| 08 | க்லோடன் வத்தை | களுத்துறை | தொடங்கொடை | வெல்லத்த | காணி பிணக்குகள் | ஆணைக்குழு விற்குரியதான காணியை அனுமதியின்றி விற்பனை செய்தல் | 2011.01.31 | விற்பனை செய்த நபரை அழைத்து கலந்துரையாடுதல் | வெளிப்படுத்தலை பெற்றுக்கொள்ளுதல் |
| 09 | ஹல்வத்துரை வத்தை ஏக்கர் 150 | களுத்துறை | புலத்சிங்கள | | காணி பிணக்குகள் | வீதி தொடர்பாக | | தரப்பினர்களுக்கு விடயங்களை தெளிவுபடுத்தி எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் | களுத்துறை மாவட்ட . பணிப்பாளரிடம் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 10 | சிதுரங்களைவத்தை | களுத்துறை | மில்லனிய | | காணி பிணக்குகள் | இரண்டு தரப்பினர்களுக்கிடையில் காணி பகுதியின் பணக்கு | 2011.05.08 | முடிவுக்கு வரப்பட்டுள்ளது. | முடிவை நடைமுறைப்படுத்தப்பட்டது. |
| 11 | மீகஸ்தென்னை வத்தை | குருணாகல் | ரிதிகம | | காணி பிணக்குகள் | ஆரம்ப உரிமையாளரால் காணியின் ஒரு பகுதியினை வேறொருவருக் | 2011.01.24 | கொள்வனவு செய்யப்பட்ட அளவை கொள்வனவு செய்பவரிடம் வழங்கி மீதியை உரிமையாளரிடம் | எதிர் கால நடவடிக்கைகளின் பொருட்டு காணி கையளிப்பிடம் |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | கு விற்பனை செய்துள்ளது டன், அவரால், ஆரம்ப உரிமையாள ருக்குரிய முழு பகுதியையும் பயன்கொள்ள ல் | | கையளித்தல்.. | சமர்ப்பித்தல். |
| 12 | யக்கலைவத்தை த | கேகாலை | யட்டியன்தோ ட்டை | கொனகமுவ | மரங்கள் தொடர்பாக | ஏலவிற்பனை யிலிருந்து பெற்றுக்கொள் ளப்பட்ட மரங்களை அதிக அளவில் வெட்டி விற்பனை செய்தல் | 2011.06.02 | அனுமதியின்றி மரங்கள் வெட்டுவதை தவிர்ப்பதற்காக பாதுகாப்பு செயலாளரால் கடிதமொன்று வழங்குதல் | தலைவர் அவர்களிடம் ஆலோசனை கோரி அறிக்கை சமர்ப்பிக்கப்பட் டுள்ளது.. |
| 13 | லஸ்ஸனமகாெ ஹன | கேகாலை | தெஹிஓவிட் ட | கஹனாவிட்ட | வீதி காணிகளின் பிணக்குகள் | உட்பிரவேச வழி தொடர்பாக | 2011.12.22 | தெஹிஓவிட்ட பி.செ. பரிந்துரை பிரகாரம் உட்பிரவேச வழியை ஒதுக்குதல் | வீதியை ஒதுக்குதல் |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14 | சம்பத்வத்தை | புத்தளம் | பல்லம | தம்மன | அளவையிடல் | முறைப்பாடு-காணி வழங்கும் போது பணம் பெற்றுக்கொள்வதாக அனுப்பிய அநாமதேய கடிதம் | | தலைவர் அவர்களிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.. | - |
| 15 | சிதுரங்கலவத்தை | களுத்துறை | மில்லனிய | வெலிகுல | காணி | காணி கச்சேரியால் வழங்கியுள்ள காணியில் அனுமதியின்றி உட்பிரவேசித்தல் | 2011.05.04 | அவதானிப்புகளின் பொருட்டு தலைவர் அவர்களிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | ஆணைக்குழுவிடம் அனுப்பி வைப்பதற்காக பணிப்பாளர் காணி கையளித்தல் பிரிவிடம் அனுப்பி வைத்தல் |
| 16 | அளுகொல்ல, பத்தலஹேன | கம்பகா | திவுலபிட்டிய | அளுகொல்லை | காணி | காணி பகுதியினை கையளித்தல் தொடர்பில ஏற்பட்ட பிணக்கு | 2011.06.07 | தலைவர் அவர்களிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பணிப்பாளர் காணி கையளிப்பிடம் அனுப்பி வைத்தல் |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 17 | கலஹ தெல்தொட்டை | கண்டி | ஹேவாஅட்டை ட | | காணி | காணி வழங்கும் போது பணம் பெற்றுக்கொண்டதற்கான அநாமதேய கடிதம் | 2011.04.28 | தலைவர் அவர்களிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளத.. | - |
| 18 | தெத்து கஹ கிட்டியவத்தை | கண்டி | குண்டசாலை | | காணி | காணி வழங்கியவர்கள் பணத்திற்கு விற்பனை செய்தல் | 2011.05.07 | தலைவர் அவர்களிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.. | பணிப்பாளர், காணி கையளிப்பு பிரிவிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.. |
| 19 | கலஹா தெல்தோட்டை | கண்டி | ஹெவாஹட்டை | கலஹா | அளவையிடல் | அளவையிடும் போது உரிய வாறு செயற்படாமை | | | தலைவர் அவர்களிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.. |
| 20 | கிரின்பாத் வத்தை | கொழும்பு | திம்பிரிகஸ்யாய | நாராஹேன்பிட்ட | காணி | ஆணைக்குழுவிற்குரிய காணியா என்பது தொடர்பாக கணடறியும் விசாரணை | 201108.27 | | தலைவர் அவர்களிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| 21 | கொரட்டுவை | கேகாலை | யட்டியன்தோ | கொரட்டுவை | காணி | ஆணைக்குழுவிற்குரிய | 2011.07.21 | தலைவர் அவர்களிடம் | விசாரணை நடவடிக்கை |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வத்தை | | ட்டை | வத்தை | | காணிக்கு தனிப்பட்ட உரிமைகளை சமர்ப்பித்தல் | | அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.. | எதிர்காலத்திற்கு |
| **22** | யக்கலவத்தை | கேகாலை | யட்டியந்தோட்டை | | காணி | 15 ஏக்கர் வாடகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட காணியில் மரங்கள் வெட்டுவதை கண்டுபிடித்தல் | | நிறைவேற்றுப்பணிப்பாளரிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | வாடகை உறுதி வழங்கப்பட்டுள்ளது. |
| **23** | யாயின்னவத்தை | இரத்தினபுரி | கஹவத்தை | | காணி | பிரதேச செயலாளர் வழங்கிய காணியை முறையற்ற வகையில் விற்பனை செய்தல் | **2011.08.15** | தலைவர் மற்றும் நிறைவேற்றுப்பணிப்பாளர் ஆகியோரிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.. | ஆணைக்குழுவின் பத்திரமொன்றை சமர்ப்பிப்பதற்கு பணிப்பாளர், கையளிப்பிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.. |
| **24** | கொஸ்கொலை வத்தை | இரத்தினபுரி | கிரிஅல்லை | இடம்கொட | காணி | காணி பகுதியொன்றின் உரிமை தொடர்பான | **2011.03.31** | தலைவர் அவர்களிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ள | விசாரணை நடவடிக்கை எதிர் |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிரச்சினை | | து. | காலத்திற்கு |
| **25** | பெரடயிஸ்வத்தை (மெதகொடல்லை) | இரத்தினபுரி | குருவிட்ட | பானகம | காணி | காணி பகுதியொன்றின் உரிமை தொடர்பான பிரச்சினை | **2011.08.05** | தலைவர் அவர்களிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.. | விசாரணை நடவடிக்கை எதிர் காலத்திற்கு |
| **26** | வலவ்வத்தை | இரத்தினபுரி | நிவித்திகலை | | காணி பிணக்கு | காணி பகுதியொன்றை கையளித்தல் தொடர்பாகஏற்பட்ட பிணக்குகள் | | தலைவர் அவர்களிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.. | உறுதி வழங்கப்பட்டுள்ளது |
| **27** | வெல்பிட்டியவத்தை | குருணாகல் | கொபைகனை | லீ கொலவெவ | காணி பிணக்கு | 02 ஏக்கர் காணியை கையளித்தல் தொடர்பாக ஏற்பட்ட பிணக்கு | | தலைவர் அவர்களிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.. | கையளிப்பு இடைநிறுத்தப் பட்டுள்ளது.. |
| | | | | | | | | | |
| **28** | களுஅதுர வத்தை | இரத்தினபுரி | எஹலியகொடை | ஹேலாஹின்னை | காணி பணக்கு | காணி பகுதியொன்றின் உரிமை தொடர்பான பிரச்சினை | **2011.05.21** | நிறைவேற்றுப்பணிப்பாளரிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.. | எதிர் கால நடவடிக்கைகளின் பொருட்டு பணிப்பாளர், -கையளிப்பிடம் அனுப்பி வைக்கப்பட்டு |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | ள்ளது. |
| 29 | கோட்டே மூகலானை | இரத்தினபுரி | ஏஹலியகொடை | நெதுரன | காணியின் உரித்தை கண்டறிதல் | ஆணைக்குழவிற்கு உரியதான காணியா என்பது தொடர்பாக கண்டறிதல் | 2011.07.13 | நிறைவேற்றுப்பணிப்பாளரின் ஆலோசனைக்கமைவாக எதிர்கால நடவடிக்கைகளை மா.செயலாளரிடம் அனுப்பி வைத்தல் | - |
| 30 | மாணிக்கம் வத்தை | பதுளை | | | காணி பிணக்கு | காணியின் உரித்தை சீராக்கி கொள்ளுதல் | | ஏதிர் கால நடவடிக்கைகளுக்காக மாவட்ட செயலகத்திடம் அனுப்பி வைத்தல் | நிவாரண நடவடிக்கைகள் எதிர் காலத்திற்கு |
| 31 | தெமோதர வத்தை | பதுளை | எல்லை | | காணியின் உரித்தை கண்டறிதல் | ஒரே பகுதிக்கு இரண்டு பேர் உரிமை கோருதல் | 2011.04.06 | நிறைவெற்று பணிப்பாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | உறுதி வழங்கப்பட்டுள்ளது |
| 32 | சாந்த ஜோஜ்வத்தை | களுத்துறை | மத்துகம | | காணி பிணக்கு | மின்சார சபைக்கு வழங்கியுள்ள காணிப்பகுதியை வேறு நபர்களுக்கு வழங்குதல் | | தலைவர் அவர்களிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | விசாரணை நடவடிக்கை எதிர்காலத்திற்கு |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 33 | தளுக்கல கந்த வத்தை | காலி | திவிதுர | | காணி பிணக்கு | இரண்டு தரப்பினர்களிடையே காணி தொடர்பான பணக்கு | 2011.08.14 | | நிறைவேற்று பணிப்பாளர் அவர்களிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளத.. |
| 34 | நயெல்கந்த வத்தை | குருணாகல் | பன்னலை | | காணி பிணக்கு | அனுமதிப்பத்திரத்தின் பேரில் கிடைக்கப்பெற்ற காணி வேறு ஒருவருக்கு கையளித்தல் | 2011.07.05 | தலைவர் அவர்களிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| 35 | தொலஸ்வல வத்தை | இரத்தினபுரி | நிவித்திகலை | தொலஸ்வளை | காணியின் உரித்தை பெற்றுக்கொள்ளுதல் | தொலஸ்வெல சமுர்த்தி வங்கி காணியொன்றின் உரிமையை பெற்றுக்கொள்வதற்கு கோருதல் | | | பணிப்பாளர், கையளிப்பிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| 36 | கனேபல்லை வத்.தை. | கேகாலை | யட்டியன்தோட்டை | | அளவை | காணிகளை அளக்கும் போது துண்டு இலக்கம் மாற்றமடைதல் | | | தலைவர் அவர்களிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 37 | ஓமார ஓவிட்ட கும்புர | இரத்தினபுரி | பெல்மடுல்லை | பானகட | காணி பிணக்கு | ஆணைக்குழவிற்குரிய காணிக்கு தனிப்பட்ட உரித்து கூறுதல் | | | காணிக்கு உரியதான உறுதிகளை பெற்றுதருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 38 | கங்கரவலதுவ வத்தை. | காலி | பத்தேகம | கிம்பிஎல | விற்பனை செய்தல் தொடர்பான முறைப்பாடு | ஆணைக்குழவிற்குரியதான காணிகளை துண்டுபடுத்தி அனுமதியின்றி விறபனை செய்தல் | | விற்பனை செய்த நபர்களை அழைத்து கலந்துரையாடுதல் | விசாரனை நடவடிக்கைகள் எதிர்காலத்திற்கு |
| 39 | மாட்டுவாகல வத்தை | இரத்தினபுரி | கிரிஎல்லை | | எல்லை பிரச்சினை | அளவையிடும் போது உரிய வாறு செயற்படாமை | | தலைவர் அவர்களிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | தலைவர் அவர்கள் வழங்கிய ஆலோசனை பிரகாரம் எதிர் கால நடவடிக்கைகளின் பொருட்டு பணிப்பாளர் இரத்தினபுரியிடம் அனுப்பி வைக்கப்பட்டு |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | ள்ளது. |
| 40 | உன்னாவேலி வத்தை | புத்தளம் | | முந்தளம் | காணியின் உரிமையை கண்டறிதல் | பொய்யான உறுதிகளை தயரித்து காணிகளை பயன்கொள்ளுதல் மற்றும் அனுமதியின்றி விற்பனை செய்தல் | | பணிப்பாளர் புத்தளத்துடன் கள விசாரணை மேற்கொண்டு செயலாளர் அவர்களிடம் நிலைமை தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது . | விசாரணை நடவடிக்கைகள் எதிர் காலத்திற்கு |

13. நிதிப்பிரிவு

| தொடர் இலக்கம் | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கணக்காளர் | 01 |
| 2 | உதவிப்பணிப்பாளர் | 01 |
| 3 | பதவிநிலை உதவியாளர் | 01 |
| 4 | எழுதுநர் | 07 |
| 5 | கணக்கு அலுவலர் | 04 |
| 6 | தட்டெழுத்தாளர் | 01 |
| 7. | அலுவலக பணியாளர் சேவை | 01 |
| | மொத்தம் | 16 |

காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் நிதிப்பிரிவில் பதில் கடமையாற்றும் பணிப்பாளராக ஷியாமளி இரத்நாயக்கா அவர்கள் பணியாற்றுகின்றார்.

i. காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் சகல அலுவலர்களின் மாதாந்த சம்பளங்கள் மற்றும் படிகள் ஆகியவற்றை செலுத்தல்
ii. உத்தியோகத்தர்களுக்கு உரிய ஊழியர் சேம நல நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி ஆகியவற்றை உரிய திகதிகளில் வைப்புச்செய்தல்
iii. மாதாந்த கணக்கு அறிக்கைகளை தயாரித்து ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்தல்
iv. மாதாந்த வங்கி கணக்கிணக்கு கூற்றுகளை உரிய திகதியில் தயாரித்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் சமர்ப்பித்தல்
v. மாதாந்த மற்றும் வருடாந்த கணக்கு கூற்றுகளை கணக்காய்வாளர் அதிபதி மற்றும் அமைச்சிடம் அனுப்பி வைத்தல்
vi. காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடம் கிடைக்கப்பெறும் வருமானங்களை தேவையானவைகளுக்கு மட்டும் செலவிட்டு மீதியை பயனுள்ள முதலீடுகளில் ஈடுபடுத்தல்.

19 மாவட்ட செயலகங்களுள் நிதி கட்டுப்பாடு, கண்காணிப்பு, ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் இருப்பு புத்தகங்களை பேணிச்செல்லுதல்

2011 ஆம் ஆண்டில் இருப்புகளின் பெறுமதி ரூபா. 135821.80

2011 ஆம் ஆண்டு இறுதி கணக்கு அறிக்கைகளை தயாரித்த

பயிற்சி நடவடிக்கைகளுக்காக செலவிடப்படும் தொகை ரூபா.26600/=

இலங்கை வங்கி, பொதுதிறைசேரி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, போன்ற நிதி நிறுவனங்களுடன் கூட்டிணைத்தல்

கொள்வனவு நடவடிக்கைகள்

**14. வருமானப்பிரிவு**

அமைப்பு

| தொடர் இலக்கம் | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பணிப்பாளர் | 01 |
| 2 | உதவிப்பணிப்பாளர் | 01 |
| 3 | பதவிநிலை உதவியாளர் | 01 |
| 4 | எழுதுநர் | 04 |
| 5 | தட்டெழுத்தாளர் | 01 |
| 6. | அலுவலக பணியாளர் சேவை | 01 |
| | மொத்தம் | 09 |

காணி சீர்திருத்த ஆணைக்குழவின் வருமானப்பிரிவின் பணிப்பாளராக திரு. எல் பத்மசிறி அவர்கள் பணியாற்றுகின்றார்.

i. காணிகளை வாடகைக்குவிடுதல், விற்பனைகள் மூலம் கிடைக்கப்பெறும் வருமானங்களை திரட்டுதல், நிலுவை குத்தகையை அறவிடுதல் ஆகியவற்றுக்கு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

ii. கனிமவளங்கள் மற்றும் வேறு வருமான வழிகளிலிருந்து கிடைக்கப்பெறும் வருமானத்தை திரட்டுதல்

iii. காணி கையேற்பு விசாரணைகளில் பங்குபற்றுதல் மற்றும் அதில் கிடைக்கப்பெறும் வருமானத்தை திரட்டுதல்

iv. கண்டறியாதுள்ள காணிகளை கண்டறிந்ததன் பின்னர் அதில் கிடைக்கப்பெறும் வருமானங்களை திரட்டுதல்

| விபரம் | 2010 ஆம் ஆண்டு (ரூபா) | 2011.12.31 அந் திகதியில் (ரூபா) |
|---|---|---|
| காணிகளை வாடகைக்குவிடல் | ரூபா. 35563716.00 | ரூபா. 60601931.00 |
| இரத்தினக்கல் காணிகளை வாடகைக்குவிடல் | ரூபா. 2752313.00 | ரூபா. 3410005.00 |
| காணி விற்பனை மற்றும் சுவீகரிப்பு நட்டஈடுகள் | ரூபா. 563515.06 | ரூபா. 53990588.00 |
| பிற வருமானங்கள் | ரூபா. 21326325.00 | ரூபா. 21268449.00 |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனது இல. } எல்பீ/ஏ/எல்ஆர்சீ/எப்ஏ/2011/04 ඔබේ අංකය / உமது இல / Your No. } දිනය / திகதி / Date } 2012 நவம்பர் 08

தலைவர்,
காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு

**காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று வருமானக்கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள், ஏனைய விளக்கத் தகவல்கள் என்பவற்றின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு அதிகாரச்சட்டத்தின் 56 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை 2012 யூலை17 ஆந் திகதியன்று ஆணைக்குழுவின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone } 2887028 -34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. } 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. } oaggov@sltnet.lk

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வினை மேற்கொள்வதன் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். எனினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2.1, 2.2.3, 2.2.6 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று என்பவற்றை தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிர்ணயிக்க முடியாதுள்ளேன்.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2.1, 2.2.3, 2.2.6 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்க முடியாதுள்ளேன்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 03

---

ஐந்தொகை திகதியிலிருந்து 12 மாதங்களுக்கு மேற்பட்ட காலத்தில் தீர்த்துவைக்கப்படக்கூடியதாகக் காணப்பட்டதும் 12 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக பிற்போடக்கூடியதாகக் காணப்பட்டதுமான பொறுப்புக்கள் நடைமுறையற்ற பொறுப்புக்களாக வகைப்படுத்தப்படவேண்டிய போதிலும் ஆணைக்குழுவினால் ரூபா 33,353,350 தொகையான ஊழியர் பணிக்கொடைக்கான ஏற்பாடு நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 18

---

சொத்து ஒன்றாக இனங்காணப்பட்டதன் பின்னர் ஆதனம், பொறி, உபகரணம் ஆகியவற்றின் நியாயமான பெறுமதியினை நம்பகத்தரமான வகையில் அளவிடக்கூடியதாக இருந்தால் அதன் பெறுமதியினை மீள்மதிப்பு பெறுமதியில் சமர்ப்பிக்கப்படவேண்டிய போதிலும் ஆணைக்குழுவினால் ஆதனம், பொறி, உபகரணம் என்பவற்றின் 06 விடயங்களுக்குரிய ரூபா 38,448,537 பெறுமதிக்காக மீள்மதிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 36

---

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு சபைக்கு எதிராகவும் சபையினாலும் பல்வேறு காரணங்களுக்காக 639 நீதிமன்ற வழக்குகள் தொடுக்கப்பட்டிருந்ததுடன் அதில் தீர்ப்பு வழங்கப்படாத 583 வழக்குகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 40

---

ஆணைக்குழுவினால் சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகள் கணக்கீட்டு நியமம் 40 இன் பிரகாரம் முதலீட்டு ஆதனமாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆணைக்குழுவின் 546,141 ஏக்கர்களின் பெறுமதி ரூபா 676,169,345 ஆகக் காட்டப்பட்டிருந்த போதிலும் இக்காணிகள் தொடர்பான விபரமான பட்டோலை அல்லது காணிப் பதிவேடு ஆணைக்குழுவிடம்

இருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக 2006 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை ரூபா 642,977,590 தொகையான காணிகளின் விற்பனை வருமானத்திற்குரிய கிரயம் சம்பந்தமாக கணக்குகளில் செம்மையாக்கம் செய்யப்பட்டிருக்காததுடன் அதற்குரிய காணிகளின் அளவு தொடர்பான தகவல்கள் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கிணங்க நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள காணிகளின் பெறுமதியின் சரியான தன்மையினை கணக்காய்வின் போது உறுதிப்படுத்திக் கொள்ளமுடியாதிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவின் வருமானம் மற்றும் செலவுகளை கணக்குவைக்கும் போது காசு அடிப்படை மற்றும் அட்டுறு அடிப்படை ஆகிய இரண்டு முறைகளும் பின்பற்றப்பட்டிருந்தமை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2010 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களில் குறிப்புக்கள் இலக்கம் 1.1 இல் நில அளவை கட்டண வருமானம் தனியான விடயமாகக் காட்டப்பட்டிருந்தும் 2011 ஆம் ஆண்டின் போது அதனை ஆணைக்குழு கட்டணங்களுடன் சேர்த்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) ஆணைக்குழுவின் காணி விற்பனை வருமானத்திலிருந்து 60% இனை செற்பாட்டுச் செலவுகளாகவும் 40% இனை ஒதுக்கமாகவும் ஒதுக்கிவைக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் காணி விற்பனை வருமானத்திலிருந்து அரசாங்கத்திற்கு எந்த பங்களிப்பும் இல்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் பின்வருமாறு பொழிப்பாக்கப்பட்டுள்ளது.

| விபரம் | | பெறுமதி | நிதிக்கூற்றுக்களுக்கான தாக்கம் |
|---|---|---|---|
| (அ) | திறைசேரி உண்டில் இலக்கம் 101742 | 574,781 | ஐந்தொகைத் திகதியில் உண்டியல்களின் பெறுமதி குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. |
| | | 1,583,167 | மீளாய்வாண்டிற்கான திறைசேரி உண்டியல் வட்டி வருமானம் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. |
| | | 1,577,255 | முதலீட்டுச் சந்தர்ப்பத்தில் கிடைத்திருந்தும் கிடைக்க வேண்டிய வட்டி வருமானமாகக் காட்டப்பட்டிருந்தது. |
| (ஆ) | நிலையான வைப்புக்கள் இலக்கம் 219702 | 3,197,828 | ஐந்தொகைத் திகதியில் வைப்பு பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. |
| | | 1,220,674 | நிலையான வைப்புக்களின் வட்டி வருமானம் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. |
| | | 804,020 | பெறவேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. |
| | | 2,458,226 | எதிர்காலத்திற்காக பெறவேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. |
| | | 122,055 | பிடித்துவைத்தல் வரிப் பெறுமதி அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. |
| (இ) | பணிக்கொடைக்கான ஏற்பாடு | 385,987 | நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. |
| (ஈ) | வீட்டு வாடகைச் செலவு | 1,245,810 | நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. |

(உ) காணியினை ஒப்படைக்கும் போது உரிமை கொள்ளவேண்டிய ஆகக் குறைந்த காணிகளின் உரிமை கொள்ளப்படாததன் காரணமாக ஆணைக்குழுவிற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்ட வழக்கில் முறைப்பாட்டாளருக்கு 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 148,715,363 தொகையினைச் செலுத்துவதற்கு தீர்ப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டின்

இறுதியில் வட்டியும் சேர்க்கப்பட்டு செலுத்த வேண்டிய தொகை ரூபா 200 மில்லியனை மிகைத்திருந்தது.

### 2.2.4 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களையும் அதனுடன் தொடர்புபட்ட பட்டோலையினையும் பரிசோதனை செய்த போது ரூபா 180,012,834 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| கணக்கு விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி | பட்டோலையின் பிரகாரம் மீதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| பாடசாலைப் புத்தகங்கள் மற்றும் இடர் கடன் கணக்கு | 21,911,846 | 21,978,201 | 66,355 |
| மாவட்ட அலுவலக காணி விற்பனை வருமானம் | 6,077,443 | 5,765,012 | 312,431 |
| பெறவேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானக் கணக்கு | 11,663,944 | 11,615,533 | 48,411 |
| செலுத்தவேண்டிய குத்தகைக் கணக்கு | 1,221,688 | 1,363,490 | 141,802 |
| காணி விற்பனைப் பிரிவின் அறிக்கையின் பிரகாரம் காணி விற்பனை வருமானம் | 148,234,358 | 134,698,247 | 13,536,111 |
| காணி விற்பனைப் பதிவேட்டின் பிரகாரம் காணி விற்பனை வருமானம் | 148,234,358 | 67,634,310 | 80,600,048 |
| கட்டிட வாடகைக் கோவை | 13,483,422 | 40,872,000 | 27,388,578 |
| கடன்பட்டோர் மீதி | 15,552,254 | 5,223,000 | 10,329,254 |
| நிலுவைக் குத்தகைப் பணம் | 19,363,565 | 66,953,409 | 47,589,844 |
| மொத்தம் | | | 180,012,834 |

## 2.2.5 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவின் வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்து 9 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 2,153,918,749 தொகையான மீதியும் 12 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 2,921,575 தொகையான நானாவித கடன்பட்டோர் மீதிக்குமாக நீண்டகாலமாக ரூபா 8,270,356 தொகையான அசைவற்ற பெறுமதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் கடனை அறவீடு செய்வதற்காக 2011 ஆம் ஆண்டின் போதும் ஆணைக்குழு போதிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ஆணைக்குழுவின் 47 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 760,843 தொகையான கடன் தவணைப்பணம் 2010 ஆம் ஆண்டிலிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) காணிக் குத்தகை முற்பணக் கணக்கில் ரூபா 13,890,850 தொகையான மீதி காணப்பட்டதுடன் இந்த மீதியில் ரூபா 10,275,000 தொகை 7 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் ரூபா 990,850 தொகை 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்தன. இவ்வாறான காணிகள் தொடர்பாக குத்தகை உடன்படிக்கை வழங்கப்பட்டு குத்தகை வருமானத்தினை அதிகரிப்பதற்கு அல்லது முற்பணங்களைத் தீர்த்துவைத்து உரிய காணிகளை மீண்டும் ஒப்படைப்பதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பெறவேண்டிய வருமானக் கணக்கின் ரூபா 42,143,911 தொகையான ஆரம்ப மீதியில் ஆண்டின் போது கிடைக்கவேண்டிய நிலையான வைப்பு வட்டியின் பெறுமதியான ரூபா 12,412,301 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் அறவிடப்படாத ரூபா 29,731,610 பெறுமதி வருவிக்கப்பட்ட முறைமையினைக் காட்டும் எந்த தகவல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சுவீகரிப்பு இழப்பீட்டு தொங்கல் கணக்கு (I) மற்றும் (II) இல் ரூபா 241,247,176 மீதி ஒன்று காணப்பட்டதுடன் காணி மீட்டல் அதிகாரச்சட்டத்தின் 34(2), 35 ஆகிய பிரிவுகளின் பிரகாரம் காணிகளைச்

சுவீகரிக்கும் போது உரிய காணிகளின் உரித்தினைப் பொறுப்பேற்ற திகதியிலிருந்து சுவீகரிப்பு இழப்பீட்டினைச் செலுத்தும் வரை 10% ஆன வட்டி செலுத்தப்பட வேண்டிய போதிலும் ஆணைக்குழுவினால் அதற்காக வருடாந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் இழப்பீட்டு தொங்கல் (II) கணக்கின் மீதி தொடர்ச்சியாக பல ஆண்டுகளாக மாற்றமின்றிக் காணப்பட்டதுடன் அந்த மீதிகளைத் தீர்த்துவைப்பதற்காகவும் ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணி விற்பனை முற்பணங்களின் மீதி ரூபா 12,807,192 தொகையாக இருந்ததுடன் அதில் ரூபா 12,327,192 தொகை 434 நபர்கள் தொடர்பாக 3 ஆண்டுகளிலிருந்து 7 ஆண்டுகள் வரை பழைமை வாய்ந்ததாகும். எவ்வாறாயினும் ரூபா 12 மில்லியனுக்கு மேற்பட்ட மீதி தீர்த்துவைக்கப்படாது காணப்பட்டிருந்தும் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போதும் 18 தனிநபர்களிடமிருந்தும் காணிகளை வழங்குவதற்காக ரூபா 890,000 தொகை முற்பணங்களாகப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு முன்னால் காட்டப்பட்டுள்ள எழுத்துமூலச் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| கணக்கு விடயம் | மீதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் | | |
| I. காணி | 676,169,345 | காணி தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய பட்டோலை |
| II ஏனைய நிலையான சொத்துக்கள் | 55,510,447 | மெய்மையாய்வுச் சபை அறிக்கை |
| (ஆ) பெறவேண்டிய வருமானம் | 29,731,610 | மீதிகளை உறுதிப்படுத்தல், விபரமான பட்டோலை |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இழப்பீட்டுத் தொங்கல் கணக்கு | 241,247,176 | விபரமான பட்டோலை |
| (ஈ) | காணி விற்பனைகள் மற்றும் சுவீகரித்தல் வட்டி | 5,057,163 | மீதிகள் தயாரிக்கப்பட்ட முறைமையைக் காட்டும் விபரம் |
| (உ) | மரங்கள் விற்பனை | 5,025,512 | மரங்களை மதிப்பீடு செய்வதற்குரிய எழுத்துமூலச் சான்று |
| (ஊ) | பீபிள்ஸ் லீசிங் கம்பனியின் குத்தகைப் பெறுமதி | 5,104,152 | மீதிகளை உறுதிப்படுத்தல் |
| (எ) | காணிகளைச் சுவீகரித்தலும் வயல் காணிகளை விற்பனை செய்தலும் | 22,303,786 | விபரமான பட்டோலை |

## 2.2.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1975 இன் 39 ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 45(i)(ஆ)(iii) ஆம் பந்தி | ஆணைக்குழுவிற்கான விடயத்திற்குப் பொறுப்பான சனாதிபதி செயலகத்தினை பிரதிநிதித்துவம் செய்கின்ற அங்கத்தவர் ஒருவர் நியமிக்கப்படாதிருந்ததுடன் இன்னுமொரு அங்கத்தவர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது. |
| (ஆ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் | |
| i. II ஆவது பந்தி மற்றும் 2004 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய பீஈடீ 25(1) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம் | ஆணைக்குழுவிற்கு கிடைக்கின்ற மிகை நிதிகளை நிலையான வைப்புக் கணக்குகளில் முதலீடு செய்யும் போது உரிய பணம் உரிய நிதி ஆண்டின் ஆரம்பத்தின் போது நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் |

| | |
|---|---|
| | அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் ஆணைக்குழுவின் ரூபா 529,666,607 தொகை அவ்வப்போது முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| ii. 13 ஆவது பிரிவின் 8 ஆவது உப பிரிவு | நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பந்தியின் பிரகாரம் வழங்கப்பட்ட 2010 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையிலுள்ள விடயங்கள் தொடர்பாக ஆணைக்குழு எடுப்பதற்கு உத்திசித்துள்ள நடவடிக்கைகள் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்புதல் அதிகாரச்சட்டத்தின் 02(1)(ஈ) பந்தி | எத்தன்மையான சேவைகளை வழங்கும் தொழிலில் ஈடுபடுகின்ற எந்த நபரிடமிருந்தும் தேசத்தைக் கட்டியெழுப்புதல் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் வரி அறவிடப்பட வேண்டிய போதிலும் ஆணைக்குழுவினால் இந்த ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 1995 யூலை 12 ஆந் திகதிய SE1/A/4/34 ஆந் திகதிய சனாதிபதி செயலக சுற்றுநிருபம் | |
| I. சுற்றுநிருபத்தின் 8(அ) பந்தி | ஆணைக்குழுவிற்குச் சொந்தமான குத்தகைக் காணிகளின் குத்தகைகள் திருத்தம் செய்யப்பட வேண்டிய போதிலும் சபைக்குச் சொந்தமான பல காணிகளை 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| II. 8(ஆ) பந்தி | குத்தகைப் பணத்தினைச் செலுத்தத் தவறிய நிறுவனங்களின் குத்தகையினை முடிவுறுத்துவதற்கு ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| III 8(இ) பந்தி | உரிய பிரிவின் பிரகாரம் குத்தகை மதிப்பீட்டாளரின் உத்தரவின்றி உப குத்தகை வழங்கப்பட்டிருந்த காணிகளைப் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) தாபனவதிக் கோவையின் 9.1 ஆம் பிரிவு | உரிய ஏற்பாடுகளிற்கு முரணாக 60 வயதினைப் பூர்த்திசெய்த இரண்டு உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் 2011 ஏப்ரல் 29 ஆந் திகதிய 60 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று நிருபத்தின் பிரகாரம் மேல் மட்ட முகாமைத்துவ தரங்களுக்குரிய உத்தியோகத்தர்கள் ஓய்வுபெறும் போது ஏற்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பொருத்தமான அடுத்துவரும் திட்டத்தினைத் தயாரிப்பதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஊ) நிதிப்பிரமாணம் 502(2) | ஒவ்வொரு நிலையான சொத்து விடயத்திற்குமாக அதன் கிரயம், சுவீகரிக்கப்பட்ட திகதி, வருடாந்த பெறுமானத்தேய்வு, வருடாந்த பெறுமானத் தேய்வு விகிதம், அமைவிடம் என்பவற்றினை உள்ளடக்கிய நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட வேண்டிய போதிலும் நிலையான சொத்துக்கள் பதிவேடு முறைப்படியாகவும் நாளது வரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (எ) 2008 யூன் 27 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றுநிருபம் | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரமின்றி ஆட்சேர்ப்பு இடம்பெறக்கூடாது என தெரியப்படுத்தப்பட்டிருந்தும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குப் புறம்பாக நிறைவேற்றுப் பணிப்பாளர் உறுதி ஆலோசனை பதவிக்காக நபர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். |
| (ஏ) நிதி, திட்டமிடல் அமைச்சின் 2011 சனவரி 27 ஆந் திகதிய பீஈடீ 56 | உரிய சுற்றுநிருபத்தின் பிரகாரம் அனைத்து அரசாங்க நிறுவனத்தினதும் 6 மாத |

| | |
|---|---|
| ஆம் இலக்க சுற்றுநிருபம் | தொழில்பாட்டு மூலதன தேவைப்பாட்டினை மிகைத்து நிதிகளின் அளவு 2011 சனவரி 31 ஆந் திகதிக்கு முன்னர் திரண்ட நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் ஆணைக்குழு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட வருமானக்கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ஆணைக்குழுவின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் தேறிய மிகை ரூபா 61,890,041 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னை ஆண்டிற்கான மிகை ரூபா 10,221,761 ஆக இருந்ததனால் மிகையில் அதிகரிப்பு ரூபா 51,668,640 அல்லது 505% ஆக இருந்தது. மீளாய்வாண்டினை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது காணி விற்பனை வருமானம் ரூபா 86,606,542 இனால் அதிகரித்தமையும் காணி விற்பனைகள் மற்றும் சுவீகரித்தல் வட்டி வருமானம் ரூபா 4,683,283 இனாலும் நானாவித வருமானம் ரூபா 7,597,136 இனாலும் அதிகரித்தமையும் மிகை அதிகரித்தமைக்கு காரணமாக இருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவின் கடன்பட்டோர் மீதி ரூபா 2,137,647,805 ஆக இருந்ததுடன் இது மொத்த நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதியில் 93.79 சதவீதமாகும்.

(ஆ) மீளாய்வாண்டின் நடைமுறை விகிதம் 1:19 ஆக இருந்ததுடன் 2010 ஆம் ஆண்டின் போது அது 1:21 ஆக இருந்தது.

(இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பெறவேண்டிய வருமானம் 29% ஆல் குறைவடைந்திருந்தது.

3.3 சச்சரவுத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2007 செப்தெம்பர் 25 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு காணிகளைவிற்கும் போது 01 பேச்சஸ் இற்கு ரூபா 100 செலுத்தவேண்டிய போதிலும் 2011 பெப்ரவரி 25 ஆந் திகதி மடுவென்வெல நின்தகம காணியிலிருந்து இரண்டு நபர்களுக்கு ரூபா 80 விற்பனை பெறுமதியில் ஒரு நபருக்கு 03 ரூட்கள் 32.2 பேச்சர்ஸ் படியாக வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) மேற்கூறிய சுற்றுநிருபத்தின் பிரகாரம் விற்பனையிலிருந்து ஒரு நபருக்கு ஒப்படைக்கக்கூடிய உச்ச அளவான காணி 02 ஏக்கர்களாக இருந்த போதிலும் 02 ஏக்கர் 01 ரூட்டிலிருந்து 50 ஏக்கர்களை மிகைத்த அளவில் 5 நபர்களுக்கு ஆணைக்குழுவினால் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

3.4 வெளிப்படையான ஒழுங்கீனங்கள்/ முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அம்பாறை மாவட்ட செயலகத்தில் பாதுகாப்பு பிரிவு ஒன்று காணப்பட்டிருந்தும் அக்கட்டிடத்தில் பேணப்பட்டு வந்த ஆணைக்குழுவின் மாவட்ட பணிப்பாளரின் உத்தியோகபூர்வ அறையில் காணப்பட்ட கோவைகளும் காசுப் பற்றுச்சீட்டுப் புத்தகங்களும் 2011 திசெம்பர் 20 ஆந் திகதி களவாடப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக முறையான விசாரணை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் நடவடிக்கைகளை நிறைவேற்றும் செயல்முன்னேற்றம் தொடர்பாக உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) ஆணைக்குழு 2011 ஆம் ஆண்டிற்காகச் சேகரித்த வருமானம் ரூபா 57,982,982 ஆக இருந்ததுடன் காணிகளை விற்பனை செய்ததன் மூலம் உழைத்த வருமானம் ரூபா 148,634,358 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குத்தகை வருமானம் ரூபா 2,618,949 ஆல் குறைவடைந்திருந்ததுடன் காணி விற்பனைகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 86,606,542 ஆல் அல்லது 139.62% ஆல் அதிகரித்திருந்தது.

## 4.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

குத்தகை அடிப்படையில் காணிகளை வழங்குவது சம்பந்தமான தெரிவுச் செவ்வை மற்றும் பௌதீகச் செவ்வையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) குருநாகல் மாவட்ட அதிகாரச் சபைக்குச் சொந்தமான காணிகள் தொடர்பான பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

I. பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் குத்தகைக்கு வழங்கியுள்ள காணித்துண்டுகளின் அளவு 95 ஆக இருந்ததுடன் அதில் குத்தகை அறவிடப்படாத காணித்துண்டுகளின் எண்ணிக்கை 74 ஆகும்.

II. 13 ஏக்கர் 30 பேச்சஸ் அளவிலான காணிகளின் 06 காணித்துண்டுகளுக்குரிய நிலுவையான குத்தகைப் பணம் 02 காணிகளின் மிகை அறவீட்டுடன் சேர்த்து ரூபா 3,731,131 ஆக இருந்ததுடன் அப்பணம் பல ஆண்டுகளாக நிலுவையாகக் காணப்பட்டது.

III. 03 ஏக்கர் 03 ரூட், 03 பேச்சர்ஸ் அளவான காணியின் 02 காணித்துண்டுகள் குத்தகைக்குப் பெற்ற கம்பனியினால் ஆணைக்குழுவின் அங்கீகாரமின்றி உபகுத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) மாதம்பை அதிகாரசபைக்குச் சொந்தமான காணிகள் தொடர்பான பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

I. மாவட்ட அலுவலகத்தின் காணிக் கோவைகளின் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

| | ஏக்கர் | ரூட் | பேச்சஸ் |
|---|---|---|---|
| அத்துமீறிக் குடியிருப்பவர்கள் உரிமை கொண்டுள்ள காணிகளின் அளவு | 5765 | 02 | 04 |
| அதிகாரமற்ற விவசாயத்திற்காக ஈடுபடுத்தப்பட்ட காணிகளின் அளவு | 1312 | 02 | 33 |
| ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஆனால் உரிமையினை உறுதிப்படுத்தாமை | 4134 | 02 | 27 |
| குடியிருப்பினை உறுதிப்படுத்தாத நபர்களுக்கு காணிகளைப் பயன்படுத்தும் உரிமையினை ஒப்படைத்தல் | 724 | 03 | 02 |
| நியதிச்சட்ட தீர்மானத்தினைப் பெற்றுக்கொள்ளமை | 583 | - | - |
| காணிகள் தொடர்பான கோவைகளைப் பேணாமை | 1078 | - | 14 |
| போதியளவு தகவல்கள் இல்லாத கோவைகள் | 1191 | 02 | 25 |
| மொத்தம் | 14,787 | 11 | 105 |

II. குமுடுகுளியவத்தையில் 74, ஏக்கர் காணிகளைக் குத்தகைக்கு வழங்குதல் தொடர்பாக நிலுவையான குத்தகைப் பணம் ரூபா 6,525,000 ஆக இருந்ததுடன் அதற்குரிய மிகை அறவீடான ரூபா 2,020,000 தொகையான பெறுமதி முறையான அங்கீகாரமின்றி ஆணைக்குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் பதிவழிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

III. குமுடுகுளியவத்தையில் 8.094 ஹெக்டயர் காணிகளுக்குரிய குத்தகை திருத்தம் செய்யப்படாதிருந்ததுடன் காரணாவ தோட்டத்தின் 01 ஏக்கர் 02 ரூட்களுக்காக நிலுவைக் குத்தகைப் பணமாக ரூபா 598,200 தொகை அறவிடவேண்டியிருந்தது.

(இ) கண்டி மாவட்ட அதிகாரசபையின் காணி தொடர்பான பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

I. கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டதுடன் அதற்காக ஆணைக்குழு போதியளவு நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

| | ஏக்கர் | ரூட் | பேச்சஸ் |
|---|---|---|---|
| சட்டரீதியாக குத்தகைக்கு வழங்கப்படாதவை | 54 | 03 | 23 |
| அறவிடப்பட வேண்டிய நிலுவைக் குத்தகை (ரூபா 3,879,811) | 02 | 02 | 24 |
| அத்துமீறிக் குடியிருப்போர் இருக்கும் இடங்கள் | 139 | 01 | 02 |
| உப குத்தகைக்கு வழங்குதல் | 41 | - | - |
| கனிய வளங்களை அதிகாரமின்றி உரிமை கொள்ளல் | 55 | - | - |
| மொத்தம் | 291 | 06 | 49 |

II. காணப்படும் காணிப் பதிவேட்டின் பிரகாரம் ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்ட காணிகளில் குறிப்பிடத்தக்க அளவானவற்றிற்கான கோவைகள் அதிகாரசபையிடம் காணப்படவில்லை.

III. ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகளில் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கும் இலங்கை பெருந்தோட்ட

கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைத்தன் பின்னர் சில காணிகள் மீண்டும் சுவீகரிக்கப்பட்டிருந்தும் அது தொடர்பாக போதிய விபரம் ஆணைக்குழுவிடம் காணப்படவில்லை.

IV. அம்பலானவத்தை காணி (பரப்பளவு 576 ஏக்கர் 01 ரூட் 26 பேச்சஸ்)

---

1972 இன் 01 ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு அதிகாரச்சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவிற்கு உரிமையாண்மை ஒப்படைக்கப்பட்டுள்ள மேற்கூறிய தோட்டத்தினை முகாமைத்துவம் செய்வதற்காக 1988 ஆகஸ்ட் 05 ஆந் திகதி மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு ஒப்படைக்கப்பட்டு மீண்டும் 2000 சனவரி 21 ஆந் திகதி ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அது தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) மேற்கூறிய காணிகளின் 217 ஏக்கர் 17 பேர்ச்சஸ் அளவானவை உரிய முறைப்படி உரிமை உறுதிப்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த எனினும் நியதிச்சட்ட தீர்மானத்தின் அடிப்படையில் மீள ஒப்படைக்கப்பட வேண்டிய 89 ஏக்கர் 2 ரூட் 1 பேச்சர்ஸ் அளவான பகுதியில் 25 ஏக்கர் அளவான காணி நியாயமான அடிப்படை இன்றி வெளித்தரப்பினருக்கு (ஒரு கம்பனிக்கு) குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(இ) சிலிகா எனும் பெறுமதிமிக்க கனிய வளங்கள் நிலத்தில் பரவியுள்ளன எனக் கருதப்படும் 10 ஏக்கர்கள் அளவான காணி

 (1) கனிய வளங்களை குத்தகைக்கு வழங்குவது தொடர்பான ஏற்பாடுகளை கருத்தில் கொள்ளாமை.
 (2) முறையான உடன்படிக்கை செய்து கொள்ளப்படாமை
 (3) சுற்றாடல் உத்தரவுப் பத்திரம் இல்லாமை மற்றும் அரசாங்கத்திற்குச் சொந்தமான வளங்களிலிருந்து உச்ச அளவு பலனை பெற்றுக்கொள்வதனை

தடுக்கும் வகையில் ஒரு கம்பனி பயனைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தமை.

(ஈ) இக்காணியினை மக்கள் தோட்ட அபிவிருத்திக் கம்பனியிடமிருந்து மீளப் பொறுப்பேற்கும் போது 184 தொழிலாளர்களுக்கு 40 பேச்சஸ் படி வழங்கப்பட்டிருந்த போதிலும் அவர்களில் 166 பேருக்குரிய கட்டணங்களை அறவிட்டு உறுதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

கணனி மென்பொருள் பொதியினைப் பெற்றுக்கொள்வதற்காக 2007 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 1,700,000 தொகை 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் முற்பணமாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. இக்கொடுப்பனவு தொடர்பாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் விசாரணை நடாத்தப்படுவதாக கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் எதுவித வெளிப்படுத்தல்களும் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4.4 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1995 ஏப்ரல் 24 ஆந் திகதிய திறைசேரி கடிதத்தின் பிரகாரம் ஆணைக்குழுவின் அங்கீகரித்த பதவியணியினர் எண்ணிக்கை 190 ஆக இருந்த போதிலும் 2011 திசெம்பர் 01 இல் உள்ளவாறான உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை 404 ஆக இருந்ததுடன் இந்த மிகையான பதவியணியினர் 214 ஆக இருந்ததுடன் இந்த மிகையான பதவியணியினரை அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்குவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சம்பளம் மற்றும் பதவியணியினர் குழுவின் அங்கீகாரம் மீளாய்வாண்டின் இறுதிவரை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 63 வெற்றிடங்கள் காணப்பட்டன.

## 4.6 வாகனப் பாவனை

2011 ஆம் ஆண்டில் இடம்பெற்ற 02 வாகன விபத்துக்கள் தொடர்பாக நி.பி 104(3) இன் பிரகாரம் தொடக்க அறிக்கை அல்லது இறுதி அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்ல ஆளுகையும்

## 5.1 கூட்டிணைந்த திட்டம்

2011-2015 ஆம் ஆண்டுகளுக்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க சுற்றுநிருபத்திலுள்ள ஏற்பாடுகள் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. வருமானமும் செலவுகளும் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்காக மாத்திரம் எதிர்வுகூறப்பட்டிருந்ததுடன் உரிய உபாய வழிகளைத் திட்டமிடுவதற்காக பொறுப்புக்கள் பகிரப்படும் வகையில் சரியாக இனங்காண்தல் இடம்பெற்றிருக்கவில்லை. அவ்வாறே சில குறிக்கோள்களையும் அதற்குரிய உபாய வழிகளையும் அமுல்படுத்தும் பொறுப்பு பல தரப்பினர்களால் ஆற்றப்பட வேண்டுமென காட்டப்பட்டிருந்தும் ஒவ்வொரு தரப்பினர்களுக்குமிடையே பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்படும் வகையில் சரியாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

## 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொள்கைகள் மற்றும் சட்ட விதிகளின் பிரகாரம் பொருத்தமான நபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் விற்பனை செய்தல் அல்லது குத்தகை அடிப்படையில் ஒப்படைப்பதற்காக உத்தியோகத்தர்களுக்கு பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டிருந்தும் ஆண்டின் போது அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அமுல்படுத்தும் திட்டம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 36 நிறுவக ரீதியான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களும் விளைதிறன் நிகழ்ச்சித்திட்டங்களும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதன் கால

அட்டவணை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. மனித வள முகாமைத்துவம் தொடர்பான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் பதவியணியினரை சேர்த்துக்கொள்ளல், பயிற்சியளித்தல், அபிவிருத்தி செய்தல் என்பதன் கீழ் அடைந்துகொள்ளப்பட வேண்டிய இலக்குகள் குறிப்பிடப்பட்டு அது தொடர்பான கால அட்டவணை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 5.3 உள்ளகக் கணக்காய்வு

ஆணைக்குழுவில் 2007 பெப்ரவரி 27 ஆந் திகதியிலிருந்து பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் 2011 ஆம் ஆண்டிற்கு மாவட்ட அதிகாரசபைகளை உள்ளடக்கும் வகையில் உள்ளகக் கணக்காய்வினைச் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

ஆணைக்குழு சனாதிபதி செயலகத்தின் கீழ் செயற்படுகின்ற போதிலும் அதன் பிரதிநிதி ஒருவர் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில் அங்கத்தவராகப் பங்குபற்றியிருக்கவில்லை.

## 5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

2011 ஆம் ஆண்டிற்கான பாதீடு செய்யப்பட்ட வருமானம் செலவுகளை உள்ளபடியான வருமானம் செலவுகளுடன் ஒப்பிடும் போது 25% இலிருந்து 1984% வரையான முரண்கள் வெளிப்படுத்தப்பட்டதனால் அது செயற்திறனான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் அம்சங்கள் தொடர்பாக ஆணைக்குழு விசேட கவனம் செலுத்துதல் வேண்டும்.

(அ) வருமானப் பிரிவின் அறிக்கையும் கணக்குப் பிரிவின் வருமானங்களின் அறிக்கையும்.

(ஆ) நிதி தொடர்பான கட்டுப்பாடு

(இ) விடுமுறைப் பதிவேடும் வருகைப் பதிவேடும்.

(ஈ) எதிர்கால நிகழ்ச்சித்திட்டங்களும் செய்த வேலை அறிக்கையும்

(உ) மாவட்ட அதிகாரசபைகளின் காணிப்பதிவேடு

(ஊ) காணிக்கோவைகளைப் பேணுதலும் களஞ்சியப்படுத்தலும்

(எ) நாளதுவரையாக்கப்பட்ட குத்தகைப் பதிவேடு, விற்பனை செய்யப்பட்ட மற்றும் எஞ்சியுள்ள காணிகளின் அளவு தொடர்பான விபரமான தகவல்களை உள்ளடக்கும் பதிவேடுகாணிகளின் அளவு தொடர்பான விபரமான தகவல்களை உள்ளடக்கும் பதிவேடு.

(ஏ) காணிகளில் அத்துமீறியும் உத்தரவின்றியும் குடியிருத்தல் தொடர்பான போதியளவான அறிக்கை.

ஒப்பம் :- எச். ஏ. எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
*Nr/Sd*

IA/G/ 01 LP/A/LRC/FA/2011/04 2012 .08.20

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

பத்தரமுல்லை

**காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் 2011 ஆம் ஆண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

மேற்படி விடயத்திற்கு ஏற்புடையதாக பிரதி கணக்காய்வாளர் அதிபதியால் என்னிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ள சம இலக்கம் மற்றும் 2012.08.09 ஆந் திகதிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் தொடர்புடையதாகும்.

குறித்த அறிக்கையில் உசாவுப்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பிலான பதில்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

2.2. நிதிக் கூற்றுகள் தொடர்பான கருத்துரைகள்

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

i. கணக்கீட்டு நியமங்கள் 36

அலுவலர்கள் சேவையிலிருந்து விலகிய பின்னர் ஏற்புடைய நிபந்தனைகளை பூர்த்தி செய்திருப்பின், குறித்த பணிக்கொடை தொகையை ஒரு மாத காலப்பகுதிக்குள் செலுத்தப்படுதல் வேண்டும். அதன் பிரகாரம் குறித்த ஒதுக்கீடுகளை நடைமுறை பொறுப்புகளின் கீழ் காட்டப்பட்டுள்ளதுடன் 2011 ஆம் ஆண்டில் இதனை நிதிக்கூற்றுகளில் சீராக்குவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருப்பினும், அதனை கணக்குகளில் குறிப்பிடுவதற்கு முடியாது போனதால், எதிர் வருங்காலத்தில் கட்டாயமாக கணக்குகளில் சீராக்குவதற்கு குறித்துக்கொள்ளப்பட்டதுடன், சம்பந்தப்பட்ட அலுவலர்களை எச்சரிக்கப்பட்டது.

ii கணக்கீட்டு நியமங்கள் 16

பொதுவாக மீண்டுவரும் கணக்கிலிருந்து பணிக்கொடை செலுத்தப்பட்டுள்ளது. பணிக்கொடையின் பொருட்டு பேணிச்

செல்லப்படுகின்ற 05 மில்லியன் முதலீடு எமக்கு உரியதாவதுடன், அதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகையும் உள்ளிட்ட மேலதிக பணத்தை நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் கடனடைப்பு நிதியத்திலிருந்து ஏற்புடைய பணிக்கொடை செலுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

Iii <u>கணக்கீட்டு நியமங்கள் 18</u>

i. ஆணைக்குழுவின் நிலையான சொத்துக்களை தேய்மானம் செய்கின்ற போது சொத்துக்களின் ஆயுள் காலம், கிரயம் என்பவற்றை கருத்தில் கொண்டுள்ள நிலையான சொத்துக்களில், சில பழைய சொத்துக்களின் தகவல்கள் இல்லாத படியால் அவற்றின் சிதைவுகளின் பெறுமதியை சீராக்குவதற்கு சிரமமாக உள்ளது.

ii. பணிப்பாளர் நாயகத்தின் தலைமைத்துவத்தில் மதிப்பீட்டு குழுவொன்றை நியமனம் செய்து மாவட்ட அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகங்கள் என்பன உள்ளடங்கும் வண்ணம் சொத்துக்களை மீள் கணிப்பீடு செய்து புத்தகங்களில் சீராக்குவதற்கு தேவையான நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

iv. <u>கணக்கீட்டு நியமங்கள் இலக்கம் 36</u>

ஆணைக்குழுவின் மீதான வழக்குகளுக்கு தீர்ப்புகள் கிடைக்கப்பெறுகின்ற காலத்தை உறுதியாக கூற முடியாத படியாலும், சில வழக்குகள் செலுத்தல்களின்றி முடிவுறும் சந்தர்ப்பங்கள் உள்ள படியாலும் மேற்கூறிய தொடர்புகளை வேறுபடுத்துவதற்கு இயலாது. அதற்கு மேலதிகமாக புதிதாக தொடுக்கப்படுகின்ற வழக்குகளின் எண்ணிக்கை குறித்துரைத்து கூற முடியாதென்பதுடன், சில வழக்குகள் தொடர்பாக ஒரே முறையில் செலுத்தல்களை மேற்கொண்டுள்ளதால் ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கு இயலாது நிலை ஏற்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக கணக்குகளில் குறிப்பொன்றாக சமர்ப்பிப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டுள்ளது.

v <u>கணக்கீட்டு நியமங்கள் இலக்கம் 40</u>

விற்பனை செய்யப்படுகின்ற காணிகளுக்கு ஏற்புடையதாக காணிகளை சீராக்குவதற்கு முடியாதுள்ள படியால், நிதி கூற்றுகளில் நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் காணிகளை காட்டப்பட்டுள்ளது. காணி பதிவேடை தயாரித்து முடிவுறுத்திய பின்னர் விற்பனை செய்யப்பட்ட

காணிகளுக்கு ஏற்புடையதான கிரயத்தை அகற்றி மீதி அளவை நிதிக் கூற்றுகளில் முதலீட்டு சொத்துகளாக காட்டுவதற்கான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. தற்போது மாதிரி கருத்திட்டமாக இதனை மாத்தளை மாவட்டத்தை அடிப்படையாகக்கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

v     <u>கணக்கீட்டு நியமங்கள் இலக்கம் 41</u>

எதிர்வருங்காலத்தில் சொத்துக்களை மீள்கணிப்பீடு செயது கணக்குகளில் சீராக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

2.2.2. <u>கணக்கீட்டுக்கொள்கைகள்</u>

i. ஆணைக்குழுவில் கணக்கு வைப்பதற்காக தற்போது அட்டுறு அடிப்படை கடைபிடிக்கப்படுகிறது.

ii. ஆணைக்குழு கட்டணங்கள் மற்றும் அளவைக் கட்டணங்களின் வருமானம் ஆகிய இரண்டு வகைகளையும் பல்வேறு வருமானங்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. எதிர் வருங் காலங்களில் அளவைக்கட்டணங்களை புறம்பாக வகைப்படுத்துவதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது

iii. 2007 ஆம் ஆண்டில் இதற்காக பொது அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்-ளது.

4.2.3. <u>கணக்கீட்டு குறைப்பாடுகள்</u>

i. அகற்றப்பட்ட நிழற்பட பிரதி இயந்திரத்திரத்தின் கிரயம் மற்றும் அதற்கு ஏற்புடையதான திரட்டிய தேய்மானம் எவ்வளவு என்பது தொடர்பாகவும், தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு முடியாமையும், குறித்த இயந்திரம் மிக பழைமையாக உள்ள படியாலும் முற்று முழுதாக தேய்மானமடைந்துள்ளதென உத்தேசிக்கப்பட்டு, முழுதான மாற்று பெறுமதி இலாபமாக கருதி கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ii. 2009 ஆம் ஆண்டில் ஆரம்ப மீதிகளை கொண்டு 2009 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையிலான காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துகளுக்கான கிரயம், கொள்வனவு செய்யப்பட்ட திகதி, மற்றும்

தேய்மான விகிதாசாரம் என்பவற்றை குறிப்பிட்டு பதிவேடு பேணிச்செல்லப்படுகிறது. அதனை கணக்காய்விற்காக சமர்ப்பிக்க முடியும்.

iii. அநுராதபுரம், அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் திசெம்பர் மாதத்திற்கான காணிகளின் விற்பனை வருமானம், குறித்த மாதத்திற்குள்ளயே கணக்கில் மாற்றப்படாமையால், 2012 ஆம் ஆண்டில் சனவரி மாதம் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது. காலி மாவட்ட அலுவலகத்தில் மார்ச் மாதம் ரூபா.99753/= மற்றும் ஏப்பிரல் மாதம் ரூபா.32288/= ஆகிய இரண்டினதும் மொத்தம், மே மாதம் ரூபா.132041/= ஆக பேரேடில் பிரதிபன்னப்பட்டுளளது.

iv. (i). திறைசேரி இரசீதுகளின் முதலீட்டு பெறுமதி 2011.03.30 ஆந் திகதியில் ரூபா.29.735.671/= ஆகும். அது 2011 ஆம் ஆண்டு கணக்கில் 30.310.452/= ஆக வேண்டுமென்பதுடன், அதில் புதிய முதலீட்டு பெறுமதி ரூபா.574,781/= தொகை 2012 ஆம் ஆண்டில் இறுதி கணக்குகளை தயாரிக்கும் போது செவ்வையாக்குவதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது.

(ii). 2011 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக வட்டி தொகை கிடைக்கப்பெற்றிருந்த போதிலும், அது கிடைக்கப்பெற வேண்டிய வருமானமென தவறுதலாக குறிப்பிடப்பட்டிருந்தமை காரணமாக இந்நாட்டு வட்டி வருமானம் அதிகமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனை 2012 ஆம் ஆண்டில் செவ்வையாக்குவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

iii. 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆந் திகதி தொடக்கம் 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆந் திகதி வரை காலத்திற்கு ஏற்புடையதான திறைசேரி உண்டியல்களின் வட்டி வருமானம் 1455 கணக்கில் வரவு வைக்கப்பட்டிருப்பினும், தவறுதலாக மீண்டும் அப்பணத்தை கிடைக்கப்பெற வேண்டிய வருமானமாக கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.

அதனை 2012 ஆம் ஆண்டில் செவ்வையாக்குவதற்கு குறித்துக்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ). நிலையான வைப்புகளின் இலக்கம் 219702

i. 2011 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக நிலையான வைப்புகளின் வருடாந்த வட்டியை புதுப்பிக்கும் அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ளதால், நிலையான வைப்புகளின் 219702 கணக்கிலக்கம் கொண்ட வைப்பிற்கு ஏற்புடையதாக ரூபா.3.197.825/= குறைவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை 2012 ஆம் ஆண்டில் செவ்வையாக்குவதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது.

ii. மேற்படி I இன் படி ஏற்பட்ட விடுபடல் காரணமாக, அதற்கு ஏற்புடையதாக 2011 ஆம் ஆண்டு செப்தெம்பர் 01 ஆந் திகதியில் முடிவுறும் பெறுமதிக்கு ஏற்புடைய வட்டி கணக்கிடுதலும் விடுபட்டுள்ளது. அதனை 2012 ஆம் அண்டில் சீராக்குவதற்கு குறித்துக்கொண்டேன்.

iii. 2011 ஆம் ஆண்டுக்கு ஏற்படையதாக முன்னராக கிடைக்கப்பெற்ற நிலையான வைப்புகளின் வட்டி வருமானம் ரூபா 2,458,226/= அதிகமாக தவறுதலாக கணக்கு வைக்கப்பட்டுள்ளதுடன், 2012 ஆம் ஆண்டில் செவ்வையாக்குவதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

iv. ஆண்டுக்கு ஏற்புடையதான நிலையான வைப்புகளின் வருமானம் கணக்கிடப்படாமை காரணமாக கிடைக்கப்பெற வேண்டிய நிலையான வைப்புகளின் வட்டி, கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தமையால், இவ்வாறு குறைவாக காட்டப்படுதலை, 2012 ஆம் ஆண்டில் செவ்வையாக்கி கொள்வதற்கு குறித்தக்கொள்ளப்பட்டது.

v. 2011 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக தடுத்து வைக்கப்பட்ட குத்-தகை பெறுமதி ரூபா.122,055/= அதிகமாக காட்டப்படவில்லையென்பதுடன், வருடாந்த புதுபித்தல் அறிவிப்பு உரிய திகதியில் கிடைக்கப்பெறாமை காரணமாக முற்று முழுதாக தடுத்து வைக்கப்பட்ட குத்தகை சீராக்கல்கள் கணக்குகளிலிருந்து விடுபட்டிருப்பதால் 2012 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீராக்குவதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது.

திறைசேரி உண்டியல் மற்றும் நிலையான வைப்புகளின் வட்டி வருமானம் என்பன தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள உசாவுதல்களில் பிரச்சினைகளுடன் கூடிய நிலைமை உள்ள

படியால், கணக்காய்வாளர்களுடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் படி நிதிப்பிரிவிடம் அலோசனை வழங்கப்பட்டுள்ளது.

(இ) ஊழியர்களின் பணிக்கொடை

i. பணிக்கொடைகளை கணக்கிடும் போது சேவையிலிருந்து விலகிய மற்றும் பணிதடைக்குள்ளாகிய ஊழியர்களுக்காவும், தவறுதலாக பணிக்கொடை ஒதுக்கீடு செய்ததன் காரணமாக, 2011 ஆம் ஆண்டில் பணிக்கொடை ஒதுக்கிடுதல் அதிகமாக கணக்கிடப்பட்டுள்ளது. பணிக்கொடை ஒதுக்கீடு செய்கின்ற போது தொடர்ந்து ஏற்பட்டுள்ள இவ்வாறான பிழைகள் எதிர்காலத்தில் ஏற்படாதிருப்பதற்கு பொறுப்பாக இருக்கும் படி சம்பந்தப்பட்ட பிரிவுகளிடம் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

ii. பணிக்கொடை ஒதுக்கீடுகளை மேற்கொள்கின்ற போது, ஊழியர்களின் அடிப்படை சம்பளத்திற்கு ஏற்புடையதாக பணிக்கொடை ஒதுக்கப்படும். அவ்வாறு அடிப்படை சம்பளம் மற்றும் சேவைகாலம் என்பவற்றின் வேறுபாடுகள் மேற்படி மாற்றத்திற்கு காரணமாகியுள்ளதுடன், எதிர் காலத்தில் பணிக்கொடை ஒதுக்கீடுகளுக்கு ஏற்புடையதாக அனைத்து தகவல்களையும் நாளதுவரைப்படுத்தி கணக்குகளில் சீராக்குவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

iii. சேவையிலிருந்து விலகிய ஊழியர்களும் தற்போது சேவை-யில் உள்ள ஊழியர்களும் ஒரே பட்டியலில் உள்ளடக்கப்பட்டு பணிக்கொடை கணக்கிடப்படுவதால், எதிர்காலத்தில் இரண்டு பட்டியல்களின் கீழ் இதனை தயாரிக்கும் படி கணக்குப்பிரிவிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

iv. 2011 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக பணிக்கொடை கணக்கிடும் போது சம்பளவேற்றங்களை கருதப்படாதுவிடப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டில் வேதன வேற்றங்களை உள்ளடக்கி பணிக்கொடை ஒதுக்கீடுகளை

செவ்வையாக கணக்கிடுவதற்காக உரிய பிரிவுகளிடம் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

v. இது ஆணைக்குழுவின் உறுப்பினர் படியாக காட்டப்பட்டுள்ள அளவாகும். கருத்திட்டங்களின் உறுப்பினர்களுக்கு செலத்தப்படும் படிகளும், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களின் உறுப்பினர்களுக்கு செலத்தப்படும் படிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதன் படி மேற்படி செலுத்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு மேலதிகமாக செலத்தப்பட்ட படியல்ல. இது 03 சந்தர்ப்பங்களுக்கு ஏற்புடையதான செலுத்தல்களின் மொத்தமாவதுடன், எதிர்காலத்தில் கணக்குகளிலிருந்து 03 வகைகளின் கீழ் காட்டுவதற்கு குறித்துக்கொள்ளப்பட்டுள்ளது.

vi. கண்டி, களுத்துறை, எம்பிலிபிட்டிய மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களு-க்கு செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகை தாமதம் காரணமாக குறைவாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாத்தறை மாவட்ட அலுவலகத்தில் பேணிச்செல்லப்படுகின்ற கட்டிடத்திற்காக உரிமையாளரால் கோரப்பட்டிருந்த வாடகை செலத்தலுக்கு இணங்க முடியாமை காரணமாக, மீண்டும் மதிப்பீடு கோரப்பட்டு குத்தகை உடன் படிக்கைகளுக்கு 2011 ஆம் ஆண்டில் வர முடியாமை காரணமாக மாத்தறை அலுவலகத்திற்கு 2011 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக செலத்தப்பட வேண்டிய குத்தகை பணமும் கணக்கிடப்படவில்லை. பிரதான அலுவலகத்தின் குத்தகை தொகை ரூபா.330,000/= ஆக அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு மூலம் அறிவிக்கப்பட்டிருப்பினும், முன்னரான ஆண்டுக்கு ஏற்புடையதாக ரூபா.280.000/= புத்தகங்களில் சீராக்குவதற்கமைவாக செலத்தப்பட வேண்டிய குத்தகை தொகை குறைவாக கணக்கிடப்பட்டுள்ளது. முன் செலுத்தப்பட்ட வீட்டு வாடகையாக பதுளை மாவட்ட அலுவலகத்திற்கு ரூபா.20,000/= உம், அநுராதபுரம் அலவலகத்திற்கு 1.1/2 மாதத்திற்காக செலத்தப்பட்ட ரூபா.19.500/= உம் உள்ளிட்ட மொத்தம் ரூபா.39,500/= செலத்தப்பட்டுள்ளது. அது ரூபா.46,000/= ம் இல்லையென்பதையும் குறிப்பிடுகின்றேன். 2011 ஆம் ஆண்டுக்கு ஏற்புடைய நிலுவை வீட்டு வாடகை மற்றும் முன் செலத்தப்பட்ட வீட்டு வாடகை தற்போதும் 2012 ஆம் ஆண்டின் கணக்குப்புத்தகங்களுக்கு ஏற்புடையதாக சீராக்கப்பட்டுள்ளது.

vii நவம்பர் மாதம் பதுளை மாவட்டத்தின் காணி சீர்திருத்த அதிகாரச்சபையின் காணி விற்பனை வருமானம் ரூபா.314.699/= ஆதல் வேண்டுமாயினும், அது

ரூபா.344,699/= ஆக காசேடில் கிடைக்கப்பெறுதல் பக்கத்தில் குறிப்பிடப்பட்டிருந்தமையால், காசேடின் மீதி ரூபா.30,000/= ம் அதிகமாக குறிப்பிடப்படுதல் மற்றும் அதன் பிரகாரம் காணி விற்பனை வருமானம் ரூபா. 30,000/= ஆல் அதிகரித்துள்ளது. காசேடின் சரியான மீதி ரூபா.22,326,729/= எனவும் குறிப்பிடுகின்றேன். இவ்வாறான பிழைகளை தவிர்த்துக்கொள்வதற்கு எச்சரிக்கை செய்துள்ளதுடன், 2012 ஆம் ஆண்டில் இதனை சீராக்குவதற்கு தேவையான ஆலோசனை வழங்கப்பட்டது.

4.2.4. <u>இணங்காத கட்டுப்பாட்டுக்கணக்குகள்.</u>

1. நீண்ட கால குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட 03 கெப் வண்டிகளுக்கு ஏற்புடையதாக, கணக்குப் புத்தகங்களில் சரியாக சீராக்கப்பட்ட போதிலும், நாளேடு குறிப்புககுக்கு உரிய 03 கெப் வண்டிகளுக்கு ஏற்புடையதான கிரயம் நிலையான சொத்துக்களின் பதிவேட்டுக்கு ஏற்புடையதான பேரேடின் உரிய பக்கத்திற்கு கொண்டுச்செல்லப்படவில்லை. இதன் படி நிலையான சொத்துக்களின் பதிவேட்டின் பக்க இலக்கம் 3,7 மற்றும் 8 ஆகிய பக்கங்களில் இப் பிழை செவ்வையாக்கப்பட்டுள்ளது.

ii. கடன் பேரேடு மற்றும் கடன் பதிவேடு என்பவற்றை விபரமாக பரிசீலனை செய்து மேற்படி பிழையை செவ்வையாக்கி கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

iii. அநுராதபுரம் மாவட்ட செயலகத்தில் ஏற்பட்ட நிதி முறைகேடு காரணமாக பணிப்பாளர் உள்ளிட்ட 04 அலுவலர்கள் பணி தடைக்காளாகியுள்ளனர். மேற்படி காரணத்தால் 2011 ஆம் ஆண்டு யூன் மாதம் தொடக்கம் வருமான விபரங்களை பெற்றுக்கொண்டு வங்கிகளுக்கிடையில் மாற்றுவதற்கு முடியவில்லை. அதற்கு காரணம் யாதெனில் வருமான விபரங்களுக்கு ஏற்புடையதான இரசீதுகள் புலனாய்வு நடவடிக்கைகளுக்காக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததென அலுவலர்களால் எமக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் யூன் மாதம் காணி விற்பனை வருமானமாக ரூபா.23.300/= மற்றும் யூலை மாதம் ரூபா.28,305/= ஆகிய பெறுமதியின் மொத்தமான ரூபா.51,605 ஐ செப்தெம்பர் மாத கணக்கில் வரவு வைக்கப்பட்டது.

நுவரெலிய மாவட்டத்தில் திசெம்பர் மாத வருமானம் திசெம்பர் மாதம் 28 ஆந் திகதி காணி விற்பனைகள் ரூபா.196734/= உம், முத்திரை ரூபா.6833/= உம், சட்ட கட்டணமாக ரூபா.15,900/= உம், உள்ளிட்ட ரூபா.219507/= கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் காசுப் பேரேடிலிருந்து புத்தகத்திற்கு (ledger) பிரதி பன்னும் போது, 196774/= இற்குப்பதிலாக 196574/= என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இது கணக்குகளை குறிப்பிடுகின்ற போது ஏற்பட்ட பிழையாவதுடன், எதிர் காலத்தில் இவ்வாறான நடவடிக்கைகளின் பால் கூடிய கவனம் செலத்தும் படி எச்சரிக்கை செய்யப்பட்டது.

அம்பாந்தோட்டை மாவட்ட அதிகார சபையின் பெப்ரவரி மாதம் காணி விற்பனை வருமானம் ரூபா 273,250/= ஆக குறிப்பிடப்பட்டிருப்பது எதுவெனில், அதில் 10% ஆன மிகை கட்டணமாக ரூபா.20,000/= ஆம் தொகை காணி விற்பனை வருமானமாக குறிப்பிடபட்டிருத்தலாகும்.

பதுளை மாவட்ட அதிகார சபையின் வருமான அறிக்கைப்படி ரூபா.314ஈ699/= ஆக வருமானம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை புத்தகத்திற்கு (ledger) பிரதிபன்னும் போது ரூபா.344,699/= என்று தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை எதிர் வரும் காலத்தில் செவ்வையாக்கிகொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

மே மாதம் வயல் காணி விறபனை வருமானம் ரூபா. 3200/= ஆகவும், யூலை மாதம் 10,700/= ஆகவும் அதாவது இரண்டினதும் மொத்தம் ரூபா. 13900/= ம் ஆக ஆகஸ்ட் மாதத்தில் கணக்கிடப்பட்டுள்ளது.

iv. நிலையான வைப்புகளின் பொருட்டு கிடைக்கப்பெற வேண்டிய வட்டியை வசூலிக்கின்ற போது, மேற்படி பிழை ஏற்பட்டுள்ளதுடன் 2012 ஆம் ஆண்டில் இதனை செவ்வையாக்குவதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது.

4.2.5. <u>தெளிவுபடுத்தாத மாற்றறங்கள்</u>

i. வங்கியால் வழங்கியிருந்த மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதத்தின் பிரதியினை பெற்றுக்கொண்டு வங்கியுடன் கலந்துரையாடி எதிர்காலத்தில் பதில் வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றேன்.

ii. அனைத்து மாவட்ட செயலகங்களுக்கும் ஏற்புடையதாகவும், தலைமை அலுவலகத்திற்கு கிடைக்கப்பெறும் காணிகளின் விற்பனைகள் காணி

விற்பனை வருமானமாக நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது. வருமானப்பிரிவில் வருமானம் மற்றும் நிதிப்பிரிவில் வருமானமாக ரூபா.13.536.111/= தொடர்பான அறிக்கை எதிர் காலத்தில் வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றேன்

iii. 1972 ஆம் ஆண்டு தொடக்கம் எம்மால் பயன்படுத்தப்படும் மேற்படி கட்டிடங்களுக்காக ஆரம்பத்தில் செலத்தப்பட வேண்டிய குத்தகையாக ரூபா.1400/= தொடக்கம் 14000/= போன்ற குறைந்த பெறுமதியிலிருந்து, ஒரே முறையில் ரூபா.280,000/= தொடக்கம் ரூபா. 330,000/= போன்ற தொகை வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. ஒரே முறையில் இவ்வாறான அதிக தொகையில் குத்தகை செலுத்துவதனை அதிகரித்தமை எமது நிறுவனத்திற்கு செலவிட கஷ்டமாவதால் குறித்த பணத்தொகையை குறைப்பதற்கும், மேற்படி கட்டிடத்தை காணி சிர்திருத்த ஆணைக்குழுவிடம் கையேற்பதற்கும் அரசாங்க நிர்வாக அமைச்சுடன் பல கலந்துரையாடல்களை நடாத்தியுள்ளதுடன் மேற்படி பெறுமதிகளை கணக்குகளுக்கு ஏற்புடையதாக சீராக்குதலோ அல்லது குத்தகை செலத்துலோ மேற்கொள்ளப்படவில்லை.

iv. <u>கிடைக்கப்பெற வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்</u>

4.2.6. i. சனாதிபதி செயலாளர் மற்றும் அரசாங்க நிறுவனங்களின் அலுவலர்களுடன் கலந்துரையாடி கடன் அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ப்பட்டு வருகின்றன.

4.2.7. ii. ஏற்புடைய மீதிகளை உறுதிப்படுத்தாத நிறுவனங்கள் தொடர்பாக அரசாங்கத்தின் கணக்காய்வுப்பிரிவில் உசாவிய பின்னர், சட்டத்துடனான நடவடிக்கை மெற்கொள்வதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது.

iii. இது தொடர்பாக கணக்காய்வு உசாவுதல் அல்லது சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் போதியதற்றதால் கணக்காய்வாளர்களுடன் கலந்துரையாடிய பின்னர் ஏற்புடைய தகவல்களை பெற்றுக்கொண்டு அதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்வதற்கு செயற்படுவேன்.

iv. இவ்வலுவலர்களின் சில அலுவலர்களின் பணி தடை ஆகிய சட்டத்துடனான செயற்பாடுகள் காரணமாக பணிக்கொடை பெற்றுக்கொள்ளத படியால், குறித்த சட்டத்துடனான செயற்பாடுகள் முடிவடைந்த பின்னர் உரிய பணிக்கொடை செலத்துவதன் ஊடாக மேற்படி கடன் தொகை அறவிடப்படுகிறது. கடன் செலுத்தலை தவறவிடப்பட்டுள்ள நபர்களிடமிருந்து

(இதில் சிலர் மரணமடைந்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.) அதனை கழித்துக்கொள்வதற்கு அவர்களுக்கு பல முறை எழுத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது இவ் விடயம் தொடர்பாக பிணையாளர்களையும் கண்டறிய முடியாத நிலை உள்ளது. 2011 ஆம் ஆண்டில் அநுராதபுரம் மாவட்ட அலுவலகத்தில் இரண்டு அலுவலர்கள் பணி தடைக்கு உள்ளாகிய படியால் அவர்களிடமிருந்து கடன் அறவிடமுடியாது போய் உள்ளது. தற்போது அவர்களை மீண்டும் சேவையில் அமர்த்தியுள்ளதால் பொதுவான முறையில் கடன் அறவிடப்படுகிறது. தற்போதுள்ள தகவல்கள் மற்றும் பிணையாளர்கள் தொடர்பாக கண்டறிந்து உரிய கடன் தொகையை அறவிடுவதற்கு ஆகக்கூடிய முறையில் நடவடிக்கை மேற்கொள்ளும் படி ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. தற்போது இவ்வாறான நிலைமை ஏற்படாதிருப்பதற்கான புதிய முறைமைகள் கடன் வழங்கும் போது கடைபிடிக்கப்படுகிறது.

v. 2002-2004 ஆகிய காலப்பகுதியில் அமைச்சரவை தீர்மானங்கள் மூலம் தடை செய்யப்பட்ட மேற்படி காணி கொடுக்கல் வாங்கல், குறித்த நிறுவனம் மற்றும் நபர்கள் ஆகியோரால் மீண்டும் செய்யப்பட்ட கோரிக்கை படி ஆணைக்குழு மூலம், விடய பொறுப்பு அமைச்சரின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டது. அதன் போது அமைச்சரவை மூலமாக தடை செய்யப்பட்ட மேற்படி காணி கொடுக்கல்வாங்கல் என்பவற்றுக்குரிய காணிகளை மீண்டும் கையளிப்பதற்கு செயற்படுவதாயின், அதற்காக திருத்தங்களுடன் கூடிய அமைச்சரவை பத்திரம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென சனாதிபதி செயலகத்திடம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட காணிகளை குத்தகை அடிப்படையின் கீழ் வழங்குவதற்கும், அபிவிருத்தி செய்யப்படாத காணிகளை மீண்டும் சுவீகரித்துக்கொள்வதற்கும் செயலாற்றப்படுகிறது. ஏற்புடைய அமைச்சரவை பத்திரம் மிக விரைவில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

vi. 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு ஏற்புடையதான பட்டியலை சமர்ப்பிக்கும் படி ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

vii. பொதுவாக வாகன விபத்துகள் தொடர்பாக ஏற்புடைய நடவடிக்கைகளை மேற்கொண்டு காப்புறுதி நட்டஈடு கிடைக்கப்பெற்றதன் பின்னர் கணக்குப்பிரிவை இது தொடர்பாக அறிவுறுத்தப்படும். வாகனத்தை பழுதுபார்த்தல் தொடர்பாக திசெம்பர் 21 ஆந் திகதியல் மேற்கொள்வதற்கும், கணக்கு தயாரிப்பதனை 2012 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளதால் இதனை 2011 ஆம் ஆண்டுக்கு

ஏற்புடையதாக கணக்கு வைக்கப்படவில்லை. அதனை 2012 ஆம் ஆண்டில் கணக்கு வைக்கப்பட்டுள்ளது.

viii. 10% வட்டி சதவீதத்திற்கு ஏற்புடைய தொகை வருடாந்தம் வசூலித்து கணக்கிடுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

Ix 2011.12.31 வரையில் உள்ள காணிகளை கையேற்கும் பதிவேட்டில் உள்ள நபர்களின் பெரும்பாலானோர் 2004-2011 வரையிலான காலப்பகுதியில் உள்ளவர்களாவார்கள். மேற்படி காலப்பகுதிக்குள் உரிய கொடுக்கல்வாங்கல் 537 ஐ அமைச்சரவையால் இடைநிறுத்தப்பட்டுள்ளது. ஆகையால் குறித்த முற்பணத்தை குறித்த நபர்கள் கோரப்படாதிருப்பின், அதன் பொருட்டு எதிர் கால நடவடிக்கைகளை அமைச்சரவை பத்திரம் பிரகாரம் மேற்கொள்ள முடியாதுள்ளது. மேற்படி தீர்மானத்தை மாற்றி அமைப்பதற்காக புதிய அமைச்சரவை பத்திரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அதனை அமைச்சரவையால் அனுமதிக்கப்படின், மேற்படி மீதியை சீராக்கி கொள்வதற்கு எதிர் கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஆற்றல் உள்ளதுடன், இது வரை ஆணைக்குழுவால் மேற்கொள்ள கூடிய நடவடிக்கைகள் இல்லை.

4.2.8. <u>கணக்காய்விற்கான சான்றுகளின்மை</u>

காணிகள்:- காணிப் பதிவேடை நாளதுவரைப்படுத்திய பின்னர் ஏற்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு குறித்துக்கொண்டேன்.

கட்டிடங்கள்:- மொணராகலை மாவட்ட அலுவலகத்தின் பெறுமதி மற்றும் பிரதான அலுவலக கட்டிடத்திற்காக அவ்வப்பொழுது மேற்கொண்ட செலவுகள் உள்ளிட்ட வேறு சேர்க்கப்பட்ட தொகை ரூபா. 4,207,822/= ஆக கணக்குகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதனை பரிசீலனை செய்து செவ்வையாக்குவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

| | |
|---|---|
| பயன்பாட்டு உதிரி பாகங்கள்<br>தளபாடங்கள் மற்றும் பொருத்தல்கள்<br>மோட்டார் வாகன உதிரிபாகங்கள்<br>தளபாடங்கள் மற்றும் பொருத்தல்கள்<br>அலுவலக உபகரணங்கள் | 2011 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதிக்கு ஏற்புடையதாக இருப்புகளின் மீளாய்வு மேற்கொண்டு மீளாய்வு சபை அறிக்கை மற்றும் அது தொடர்பான சொத்தக்களின் பதிவேடு எம்மிடம் உள்ளது. |

நலன்புரி உபகரணங்கள்

கடன் முற்பணம்

அச்சீட்டு மற்றும் எழுதுகருவிப்பொருட்கள்

அச்சீட்டு மற்றும் எழுதுகருவிப்பொருட்கள் என்பவற்றின் பொருட்டு அச்சீட்டு திணைக்களத்திடமும் மோட்டார் வாகன பழுதுபார்த்தலுக்காக யுனைடட் மோட்டர்ஸ் தனியார் கம்பனியிடமும் ரூபா.10,000/= ம் மற்றும் ரூபா. 15,000/= ம் என்ற வகையில் முறையாக முற்பணம் செலுத்தியுள்ளதுடன், மேற்படி இரண்டு நிறுவனங்கள் மூலமாகவும் தற்காலத்தில் தேவையான சேவைகளை பெற்றுக்கொண்டுள்ளதால் எதிர் காலத்தில் இதற்கான மீதிகளுக்குரிய உறுதிகளை பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது.

லோகர் சீமாட்டி நிதியம் : கிடைக்கப்பெறவில்லை

எரிபொருள் முற்பணம்

எரிபொருள் முற்பணமாக நிரோஷன என்டர் ப்ரயிஸஸ் (தனியார்) கம்பனி மற்றும் எஸ்.ஆர்.தினமித்திர ஆகிய நிறுவனங்களிடமிருந்து முறையாக ரூபா.75000/= ம், மற்றும் ரூபா. 100000/= ம் விதம் முற்பணம் வைப்புச்செய்யப்பட்டுள்ளது. அதற்காக மீதி உறுதிப்படுத்தல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

கணினி வேலைகளுக்கான முற்பணங்கள் :-

இலஞ்சம் மற்றும் ஊழல் புலனாய்வு ஆணைக்குழுவிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பணிக்கொடை

05 ஆண்டு சேவைக்காலத்தை பூர்த்தி செய்துள்ள ஊழியர்களின் பொருட்டு பணிக்கொடை ஒதுக்கீடுகள் மேற்கொண்டுள்ளதுடன், 55 வயது பூர்த்தியானதன்

| | |
|---|---|
| ஒதுக்கீடுகள் மற்றும் பணிக்கொடை செலத்தல்கள் | பின்னர் அல்லது அதற்கு முன்னர் சேவையை முடிவுறுத்திய ஊழியர்களின் பொருட்டு பணிக்கொடை செலுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக அவர்களின் தனிப்பட்ட கடிதக்கோவைகளை பரிசீலனை செய்து உறுதிப்படுத்திக்கொள்ள முடியுமென்பதை அறியத்தருகின்றேன். |
| அறவிடமுடியாக் கடன் ஒதுக்கீடு | 2005 ஆம் ஆண்டுக்கு முன்னராக அறவிடப்பட முடியாத கடன் ஒதுக்கீடுகள் கணக்குகளில் சீராக்கப்பட்டுள்ளதுடன், இதற்கு அடிப்படையான விடயங்களுடன் அறிக்கையிட முடியாதுள்ளது. |
| கிடைக்கப்பெற வேண்டிய வருமானம் | இது தொடர்பான பதிவேடு 2012.12.31 ஆந் திகதியில் தயாரிக்கப்பட்டு, அது தொடர்பாக உறுதிப்படுத்தும் கடிதங்களை பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| நட்டஈட்டு தொங்கல் கணக்கு | செலுத்தல் தொடர்பாக விபரமான பதிவேடுகள் சமர்ப்பிக்கப்படலாம். |
| காணி விற்பனைகள் மற்றும் சுவீகரித்தல்கள் என்பவற்றுக்கான வட்டி | |
| மரங்களை விற்பனை செய்தல்<br>பீபல்ஸ் லீசிங் கம்பனியின் நீண்ட கால குத்தகை பெறுமதி | பெற்றுக்கொண்டதன் பின்னர்<br>சமர்ப்பிக்கலாம் |
| காணிகளை கையேற்றல்<br>வயல் காணிகளின் விற்பனை | விபரங்களை சமர்ப்பிக்கலாம் |

2.2.9 சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு இணங்கமை

1. 1975 ஆம் ஆண்டு 39 ஆம் இலக்க காணி சீர்திருத்த (திருத்தச்) சட்டம்

(அ). 42 (இ) 1,2,3,4 பிரிவுகள்

அனுமதியற்ற ஒழுங்குப்படுத்தல்களை ஆணைக்குழுவால் கடைபிடிக்கப்படுகின்ற நிர்வாகத்துடனான செயற்றிட்டமாகும். எவ்வாறாயினும் 1979 ஆம் ஆண்டு உடைமையை மீள பெற்றுக்கொள்ளும் சட்டத்தின் கீழ் அனுமதியற்றவர்கள் தொடர்பாக தற்போதும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

(ஆ). ஆணைக்குழுவின் பொருட்டு சனாதிபதி செயலகத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு உறுப்பினர் ஒருவரை நியமனம் செய்யும் படி சனாதிபதி செயலாளரிடத்தில் தற்போது கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

11. 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச்சட்டம்

(அ). முதலீடு செய்வதற்காக பொது தீர்மானமொன்றை பெற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

(ஆ). உரிய அறிக்கை ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்து அனுமதி பெற்றுக்கொண்டு 03 மாதங்களை விஞ்சாத வண்ணம் கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(இ). ஆணைக்குழுவால் தயாரிக்கப்படுகின்ற முன்னேற்றம் உள்ளடக்கிய ஆண்டறிக்கை ஒவ்வொரு ஆண்டிலும் விடய பொறுப்பு அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்படுவதுடன், 2010 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்னர் அமைச்சரவை அனுமதி பெற்றுக்கொள்வதற்காக அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

111. 1995 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆந் தேதிய எஸ்ஈஅய்/ஏ/4/34 ஆந் தேதிய சனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கைகள்

(அ). உரிய குத்தகை உடன்படிக்கையில் இது தொடர்பாக நிபந்தனை குறிப்பிடப்பட்டிருப்பின் அதன் படி ஒவ்வொரு ஐந்து ஆண்டுக்கொருமுறை குத்தகை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

(ஆ). குத்தகை செலுத்தப்படாத சந்தர்ப்பங்களில் குத்தகை பணம் அறவிடுவதற்கு ஆகக்கூடிய முயற்சிகளை மேற்கொள்ளப்படும். அதன் பிரகாரம் சம்பந்தப்பட்ட

குத்தகைகாரர்களை அழைத்து கலந்துரையாடி அப்பணத்தை பெற்றுக்கொள்வதற்கு தேவையான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி அனைத்து முயற்சிகளும் பலனற்ற சந்தர்ப்பங்களில் குத்தகை காலத்தை முடிவுறுத்துவதற்கு நடைமுறைப்படுவதுடன் பெரும்பாலும் அதற்காக சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(இ). இடைக்கால குத்தகையின் போது ஆணைக்குழுவின் எழுத்திலான அனுமதி பெற்றுக்கொள்ளாதிருந்தால் குத்தகைகாரர் மற்றும் இடைக்கால குத்தகைகாரர் ஆகியோரை அழைத்து குத்தகைகாரரிடமிருந்து அதனை அகற்றப்பட்டு உரிய தொழில்முயற்சியை மேற்கொள்கின்ற இடைக்கால குத்தகைகாரரிடம் ஆணைக்குழுவின் திட்டங்களுக்கு அமைவாக குத்தகை வழங்கி நாளதுவரைப்படுத்தப்படும்.

iv <u>2009 ஆம் ஆண்டு 09 ஆம் இலக்க தேசத்தைக்கட்டியெழுப்பும் சட்டம் (ஈ) பிரிவு</u>

இது தொடர்பாக குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு ஏற்படக் கூடிய சிரமங்கள் காரணமாக சனாதிபதி செயலாளர் ஊடாக ஏற்புடைய நடவடிக்கை மேற்கொள்வதற்கு கலந்துரையாடப்படுகின்றது.

v. <u>தாபன விதிக்கோவை அத்தியாயம் 2 பிரிவு 13 (3)</u>

நிரந்தர நியமனமொன்றை மேற்கொள்கின்ற வரை தற்காலிக தீர்வாக பதில் கடமையாற்றும் நியமனமொன்றை மேற்கொள்ளலாம்.

ஆயினும் ஆணைக்குழுவின் பணிப்பாளர்/நிதி, பிரதான உள்ளக கணக்காய்வாளர், பணிப்பாளர்/மதிப்பீடு மற்றும் நட்டஈடு பதவிக்காக ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ளவதற்கு பத்திரிக்கை அறிவிப்பு மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு விண்ணப்பத்தாரிகளை நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டது.

குறித்த விண்ணப்பத்தாரிகள் ஆணைக்குழுவின் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்யாதிருத்தலும், குறித்த பதவிக்கு ஏற்புடைய சம்பளத் திட்டத்தில் சேவையாற்றுவதற்கு விருப்பமின்மையை தெரிவித்த காரணத்தால் ஆட்சேர்ப்பு பணி வெற்றியடையவில்லை.

குறித்த பிரச்சினைகள் காரணமாக நிதிப்பிரிவு, உள்ளக கணக்காய்வுப்பிரிவு மற்றும் மதிப்பீட்டு நட்டஈட்டு பிரிவு ஆகிய பிரிவுகளின் பதவிகளில் பதில் கடமையாற்றுவதற்காக அப்பொழுது தகுதியுடைய அலுவலரை பிரிவின் பணிப்பாளர் பதவியில் பதில்கடமையாற்றுவதற்காக நியமனம் செய்யப்பட்டது.

வெற்றிடம் நிலவுகின்ற மேற்படி பிரதான பதவியின் பொருட்டு ஆட்சேர்ப்புச் செய்தல் தொடர்பாக தேசிய சம்பளம் மற்றும் பணிற்றொகுதி ஆணைக்குழுவிடமும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமும் ஆலோசனை பெற்றுக்கொள்வதற்கு பணியாற்றியதுடன், ஆணைக்குழுவிடம் தயாரிப்பதற்கு உத்தேசித்துள்ள புதிய ஆட்சேர்ப்புத்திட்டம் மற்றும் பணிற்றொகுதிக்கான அனுமதி என்பன கிடைக்கப்பபெறுகின்ற வரை எதுவித புதிய ஆட்சேர்ப்புகளையும் மேற்கொள்ளாதிருப்பதற்கு அறிவிக்கப்பட்டது.

தற்போது ஆட்சேர்ப்புத்திட்டம் தேசிய சம்பள மற்றும் பணிற்றொகுதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளும் அமைச்சின் பரிந்துரைகளும் பெற்றுக்கொண்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், புதிய ஆட்சேர்ப்புத்திட்டம் அங்கீகரிக்கப்படும் வரை ஆணைக்குழுவின் பணிகளை தொடர்ச்சியாக பேணிச்செல்ல வேண்டியுள்ளதால் மேற்படி பதில் கடமையாற்றும் பதவியை வழங்கியுள்ளதுடன், ஆட்சேர்ப்புத்திட்டத்தை அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் விரைவாக மேற்படி பதவிகளுக்கு தகைமையுள்ளவர்களை ஆட்சேர்ப்புச்செய்வதற்கான எதிர்கால நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

vi (அ) <u>நிதி ஒழுங்குவிதிகள்</u>

நிலையான சொத்துக்களின் பதிவேடை ஒவ்வொரு விடயத்திற்கும் ஏற்புடையதாக தயாரிக்கப்பட்டிருப்பினும், நிதி ஒழுங்குவிதிகளின் பிரகாரம் முறையாக பேணிச்செல்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

(ஆ). நி.ஒ. 135

மாவட்ட அலுவலகங்களில் கணக்கு நடவடிக்கைகளுக்கு பொறுப்பான அலுவலரால் கணக்கீட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆயினும் தற்போது அனைத்து மாவட்ட பணிப்பாளர்களையும் இது தொடர்பாக அறிவுறுத்தப்பட்டு கணக்கு நடவடிக்கைகளுக்கு ஏற்புடையதான கடமைகளை கையளிக்கும் படி சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவித்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

vii 2008 ஆம் ஆண்டு யூன் மாதம் 02 ஆந் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றுநிருபம்.

நிறைவேற்றுப்பணிப்பாளர் பதவி அல்லது உறுதி ஆலோசகர் பதவி ஆணைக்குழுவின் நிரந்தர பணிற்றொகுதியில் உள்ளடக்கிய பதவியல்லாததுடன், நிறைவேற்றுப்பணிப்பாளர் பதவிக்கு அலுவலரொருவரை, 1972 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க காணி சீர்திருத்த சட்டத்தில் 45 (1) (ஆ) (1) பிரிவு பிரகாரம் கௌரவ விடய பொறுப்பு அமைச்சரால் நியமனம் செய்யப்படுகிறது.

உறுதி ஆலோசகர் பதவியானது, வெறுமனே ஆணைக்குழுவின் அனுமதிக்கமைவாக, ஏதேனும் படியின் கீழ் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தற்காலிக பதவியாகும்.

(ஆ) <u>நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 27 ஆந் திகதிய பீஈடீ 56 ஆவது இலக்க சுற்றுநிருபம்.</u>

(இ). 2003 ஆம் ஆண்டு யூன் மாதம் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரச தொழில்முயற்சி சுற்றுநிருபம்.

i. காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வருடாந்த செயற்றிட்ட அறிக்கைகளை தயாரித்த பின்னர் அமைச்சிடம் மற்றும் அரச தொழில் முயற்சி திணைக்களத்திடம் ஒவ்வொரு ஆண்டும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டுக்காக அரையாண்டு செயற்றிறன் அறிக்கையும் தற்போது சமர்ப்பிப்பதற்கு பணியாற்றியுள்ளதுடன், எதிர் காலத்தில் காலாண்டுக்கான அறிக்கைகளை தயாரித்து அனைத்த நிறுவனங்களிடமும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட பிரிவுகளை அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ii. இதன் படி உரிய விடயங்களை கண்டறிந்து எதிர் கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது.

iii. தற்போது ஆணைக்குழுவின் அமைப்பான்மை படி இரண்டு உறுப்பினர்கள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்காக பங்குபற்றுவார்கள்.

(ஈ). 2011 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21 ஆந் திகதி 449 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை

காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்காக உறுதி ஆலோசகராக ஆட்சேர்ப்புச்செய்யப்பட்டதற்கான காரணம் யாதெனில், வெறுமனே இவ்வலுவலர் நிறுவனத்திலும் நிறுவனத்திற்கு புறம்பாகவும் மேற்கொண்டிருந்த பதவிகளை கருத்தில் கொண்டாகும்.

மேலும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் காணிகள் மற்றும் உறுதிகள் தொடர்பில் அவருக்குரியதான அறிவின் படி உறுதி ஆலோசகர் பதவியை வகிப்பதற்கு தகைமைகள் இருப்பதால், புதிய அலுவலர்களின் சேவையை பெற்றுக்கொள்வதிலும் பார்க்க இவ்வலுவலரின் சேவையை பெற்றுக்கொள்ளுதல் பொருத்தமாவதால் ஆணைக்குழுவின் அனுமதியுடன் மேற்படி ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட்டன

காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் அளவைகள் மற்றும் ஒதுக்கீட்டுப்பிரிவின் பணிப்பாளர் பதவிக்கு பொருத்தமான அலுவலரை நியமனம் செய்வதற்கு பல சந்தர்ப்பங்களில் பகிரங்க பத்திரிக்கை அறிவிப்புகள் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதிலும், ஏற்றுக்கொள்ள கூடிய வகையில் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

அரசாங்கத்தின் நில அளவையாளர் திணைக்களத்திலிருந்து இரண்டாம் அடிப்படையிலாவது அலுவலரொருவரை விடுவிக்கும் படி கோரப்பட்ட போதும், அதற்கு நல்லதோர் பதில் கிடைக்கப்பெறவில்லை. ஆகையால் இறுதியாக வெளியிடப்பட்ட பத்திரிக்கை அறிவிப்பிற்கமைவாக இரண்டு விண்ணப்பத்தாரிகளிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதுடன், குறித்த விண்ணப்பத்தாரிகள் நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்கள் ஆணைக்குழுவின் ஆட்சேர்ப்புத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளத்திற்கு சேவையாற்றுவதற்கு விருப்பமின்மையை தெரிவித்திருந்தனர்.

ஆயினும் நேர்முகப்பரீட்சையில் பங்குபற்றிய நில அளவையாளர் திணைக்களத்தில் சேவையாற்றி ஓய்வு பெற்ற எம்.டபிள்யூ.கே.தர்மவர்தன அவர்கள் நில அளவையாளர் திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த போது, இறுதியாக பெற்றுக்கொள்ளப்பட்ட சம்பளத்தை தமக்கு செலுத்துவதாயின் ஆணைக்குழுவில் பணியாற்றுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார்.

அப்பொழுது அளவையிடல் மற்றும் ஒதுக்கீட்டுப்பிரிவின் பணிப்பாளரொருவர் இல்லாத படியாலும், அலுவலகத்தில் காணி அளவையிடல் கடமைகள் அதிகமாக எஞ்ஞியிருந்த படியாலும் எம்.டபிள்யூ.கே.தர்மவர்தன அவர்களின் கோரிக்கை படி உரிய சம்பளத்தை செலுத்துவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது. அதாவது, அரசாங்கத்தின் ஓய்வூதியத்தை முடக்கி வைத்து, பணிப்பாளர் அளவையிடல் மற்றும் ஒதுக்கீட்டுப் பதவியில் ஒப்பந்த அடிப்படையில் சேவைக்கு ஆட்சேர்ப்புச்செய்யப்பட்டது.

ஆட்சேர்ப்புத்திட்டம் அங்கீகரிக்கப்படும் வரை எதுவித ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ள வேண்டாமென முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து ஆலோசனை கிடைக்கப்பெற்றுள்ளதால், சேவையின் தேவைக்கேற்பவும், அளவையிடல் மற்றும் ஒதுக்கீட்டுப்பிரிவு காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் அத்தியாவசிய சேவைகளை நிறைவேற்றியுள்ளதாலும், அளவையிடல் மற்றும் ஒதுக்கீட்டுப்பிரிவின் பிரிவுத்தலைவராக திரு.எம்.டபிள்யூ.கே.தர்மவர்தன அவர்களின் சேவையை பெற்றுக்கொள்வதற்கு ஆணைக்குழு தீர்மானித்தது.

மேலும் புதிய ஆட்சேர்ப்புத்திட்டத்திற்காக தற்போது அமைச்சின் பரிந்துரையும் சம்பள மற்றும் பணிற்றொகுதி ஆணைக்குழுவின் பரிந்துரையும் முகாமைத்துவ சேவைகள்

திணைக்களத்தின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், உரிய அனுமதி கிடைக்கப்பெற்றவுடன், பணிப்பாளர் அளவையிடல் மற்றும் ஒதுக்கீட்டுப் பதவிக்காக குறித்துரைத்த தகைமைகளைக் கொண்டுள்ள அலுவலரை ஆட்சேர்ப்புச்செய்வதற்கு விரைவாக பணியாற்றும் படி சம்பந்தப்பட்ட பிரிவுகளை அறிவுறுத்தப்பட்டது.

2.2.9 சிக்கல் வாய்ந்த விடயங்கள்

1. இது தொடர்பாக ஆணைக்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முக்கியமாக அமைச்சரின் சிபாரிசு மற்றும் இவர்களில் குறைந்த வருமானம் பெறுவோரின் மட்டம் என்பன இங்கு கவனத்தில் கொள்ளப்படும்.

2. இது தொடர்பாக அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் மற்றும் ஒப்படைத்தல்கள் குறித்த பிரிவில் விபரமாக குறிப்பிடப்பட்டுள்ளமையால் சரியான தகவல்களை பின்னா் சமா்ப்பிக்கின்றேன்.

2.2.10. கட்புல குறைபாடுகள் / முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அம்பாறை மாவட்ட செயலகத்தின் பணிப்பாளர் உத்தியோகபூர்வ அறையில் காணப்பட்ட கோப்புகள் மற்றும் பற்றுச்சீட்டுகள் என்பன காணாமல் போதல் தொடர்பாக குறித்த பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், அப்பொலிஸ் நிலையத்தினால் அது பற்றிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டிய சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பிரதான அலுவலகத்திற்கு அழைத்து, வாக்குமூலங்கள் பதிவு செய்து கொண்டதுடன் காணாமல் போன ஆவணங்கள் தொடர்பான பட்டியல் ஒன்றும் பெற்றுக்கொள்ளப்பட்டு இது பற்றிய மேலதிக நடவடிக்கைகள் பணிப்பாளர் நாயகத்தினால் அம்பாறை அலுவலகத்திற்கு சென்று முன்னெடுக்கப்பட்டது. மேலும் இது பற்றிய விசாரணைகளை துரிதப்படுத்துமாறு பணிப்பாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

3. நிதி மீளாய்வு

3.1. நிதி முன்னேற்றம்

3.2. பூரண விபரத்துடனான நிதி மீளாய்வு

1. இவ்வீதங்களில் காணப்படுகின்ற அதிகமான அளவு அரசாங்க நிறுவனங்களுடன் தொடர்புடையதாகும். உதாரணமாக ஜனவச ஊடாக கிடைக்க வேண்டியுள்ளதுடன் இது தொடர்பாக ஜனாதிபதியின் செயலாளர் ஊடாக குறித்த தீர்மானம் ஒன்றுக்கு வருமாறு ஆணைக்குழுவுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

2. ஒவ்வொரு வருடத்திலும் இதற்கு ஒத்த வகையில் மாற்றங்கள் ஏற்படுவதுடன் சிறிய வித்தியாசம் ஒன்று காணப்படுகின்றது.

3. இதற்கான காரணம் நிலையான சொத்துக்களின் வட்டி வீதம் குறைந்துள்ளமையாகும்.

4. தொழிற்பாட்டு மீளாய்வு

4.1. பணி செயலாற்றுகை

1. இதுபற்றி 2012ம் ஆண்டிலே இரண்டு சந்தர்ப்பங்களில் வெவ்வேறாக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளன.

2. வரி பெற்றுக் கொள்ளும் போது குறித்த விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அனுமதி தேவைப்படுவதுடன் கடந்த காலங்களில் 05 ஏக்கருக்க மேற்பட்ட காணிகளை உரிமை மாற்றும் போது அமைச்சரவை தீர்மானம் ஒன்றினை பெற்றுக் கொள்வதற்கும் மற்றும் அது பற்றிய மீளாய்வு குழு ஒன்றினை நியமித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதனால் குறித்த வரியினை அறவிடுவதற்கான தேவை ஏற்படவில்லை. பல்லாண்டு காலமாக குறித்த காணி உறுதிகள் வழங்கப்படாத பாரிய அளவிலான மக்களுக்கு ஆணைக்குழுவின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் உரியவாறு உறுதிகளை வழங்கும் பணியினை துரிதப்படுத்தியமையால் குறித்த வருமானம் அதிகரித்துள்ளது.

அவ்வாறே செலுத்தப்படாதிருந்த நட்ட ஈட்டுத் தொகைகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமையும் இத்தொகை அதிகரிப்பதற்கான பிரதான காரணமாகும்.

4.2. முகாமைத்துவத்தின் செயல் இன்மை

1. வரி தொடர்பான ஆவணங்கள் பேணி வருகின்றன. அது இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. விற்பனை செய்த மற்றும் மீதமுள்ள காணிகள் பற்றிய ஆவணங்களை தயாரித்து பின்னர் அது பற்றிய குறிப்புகளை உள்ளடக்குவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

2. குறித்த துறை பற்றி பரீட்சித்து அது பற்றிய தகவல்களை பெற்றுக் கொண்டு அவற்றினை இற்றைப்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

4.3. தொழிற்பாட்டு செயல் இன்மை

1. இந்த வழக்கில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக திருப்தி அடைய முடியாத காரணத்தினால் இது தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தில் இருந்து ஆலோசனைகள் பெற்றுக் கொள்ளப்பட்டன. எவ்வாறாயினும் காணப்படும் சட்டரீதியான தன்மைகளுக்கு ஏற்ப இதனை செலுத்த வேண்டியிருந்த போதிலும் குறித்த தொகை பாரிய அளவாக காணப்பட்டமையினால் இது பற்றி அமைச்சரவையின் அனுமதி ஒன்றினை பெற்றுக் கொள்ளுமாறு ஜனாதிபதி செயலாளர் ஆலோசனை வழங்கியமைனால் குறித்த அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2. இத்தகவல்கள் சரியானவையாகவும் பிழையானவையாகவும் காணப்படுவதனால் சில சந்தர்ப்பங்களில் வரி அறவிடும் பணி 5 வருடங்களுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்படுவதுடன் அதன் போது குறித்த பிரிவின் பெறுகையாக குறிப்பு வைக்கப்படுவதில்லை. குறித்த வரியினை அறவிடுவதற்கு மற்றும் அந்த ஆவணங்களை இற்றைப்படுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

3. அ. குருநாகல் மாவட்டம்

1. குருநாகல் மாவட்டத்தில் 95 காணித்துண்டுகள் என்பது பற்றி குறிப்பிடப்படாமையினால் அது பற்றி உறுதியாக குறிப்பிடுவது கடினமானதாகும். எவ்வாறாயினும் இது பற்றி தொடர்ந்தும் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

2. தனஹேன தோட்டக்காணி

குறித்த கம்பனிக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டு உரிய காலப்பகுதியில் வரித் திருத்தங்களுக்காக அரசாங்கத்தின் பிரதான விலை மதிப்பீட்டாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அது பற்றி வரி மதிப்பீடுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

அதன் பிரகாரம் வரித்தொகையினை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் குறித்த கம்பனியின் பணிகள் டிசைன் (தனியார்) கம்பனியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. நிலுவை வரித்தொகையினை அறவிட்டு முதலீட்டுச் சபையின் அனுமதி பெற்ற ஒரு கம்பனியாக காணப்படுவதனால் டிசைன் தனியார் கம்பனிக்கு 2011ம் ஆண்டின் மதிப்பீட்டு பெறுமதிக்கு குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

3. கொபைகனை தோட்டம்

இத்தொகையில் ஏற்கனவே ரூபா. 100,000 பெறுமதியான தொகை செலுத்தப்பட்டதுடன் மீதித் தொகையினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

4. பன்னலைத் தோட்டம்

அவர்கள் குத்தகை செலுத்தும் பணியினை உரிய முறையாக மேற்கொண்டு வருவதனால் குறித்த தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டள்ளது.

5. கம்மல் வத்த தோட்டம்

இது வேறொரு கம்பனிக்கு துணை குத்தகைக்கு விடுக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்படாமையினால் எவ்வாறாயினும் ஜனதா எப்ரல் எனும் பெயரில் ஏற்கனவே ரூபா. 200,000 பெறுமதியான தொகை செலுத்தப்பட்டுள்ளது. மீதித் தொகை காணப்படுமாயின் அதனை கனிப்பிட்டு அறவிட்டுக் கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

6. நெஷனல்வத்த காணி

உரிய நிலுவை குத்தகை தொகை அனைத்தும் செலுத்தப்பட்டுள்ளமையினால் மேலதிக பொறுப்பு நிதியினை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

7. புனித பிரிஜட் தோட்டத்தில் இரண்டு ஏக்கர் காணியை குத்தகைக்கு விடல்

இது முதலீட்டுச் சபையின் கருத்திட்டமாக காணப்படுவதனால் குத்தகைக்கு வழங்கி அதன் உரிமையினை பெற்றுக் கொள்வதற்கு முன்னர் ரூபா 500,000 பெறுமதியான தொகை செலுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் குறித்த கம்பனி அவர்களது வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிக்கவில்லை. இதன் காரணமாக தனிப்பட்ட உரிமையினை பொறுப்பேற்றுள்ளதுடன் அது நடைமுறைப்படுத்தப்படாமையினால் கருத்திட்டம் ஒன்றிற்கான தொகையினை அறவிடுவது சிக்கல் வாய்ந்ததாக காணப்படுகின்றது.

ஆ. மாதம்பே, பத்தளம் மாவட்ட அதிகார சபை

1. குறித்த ஆவணத்தை தயாரிக்கும் போது தவறுதலாக காணியின் சரியான பெயரில் அதாவது குருநாகல் மாவட்டம் என்பதற்கு பதிலாக புத்தளம் மாவட்டம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. புத்தளம் மாவட்ட அலுவலகத் தகவல்கள் அடங்கிய ஆவணத்தில் அது புத்தளம் மாவட்டத்திற்கு உரியது அல்ல என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே அதனை திருத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

2. ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகளில் சிறிய குத்தகை ஒப்பந்தங்களின் கீழ் மற்றும் பிரதேச செயலாளர்கள் கிராமங்களை விஸ்தரிக்கும் திட்டத்தின் கீழ் பிரதேச செயலாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த காணிகள் 1988-1995 வரையிலான காலப்பகுதியினுள் பல்வேறு விதங்களில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட காணிகளை சட்ட ரீதியாக வழங்குவதற்குகான வாய்ப்புகள் இல்லை. அவ்வாறு வழங்கும் போது அவை அத்துமீறிய காணிகளாக குறிப்பிடப்படும். அவ்வாறே பல்வேறு அரசியல் அதிகாரிகளினால் ஒவ்வொரு

காலகட்டத்திலும் பல்வேறு விதங்களில் இது பற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இவ்வாறு அத்துமீறியுள்ளவர்கள் மற்றும் பதிவாளர்கள் தொடர்பாக 2007ம் ஆண்டின் பொது சுற்றறிக்கையின் கீழ் உரிய ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சிக்கப்பட்டுள்ளது.

3. புத்தளம் மாவட்ட அலுவலகம் 1996ம் ஆண்டிலே மாதம்பை பிரதேசத்தில் நிறுவப்பட்டுள்ளதுடன் அதற்கு முன்னர் இப்பணிகள் குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள வடமேல் மாகாண அலுவலாத்தின் ஊடாகவே மேற்கொள்ளப்பட்டு வந்தது. குறித்த கோப்புகளை தயாரிக்கும் போது 31 காணித்துண்டுகளுக்குரிய கோப்புகள் புத்தளம் மாவட்ட அலுவலத்திற்கு ஒப்படைக்க தவறியுள்ளமை தெளிவாகின்றது. அவ்வாறான காணித்துண்டு தொடர்பாக வபிரதான அலுவலகத்தின் ஊடாக தொடெர்பினனை ஏற்படுத்தி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. காணப்படுகின்ற தகவல்களை உச்ச அளவில் தேடிப் பெற்றுக் கொள்வதற்கு வஅற்றினை ஆவணங்களில் உள்ளடக்குவதற்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

4. காணி ஆவணங்கள் முழுமையாக தயாரிக்கப்பட்டில்லாமையால் அது பற்றிய தகவல்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனால் இத்துறையில் இனங்காணப்படாத காணிகள் இருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. கொட்டு கச்சிய காணியின் 3562 ஏக்கர் அளவிற்கு 1:1 படிவம் தவிர்ந்த வேறு எந்த ஆவணமும் இல்லை. எனவே, காணப்படும் தகவல்களுக்கு ஏற்ப இது கால்நடை வழங்கல் அபிவிருத்தி சபைக்கு சொந்தமான கொட்டுகச்சி பண்ணையின் ஒரு பகுதியாக இனங்காணப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

5. திவுள் குருந்து வத்த

இது தற்போது ஆணைக:குழுவின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

6. ராஜபக்ஷ வத்த

1. ஆணைக்குழுவுக்கு சொந்தமான 147ஏக்கர் ரூட் 2. 10 பேர்ச்சஸ் அளவான கஹட்ட குளம எனும் இந்தக் காணி அப்போது வென்னப்புவ பாராளுமன்ற உறுப்பினர் அபோன்சு பொன்சேகா அவர்களின் முன்மொழிவின் பிரகாரம் வரையறுக்கப்பட்ட கம்மல்பத்து பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு 1995.06.19ம் திகதி இதன் உரிமை வழங்கப்பட்டுள்ளது. அது பற்றி ஆணைக்குழுவின் எழுத்துமூல தீர்மானம் தொடர்பாக கோப்புகளில் தகவல்கள் எதுவும் இல்லை.

குறித்த காணி மேற்படி பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்ட போதிலும் உரியவாறு குத்தகை ஒப்பந்தம் ஒன்று வழங்கப்படாமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே இந்தக் காணி ஆணைக்குழுவின் அனுமதியின்றி குறித்த பலநேக்கு கூட்டுறவு சங்கத்தைச் சேர்ந்த 50 உறுப்பினர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக ஆவணங்களளில்

குறிப்பிடப்பட்டுள்ளதுடன் 1998.08.05ம் திகதிய கடிதம் ஒன்றின் மூலம் ஆணைக:குழுவுக்கு குறித்த காணியை மீண்டும் ஒப்படைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் பொது முகாமையாளரினால் தலைவருக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக தொடர்ந்தும் கடிதங்கள் பறிமாற்றப்பட்டு வருகின்றமை தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும் இந்தக்காணி 1996ம் ஆண்டிலே விலைமதிப்பீட்டாளர் திணைக்களத்தினால் அளவிட்டு இல. 1717 உடைய காணி வரைபடத்தை தயாரித்துள்ளதுடன் 1979ம் ஆண்டின் 43ம் இலக்க காணி வழங்கல் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் இதன் உறுதிகள் தயாரிக்கப்பட்டு அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சட்ட ரீதியாக அவ்வாறு செயற்பட வேண்டி ஆணைக்குழுவுக்கு ஏற்பட்டுள்ளதுடன் அங்கு காணப்படும் 158 துண்டுகளில் சில காணித்துண்டுகளுக்கு பிரதேச செயலாளரினால் தயரிக்கப்பட்ட பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள தொகையினரை சட்ட ரீதியாக ஆக்கும் பொருட்டு ஆணைக்குழுவின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2. இக்காணியின் பயன்பாட்டுக் கட்டணத்தை செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் காணியின் உரிமை தொடர்பாக சட்ட ரீதியான பிரச்சினை காணப்படுவதால் குறித்த தரப்பினை அழைத்து அது தொடர்பாக கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது. காணப்படும் சிக்கல்களை தீர்த்துக் கொண்டதன் பின்னர் இது பற்றிய மேலதிக நடவடிக்கைககள் எடுக்கப்படும்

3. 1302 காணி வரைபடத்தை தயாரிக்கும் பணி இடம்பெற்று வருகின்ற நிலையில் காணித்துண்டுகளான 71,72,73,77 என்பவற்றிற்கு பெயரிடப்பட்டுள்ள அதில் வசித்து வருவோர் இல்லாமையால் அதன் உரிமை பற்றி மாத்திரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் காணி வரைபடம் தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் அதை அனுபவித்து வந்தவர்கள் அளவீட்டு கட்டணம் செலுத்தாமையினால் அந்த வரைபத்தில் அவர்களது பெயர் உள்ளடக்கப்பட்டில்லை. எனினும் 2009.10.28ம் திகதி தயாரிக்கப்பட்ட குறைநிரப்பு படிவத்தின் பிரகாரம் அதை அனுபவித்து வந்த அனைவரும் பெயாகளும் குறித்த பட்டியிலல் உள்ளடக்கப்பட்டு 2010.01.21ம் திகதி பணிப்பாளர் / அளவை மற்றும் ஒதுக்கீடு மூலம் இது பூரணப்படுத்தப்பட்டுள்ளது. இதில் வசிப்போர் பற்றி உறுதிப்படுத்தப்படாத போதிலும் மேற்படி குறைநிரப்பு செயற்பாட்டின் பிரகாரம் 2007ம் ஆண்டிலன் பொது சுற்றறிக்கையின் படி குறித்த நபர்களின் உரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, இந்தக் காணித்துண்டுகளுக்காகவும் சட்டபூர்வமான அறுதி உறுதி காணி உறுதிப்பத்திரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

7. குசல பீ. வத்த

இக்காணியின் உரிமை தொடர்பாக 115 ஏக்கர் பொறுப்பேற்கப்பட்டுள்ளது. பின்னர் இது ஆரம்ப காணி வரைபடம் இல. 715இன் பிரகாரம் அளவிடும் போது 117 ஏக்கராக இனங்காணப்பட்டுள்ளது. பின்னர் 1975ம் ஆண்டில் 203 துண்டுகளாக பிரிப்பதற்கான நில அளவை கட்டளை ஒன்று வழங்கப்பட்டுள்ளதுடன் அது நிறைவேற்றப்பட்டில்லை. இக்காணிகள்

அபிவிருத்திக்காக வாலு எக்வா கம்பனியிடம் ஒப்படைக்கப்பட்டள்ளது. அதன் பின்னர் வேறு அத்துமீறி பிரவேத்துள்ளமை காரணமாக ஆரம்ப நிலை நீதிமன்றத்தில் அது பற்றிய வழக்கொன்று தொடுக்கப்பட்டுள்ளதுடன் அதன் போது அத்துமீறி பிரவேசித்தவர்களின் உரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. அதன்படி குறித்த காணியில் அத்துமீறி பிரவேசித்துள்ள 50 ஏக்கர் அளவுக்கு அரசியல் அதிகாரிகளின் தலையீட்டுடன் 56 துண்டுகளாக பிரிக்கப்பட்டு குறித்த நபர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. நடைமுறையில் இவ்வாறான நிலைகள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் குறித்த காணிப் பிரித்தல் பணி முறையாக இடம்பெறவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளமை சரியானதாகும். மீதமுள்ள 67 ஏக்கர் காணியை எக்வா வாலு கம்பனியின் பயன்பாட்டுக்காக வழங்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக இதுவரையில் 17லட்சத்திற்கு மேற்பட்ட வரி அறவிடப்பட்டுள்ளது. மீதி வரித்தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

8. சாந்த ஹெலேனா வத்த

இது 2066 காணி வரைபடத்தின் பிரகாரம் 20 ஏக்கர் பயிர்நிலமாகவும் 50 ஏக்கர் வெற்று நிலமாகவும் அமைந்துள்ளது. வயல் நிலமாக குறிப்பிடப்பட்டுள்ள பயிரடப்படாத நிலத்தில் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் பின்னொரு காலத்தில் கொல எலிய குளம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இப்பகுதி பள்ளம பிரதேச செயலாளரினால் உரிமை கொள்ளப்பட்டுள்ளதுடன் 2003ம் ஆண்டிலே இது பற்றிய நில அளவை கட்டளைகள் கோரப்பட்டுள்ள போதிலும் அது அமுல்படுத்தப்படவில்லை. அப்பகுதியினை பிரதேச செயலாளருக்கு நில அளவைப் பணிகளை மேற்கொண்டு பொறுப்பேற்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

9. கரவட்டிக் குளம், இராமன் குளம், பாலமான் குளம் மற்றும் உனாலி பிரதேச காணிகள்

வ/210 அறிக்கையின் மூலம் உறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள இராமன் குளம் காணியின் 50 ஏக்கர் அளவான பிரதேசத்தை அளந்து வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் ஊடாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனினும் குறித்த காணியின் உரிமையினை பெற்றுக் கொள்வதற்கு குறித்த நபரின் உரித்துடையோர் இனங்காமை காரணமாக அவர்களது சட்டரீதியான உறுதியினை பரிமாற்றம் செய்யுமாறு புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த ஏனைய இடங்களில் இருந்து காணிகளை வழங்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கேற்ப நிந்தனி நடுவத்த எனும் தோட்டம் மற்றும் தோடுவாவ தோட்டம் ஆகிய பிரதேசங்களின் காணிகளைக் கோரியுள்ள நபர்களுக்கு அக்காணிகளில் இருந்து 25 ஏக்கர் பிரதேசத்தை அளந்து 2004.09.30ம் திகதி அதன் உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறு உரிமை வழங்கப்பட்டதன் பின்னரும் குறித்த காணியில் அத்துமீறி சிலர் பிரவேசித்து அவர்கள் வேறு காணிகளை பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். அதன்படி அட்டிவில்லுவ எனும் காணியில் 48 ஏக்கர் அளவான பிரதேசத்தை அவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வ/210 கூற்றின் பிரகாரம்

அவர்களது சட்டரீதியான உறுதித்தன்மைக்கு ஏற்ப காணிகளை பெற்றுக் கொடுப்பதற்கு ஆணைக்குழுவானதுபல சந்தாப்பங்களில் முயற்சித்த போதிலும் குறித்த காணிகளை பொறுப்பேற்பதற்கு அல்லது பாதுகாப்பதற்கு அவர்கள் தவறியுள்ளமையால் அவர்களுக்குரிய சட்டரீதியான உறுதி வழங்கும் பணியானது அவர்களது கவனயீனம் காரணமாக தாமதித்துள்ளது.

மேலும் கு/210 கூற்றின் பிரகாரம் சட்டரீதியான உறுதிப்பற்றி முதலில் வர்த்தமானியின் அறிவிக்கப்பட்டுள்ள காணிகளை காணி ஆணைக்குழுவினால் வெளிக்கள பரிசோதனைக்கு உட்படுதி அதன் பிரகாரம் அக்காணிகள் தொடர்பாக எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

10. மாட்டின் வத்த

விசேட இல. கோ./2282/பு/2 இன் கீழ் ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள மாட்டின் வத்த எனும் தோட்டத்தின் 15 ஏக்கர் பிரதேசத்தை குத்தகை அடிப்படையின் மீது பெற்றுக் கொடுப்பதற்கு 1979ம் ஆண்டு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் குறித்த நிறுவனங்க்ளினால் அக்காணித்துண்டுகளை சட்டரீதியாக உரிமை கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அக்காணித்துண்டுகள் சிறு கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் காணப்படுகுினற் பலநோக்கு நிறுவனங்களது தொழில் முயற்சிகளை நடத்துவதற்காக பெற்றுக் கொடுக்கப்பட:டள்ளது. அதன் பிரகாரம் பல நிறுவனஙட்களினால் தொில் முயற்சிகளை நடாத்திச் செல்வதற்கான தற்போது குறித்த நிறுவனத்தினால் ஆணைக்குழுவினால் சட்டரீதியான உரிமையினை பெற்றுத்தருமாறு வேண்டுகோள்விடுக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப குறித்த நபர்கள் மற்றும் சிறு கைத்தொழில் என்பவற்றுடன் கலந்துிரையாடி குறித்த நிறுவுனங்களுக:கு இந்த ஆணைக்குழுவினால் சட்டரீதியான குத்தகை உரிமையினை வழஙு:குவதற்கு மற்றும் அதனற்கான பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

11. கரம்பேவத்த

புத்தளம் மாவட்டத்தின் கல்பிட்டி பிரதேசத்தில் அமைந்துள்ள கரம்பேவத்த எனும் காணியில் 200 புடவைத் தொழிற்சாலைகளை அமைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் 5 ஏக்கர் ரூட் 0 பேச்சர் 0 அளவான காணி சுப்ரீம் காமன்ட் நிறுவனத்திடம் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்காக ஆணைக்குழுவினால் 3446 இலக்கமுடைய ஆணைக்குழு பத்திரத்தின் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் ஒரு வருடத்திற்குரிய குத்தகை பணமும் செலுத்தப்பட்டுள்ளது. அதில் நிலுவையாக காணப்படுகின்ற ரூபா. 151,131 பெறுமதியான தொதகையினை செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ள போதீலும் இது வரை அது செலுத்தப்படவில்லை. அதன் பின்னர் கைத்தொழில் அமைச்சின் வேண்டுகேளரின் பிரகாரம் அந்நிறுவனம் செலுத்தவிருந்த நிலுவை குத்தகை தொகையினை செலுத்துவதற்கு கொரியான எக்ஸ்போட் நிறுவனம் முன்வந்து செலுத்தியுள்ளது. கைத்தொழில் அமைச்சின் சிபாரிசின் மீது கொரியான எக்ஸ்பேடர்

நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள போதிலும் இதுவரையில் ஆணைக்குழுவினால் ஒப்பந்தங்களில் கைச்சாத்திடப்படவில்லை.

அதன் பின்னர் கொரியான எக்ஸ்போட் நிறுவனத்தினாலும் செலுத்த வேண்டியிருந்த குத்தகை தொகையை செலுத்தாமல் விட்டுள்ளதுடன் மேலும் ஆணைக்குழுவின் அனுமதியின்றி ரெட் ஹாட் மற்றும் ரிச்சிலைன் பெசன் ஆகிய நிறுவனங்களுக்கு விற்பனை செய்துள்ளதாக மாவட்டப் பணிப்பாளர் 2006.05.23ம் திகதி அறிவித்துள்ளார். அதன் பின்னர் ரெட்ஹாட் நிறுவனம் 2007.03.26ம் திகதி வரையிலான நிலுவைத் தொகையை செலுத்தியுள்ளது.

12. லெச்சுமி வத்த மற்றும் வலஹாபிட்டியவத்த

1975ம் ஆண்டின் கடிதத்தின் பிரகாரம் அவ்வாறான வழங்கல் ஒன்று தொடர்பாக கோப்புகளில் எதுவித தகவல்களும் இல்லை. தொடர்ந்தும் குறித்த கோப்புகளை பரீட்சித்த போது மொத்த காணியில் சட்டரீதியான உறுதி மற்றும் உறுதிப்படுத்தப்படாத உறுதி எனபன தொடர்பான தகவல்கள் பெறப்பட்டுள்ளதுடன் குறித்த கம்பனியிடம் 1991.11.30ம் திகதி ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் ஆணைக்குழுவிடம் எவ்வித மீதிக் காணியும் இல்லை.

13. கும்புட்டு குழிய வத்த

1. ஆணைக்குழு சட்டம் மற்றும் அதிகாரங்களின் பிரகாரம் ஆணைக்குழுவானது அது பற்றிய தீர்மானம் ஒன்றினை மேற்கொண்டள்ளது. மேலதிக கட்டணமாக ஒரு தொகையினை செலுத்துமாறு அறிவித்ததன் பின்னர் நியாயமான காரணங்கள் இன்றி வேண்டுமென்றே அத்தொகையினை விடும் பட்சத்தில் அவ்வாறு செலுத்தமால் விடும் காலப்பகுதிக்கு 10வீத மேலதிக கட்டணம் ஒன்றினை செலுத்துமாறு ஆணைக்குழுவினால் அறிவிக்கப்படுவது வழக்கம். இது ஆணைக்குழுவின் தனிப்பட்ட தீர்மானமாகும். இதற்காக வேறு சட்ட ரீதியான ஏற்பாடுகள் எதுவுமில்லை. எவ்வாறாயினும் குறித்த தொகையினை செலுத்தாது விடுவது தொடர்பாக நியாயமான மற்றும் ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களை முன்வைக்கும் பட்சத்தில் குறித்த மேலதிக தொகையினை அகற்றுவதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கும்.

2. குறித்த 74 ஏக்கர் காணிப்பிரதேசம் எல்பெக்ஸ் எக்வா கம்பனிக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. அவர்களினால் குறித்த தொகை செலுத்தப்படாமையினால் அது பற்றி சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட 74 ஏக்கர் காணியில் 20 ஏக்கர் காணியை ஆணைக்குழுவினால் ஒரே நபருக்கு 10 ஏக்கர் வீதம் ஒரே நாளில் விற்பனை செய்துள்ளமை பற்றி எதுவித தகவல்களும் இல்லை.

3. கும்புட்டுக்குழிய காணியில் இருந்து 8.094 ஹெக்டேயர் பெறுமதியான அளவினை குத்தகைக்கு விடல்

நிலுவைத் தொகையினை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

14. காரணாவ வத்த – 01 ஏக்கர் ரூட் 2 காணியின் அளவு

இது தொடர்பாக குறித்த நிலுவை குத்தகை தொகையை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இ. கண்டி மாவட்ட காணி சீர்திருத்த அதிகார சபை

1. முறையான காணி ஆவணம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே தற்போது அது தயாரிக்கப்பட்டு வருகின்றது. எவ்வாறாயினும் தற்போது கண்டி மாவட்டத்திற்கு காணிகள் தொடர்பாக காணப்படுகின்ற தரவுகள் மீது பொதுவான ஆவணம் ஒன்றினை பிரதான அலுவலகத்தினால் தயாரித்து மாவட்ட அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டள்ளது. அந்த ஆவணத்தின் பிரகாரம் பிரதேச செயலக ரீதியில் குறித்த காணிகளை ஒதுக்கி பேணி வருவதற்காக மாவட்ட அலுவலகங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளன.

2. குறிப்பிடப்பட்டுள் காணித்துண்டுகள் 12 இனங்காணப்பட்டுள்ளதுடன் அவை கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த சில கோப்புகள் பிரதான அலுவலகத்தில் காணப்படுகின்றமையால் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் சில நுவரெலியா மாவட்ட காணி அலுவலகத்திற்கு சொந்தமானவையாகும். அதன் பிரகாரம் க/385, க/496, க/542, க/560, க/360, க/600, க/620 என்பன கண்டி மாவட்டத்திற்கு சொந்தமானவையாக காணப்படுவதுன் அக்காணிகளுக்குரிய கோப்புகள் தலைமை அலுவலத்தில் காணப்படுகின்றன. அதன் பிரதிகளை தலைமை அலுவலகத்தில் இரந்து பெற்றுக் கொள்ளுமாறு மாவட்ட பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்'கப்பட்டுள்ளது. ஏனைய கோப்புகளான க/591, க/623, க/673, க/675, க/10804 என்பன நுவரெலியா மாவட்டதிற்கு செந்தமானது என குறிப்பிட விரும்புகிறேன்.

3. ஆணைக்குழுவினால் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை மற்றும் அரச பெருந்தோட்ட கூட்டத்தாபனம் என்பவற்றுக்கு உரிமை வழங்கிய காணிகள் பற்றிய ஆவணம் மற்றும் அவை மீள பொறுப்பேற்கப்பட்டவை தளொடர்பான வர்த்மானி அறிவித்தல் என்பன உரிய திகதிகளுடன் ஆவணம் ஒன்று பேணி வரப்படுவதுடன் அதனை இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் தற்போது பலவந்தமாக அத்துமீறி பிரவேசித்துள்ள வதிவாளர்களுக்கு அது பற்றிய உரிமைகள் தடுக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு பல்வேறு வழிமுறைகளும் பயன்படுத்தப்படுகின்றன. இந்நிலையில் இற்றைக்கு 10 அண்டுகளுக்கு முன்னர் முழு அளவில் அத்துமீறி பிரவேசித்தவர்கள் தொடர்பாகவே பிரச்சினைகள் எழுந்துள்ளன.

4. குறித்த குத்தகை ஆவணங்களை இற்றைப்படுத்தி நிலுவை குத்தகை தொகையினை அறவிட்டுக் கொள்வதற்கு ஒவ்வொரு வரி செலுத்துனர்களுக்கும் தனித்தனியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

5. அம்பலமான வத்த காணி

1. இக்காணியானது நீண்டகால அத்துமீறி பிரவேசித்துள்ளவர்கள் மற்றும் விகாரை, கோவில் மற்றும் பாடசாலை, தமிழ் லயன் அறைகள் உள்ளிட்டோர் உரிமை கொண்டாடி வருவதுடன் தற்போது அவர்கள் சட்டரீதியான உரிமையாளர்களாக மாற்றும் பொருட்டு மாவட்ட செயலகம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

அதன் பிரகாரம் ஒவ்வொரு நபர் மற்றும் நிறுவனம் என்பவற்றிற்கு தனித்தனியாக அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன. குறித்த தகவல்களை ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்து ஆணைக்குழு சட்டம் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

2. காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவுக்கு காணிகளை பொறுப்பேற்கும் போது மைத்திரி கருணாரத்ன என்பவருக்கு சொந்தமான காணியில் இருந்து 89ஏக்கர் 2ரூட் 2பேர்ச்சஸ் அளவான காணி தவறுதலாக ஆணைக்குழுவுக்கு பொறுப்பேற்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக கருணாரத்ன அவர்களுக்கு மாற்றுக் காணி ஒன்றினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்குறிப்பிட்ட காணியில் இருந்து குறித்த அளவினை அளவிட்டு காணி வரைபடத்தினை தயாரிக்கும் பணி பூர்த்தியடைந்துள்ளது. அதன் பின்னர் குறித்த காணியின் உரிமையினை பொறுப்பேற்குமாறு சம்பந்தப்பட்ட நபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது அக்காணியில் அத்துமீறி பிரவேசித்துள்ளவர்கள் உரிமை கொண்டாடி வருவதனால் அக்காணியை பொறுப்பேற்பதற்கு அவர்கள் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

3. 100 நாட்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பொதுமக்களிடையே பகிர்ந்தளிப்பதற்காக 50 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது. 3 ஏக்கர் பெறுமதியான அளவு காணியில் அத்துமீறி

பிரவேசித்துள்ளவர்கள் பயன்படுத்தி வருவதனால் அவர்களை சட்ட ரீதியாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் அனமதியின்றி வனபாதுகாப்பு திணைக்களத்தினால் பைனஸ் மரங்கள் நடப்பட்டுள்ளன. இது தொடர்பாக வன பாதுகாப்பு திணைக்களத்திற்கு சொந்தமான கண்டி அலுவலகத்துடன் கலந்துரையாடப்பட்டதுடன் அது பற்றிய அறிக்கையை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்குமாறு கண்டி பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.
தற்போது இது தொடர்பாக வன பாதுகாப்பு திணைக்களத்துடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4. ஜனவசமவிடம் ஒப்படைத்தல்
    1.
    2. மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை மற்றும் அரச பெருந்தோட்டக கம்பனி என்பவற்றிற்கு ஆணைக்குழுவினால் ஒப்படைக்கப்பட்ட காணிகளை தனிநபர்களுக்கு அறுதி உறுதி ஊடாக பெற்றுக் கொடுப்பது சட்ட ரீதியாக இயலாது என ஆணைக்குழு அறிவித்துள்ளது, வர்த்தமானி அறிவித்தல் மூலம் அவர்களிடம் ஒப்படைத்த அந்த உறுதிகளுக்கு உரிய நடவடிக்கை எடுப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இப்பிரச்சினையானது பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

    3. காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகள் மற்றும் இயந்திர சாதனங்'கள் என்பன ஜனவசம அமைப்பினால் பயன்படுத்தி வருகின்ற காலப்பகுதியினுள் அவர்களது தேவைக்கு ஏற்ப வெளிநபர்களுக்கு விற்பனை செய்துள்ளது. இது தொடர்பாக எனைய பிரதேசங்களில் காணப்படுகின்ற இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டு வருவதுடன் அதற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் தீர்மானங்களின் மீது செலுத்த வேண்டிய நட்ட ஈடு தொடர்பாக எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

5. 1. கிறிஸ்ன மைனின் தனியார் கம்பனிக்கு உரிமை வழங்கல்.
இந்தக் காணிகளின் குறித்த பகுதிகளும் 2004-2005 காலப்பகுதியினுள் வழங்கப்பட்டவையாக காணப்படுவதுடன் அக்காலப்பகுதியினுள் ஒரு சில காணிகள் அமைச்சரவையின் தீர்மானித்தின் மூலம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதுவும் அவ்வாறான தீர்மானத்திற்கு உட்பட்டதாகும். அதன்படி மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இக்காணி தொடர்பாக மாடவட்ட அலுவலகத்தில் பெற்றுக் கொண்ட அறிக்கையின் பிரகாரம் உத்தேச 10 ஏக்கர் காணி சிலிக்கா உடைக்கும் பணிகள் இடம்பெறுவதில்லையென மாவட்ட பணிப்பாளர் அறிவித்துள்ளார். மேலும் நில அளவைப் பணிப்பாளரினால் மேற்கொள்ளப்பட்ட வெளிக்கள பரிசோதனையின் பிரகாரம் இக்காணியை கருத்திட்டங்களுக்கு ஒப்படைப்பதன் மூலம் சூழலின் ஏற்படக்கூடிய குழிகள் காரணமாக காணியில் சமநிலையில் மாற்றம் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது எனவும் இந்நிலையானது திருப்திகரமானதாக அமையாது எனவும் குறிப்பிட்டள்ளார். ரூபா 200,000 அபெறுமதியான முற்பணம் ஒன்றினை பெற்றுக் கொண்டுள்ள போதிலும் அமைச்சரவையினால் தடை செய்யப்பட்டுள்ளமையால் குத்தகை அடிப்படையில் இதனை தொடர்ந்தும் செலுத்த முடியாதுள்ளது. அதன் பிரகாரம் குத்தகை பணமும் அறவிடப்படவில்லை.

2. இந்த விற்பனையானது 1983ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அக்காலப்பகுதியில் 10 ஏக்கர் உச்ச வரையறையின் கீழ் பல்வேறு காணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 1994ம் ஆண்டின் பின்னர் இப்பெறுமதியினை 2 ஏக்கர் வரையில் உச்ச அளவாக குறைப்பதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்வுகள் 1983ம் ஆண்டிலே இடம்பெற்றுமையால் குறித்த காலப்பகுதிக்குரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையால் மேற்படி விற்பனையுடன் தொடர்புடையதாக சட்ட நவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஒன்று தற்போதைக்கு இல்லை.

3. குறித்த தரப்பினரை அழைத்து கலந்துரையாடிதன் பின்னர் குறித்த தொழில் முயற்சியை இடைநிறுத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

7. ஏனைய கருத்திட்டங்களுக்காக காணிகளை ஒப்படைத்தல்

1. 2002-2006 காலப்பகுதியினுள் அமைச்சரவையினால் தடை செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்களில் ஒன்றாக கணப்படுவதனால் மீண்டும் அமைச்சரவைத் தீர்மானம் மூலம் அதில் திருத்தம் கொண்டு வரும் வகையில் வரி அறவிட முடியாதுள்ளது. மேலும் அது தொடர்பாக மாற்று வழிகளை கையாளும் உரிமையும் ஆணைக்குழுவுக்கு இல்லை.

2. 1994ம் ஆண்டின் பின்னர் ஆகக்கூடியது 2 ஏக்கர் காணி பெற்றுக் கொடுப்பதற்கு தீர்முானிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் 10 ஏக்கர்கள் வரையில் ஆணைக்குழுவினால் விற்பனை செய்யப்பட்டுள்ளன. ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற குறித்த காணியை தொழில் முயற்சிகளை நடாத்துவதற்காக பயன்படுத்தும் போது அதுபற்றிய அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ள வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளதுடன், அதுவரையில் வரி சம்பந்தமான ஒப்பந்தங்கள் எதுவும் வழங்கப்படவில்லை.

8. அம்பலமான தோட்ட தொழிலாளர்களுக்கான நட்ட ஈடு வழங்கல்

தோட்ட தொழிலாளர்களுக்கான அம்பலமான தோட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ள காணி உறுதிகள் மற்றும் அதற்கான பெயர்கள் என்பன தயாரிக்கப்பட்டுள்ளன. தற்போது சிறிய தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபையினால் அது தொடர்பாக எம்மிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளதுடன் தேயிலை பயிர்ச்செய்கைக்கான உதவுத் தொகை வழங்குவதற்கான உரிமை பத்திரத்தை பெற்றுத்தருமாறும் வேண்டுகோள்விடத்துள்ளனர்.

எனினும் குறித்த காணியை சட்டரீதியான மாற்றும் வகையில் காணி சீர்திருத்த ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் பணம் அறிவிடுதல் வேண்டும். குறித்த பணத்தை செலுத்துமாறு அக்காணித்துண்டுகளில் வசிப்போரை தெளிவுபடுத்தியுள்ள போதிலும் அவர்கள் அதனை செலுத்துவதற்கு தவறியுள்ளமையால் சிறிய தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையினால் குறித்த காணித்துண்டில் வசிக்கின்றவர்களுக்கு வழங்குகின்ற பயர்ச்செ சய்கைக்கான உதவுத் தொகையழில் இருந்து குறித்த தொகையினை குறைத்துக் கொண்டு காணி உறுதிகளை எழுதுவதற்கான ஆவணங்கள் மாவட்ட அலுவலகங்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இது வரையில் 48 காணித்துண்டு உரிமையாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதுடன் அதில் 18 பேருக்கு காணி உறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. மீதி காணி உரிமையாளர்கஙளுக்கு உறுதிகளை வழங்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

9. 100 நாள் நிகழ்ச்சித்திட்டத்தின் நில அளவைக்கு உட்படுத்தப்பட்ட காணிகள்

அம்பலமான தோட்டத்தில் இருந்து 50 ஏக்கர் பெறுமதியான பகுதி நில அளவைக்கு உட்படுத்தப்பட்டு பிரிக்கப்பட்டுள்ளதுடன், அப்போதைய அரசியல் அதிகாரிகளினால் அக்காணி 25 குடும்பங்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. அன்று முதல் இன்று வரை இக்காணியில் வசித்து வருகின்ற மேற்படி நபர்கள் அத்துமீறி பிரவேசித்தவர்குள் அல்ல எனவும் 100 நாள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அவர்களுக்கான காணி உறுதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அதில் உள்ளடக்கப்படாதவர்களுக்கு குறித்த நடைமுறைகளுக்கு ஏற்ப காணி உறுதிகளை வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தற்போது அம்பலமான தோட்டத்தின் சிலிக்கா காணப்படும் பகுதிகளை குத்தகைக்கு வழங்கும் போது அதனை அளவிடாது குறித்த பெறுமானத்திற்கு ஏற்ப குத்தகைப் பணம் அறவிடப்படுகின்றது. எனவே இதன் மூலம் அதிக இலாபம் பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

6. மாகந்த வத்த காணி

மக்கள் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி செய்யப்படாத காணிகளை மீண்டும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடம் பொறுப்பேற்பது தொடர்பாக ஜனாதிபதி செயலகத்துடன் கலந்துரையாடப்பட்டு வருகின்றது. குறித்த காணிகளை வேறு எந்தவித அபிவிருத்தி பணிகளுக்கும் பயன்படுத்தாது வெற்றுக் காணிகளாக காணப்படும் சந்தர்ப்பங்களில் அவர்களது இனக்கப்பாட்டுடன் அல்லது அதற்கு தமது எதிர்ப்பில்லை என்று கூறும் பட்சத்தில் அபிவிருத்தி அல்லது வேறு பணிகளுக்காக மேற்படிக காணிகள் பயன்படுத்தப்படுகின்றன.

காணிகளை குத்தகைக்கு வழங்குவதற்கு முன்னர் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குவிதிகள் மற்றும் செயற்பாடுகளை பூரணப்படுத்துவதற்கு குறிப்பிடத்தக்க கால அவகசாம் தேவைப்படுகின்றது. அதாவது குறித்த காணிக்குரிய மதிப்பீட்டினை பிரதான விலை மதிப்பீட்டாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். காணியை அளவிட்ட பின்னர் 5 ஏக்கருக்கு மேற்படின் கருத்திட்ட குழுவிடம் சமர்ப்பித்து அனுமதியினை பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறே குத்தகையாளர்களினால் சம்பந்தப்பட்ட தகவல்களை வழங்குவதற்கு தாமதம் ஏற்படுவதனாலம் மேற்படி தாமதம் ஏற்படுகுின்றது. எனவே, குத்தகை தொகையினை அறவிடுவதற்கு குறித்த காணியை ஒப்படைத்த திகதியில் இருந்தே நடவடிக்கை எடுக்கக் கூடியதாக உள்ளது. எவ்வாறாயினும் இங்கு குறித்த உரிமை வழங்கப்பட்டுள்ள போதிலும் 2011.09.01ம் திகதி முதல் குறித்த செயற்பாடுகளை ஆரம்பிப்பது தொடர்பாக கவனம் செலுத்தி 2009தம் ஆண்டுக்குரிய விலை மதிப்பீடுகளை பெற்றுக் கொண்டு 2009ம் ஆண்டு முதல் வரி செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் முதல் 5 ஆண்டுகளான 2009-2014 வரையிலான காலப்பகுதிக்குரிய வரி செலுத்துமாறு 2011.06.30ம் திகதி ஜி.டி.ஏ. இன்டர்நெஷனல்

கம்பனிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 5 ஆண்டுகளுக்குரிய வரியினை ஒரே முறையில் அல்லது வருடாந்தம் செலுத்த முடியும். டீமேற்படி அனைத்து விடயஙற்களையும் கவனத்தில் கொண்டு 2011.08.04ம் திகதி நிறைவேற்று பணிப்பாளருடன் ஜே.டி.ஏ. இன்டர்நெஷனல் அதிகாரிகளுடன் கலந்துரையாடி அதன் போது எட்டப்பட்ட இணக்கப்பார்டின் மீது வருடாந்த வரித்தொகை மற்றும் அரசாங்க விலை மதிப்பீட்டு கட்டணமாக ரூபா. 226,311 பெறுமதியான தொகையினை செலுத்துவதற்கும் மீதித் தொகையான ரூபா 768,000 தொகையினை இரண்டு தவணைகளில் அதாவது 2012.07.01 மற்றும் 2013.07.01 ஆகிய திகதிகளில் செலுத்துவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இ.து பற்றிய மேலதிக நடகடிவ்ககைகளை எடுக்குமாறு குறித்த அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளன.

7. கோணாடிக்க வத்த

காணி சீர்திருத்த சட்டத்தின் 27 (அ) 4வது பிரிவின் கீழ் 2001 ஜனவரி 23ம் திகதி மற்றும் இல. 1168/16 உடைய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் குறித்து ஒதுக்கப்பட்ட 56,447 ஹெக்டேயர் அளவுடைய காணியை காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடம் மீள ஒப்படைக்குமாறு 2009.07.22ம் திகதி பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளருக்கு கடிதம் மூலும் அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஜனாதிபதி அவர்களுக்கும் விளக்கமளிக்கப்பட்டுள்ளதுடன் பெருந்தோட்ட கம்பனிகளினால் சட்டரீதியான அதிகாரத்துடன் அல்லது அதிகாரமின்றி நிர்வகித்து வருகின்ற காணிகள் தொடர்பாக இவ்வாறான பிரச்சினைகள் காணப்படுவதுனட் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் மற்றும் கடிதங்கள் காரணமாக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதில் சிக்கல்கள் காணப்படுகினற்ன.

8. அட்டபாகே வத்த – 39 ஏக்கர் 2 ரூட் காணியை குத்தகைக்கு விடல்.

   1. விசேட இல. கொ/671, கொ/ 672 கீழ் காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள அட்டபாகே வத்த 39 ஏக்கர் 2 ரூட் அளவுடைய காணியை 2003.12.01ம் திகதி முதல் ஏ.எம்.பீ.பி. அத்தபத்து என்பவரிடம் அதன் உரிமையினை ஒப்படைத்து முற்பணமாக ரூபா. 50,000 பெறப்பட்டுள்ளது. அதன் பின்னர் அவரினால் டபிள்யு.என்.ஜே.விஜேதுங்க என்பவருக்கு 2007.07.10ம் திகதி துணைக்குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த வழங்கல் தொடர்பாக நிறைவேற்று பணிப்பளாரினால் பரீட்சித்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் தற்போது

பயன்படுத்தி அபிவிருத்தி செய்யப்படுகின்ற டபிள்யு.என்.ஜே. விஜேதுங்கள என்பவருக்கு முறையாக குத்தகைக்கு விடுவதற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறாயினும் 2002-2004 காலப்பகுதியினுள் மேற்கொள்ளப்பட்ட ஒப்படைத்தல் காரணமாக அமைச்சரவை துணைக்குழுவினால் இடைநிறுத்தம் செய்யும் ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அது பற்றிய திருத்தம் செய்யப்பட்ட அமைச்சரவை தீர்மானம் கிடைத்த பின்னர் நடவடிக்கை எடுப்பதற்கு கருத்திட்ட பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி குறித்த ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப செயற்படல் மற்றும் நிலுவை குத்தகை தொகை தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு வாய்ப்புள்ளது. இது தொடர்பாக சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படாமையால் இடைக்கால குத்தகைக்கு விடல் சட்ட விரோதமான செயற்பாடாக காணப்படுவதனால் எதிர்வரும் காலங்களில் திருத்தம் செய்யப்பட்ட அமைச்சரவை தீர்மானம் கிடைக்கப்பெற்ற பின்னர் இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

2. மேற்படி பதிலின் மூலம் அது பற்றி விளக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிடப்பட்டவாறு சட்டரீதியாக வரி அறிவிடும் பணி இடம்பெறவில்லை. இது தொடர்பாக குத்தகையாளரை அகற்றுதல் அல்லது அவரிடம் டிருந்து முற்பணம் ஒன்றினை அறவிட்டுள்ளமையால் இவ்வாறான பிரச்சினைகள் தோன்றுகின்றன.

9. கறுவாத் தோட்டம் காணியில் 15 பேர்ச்சஸ் அளவுடைய பகுதி வ/ப கிராவுள்ள சனச சமித்திக்கு குத்தகைக்கு விடல்

மேற்படி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணியை குத்தகைகக்கு வழங்கும் பணி தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அது விற்பனையாக திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் எதிர்வரும் காலங்களில் சட்ட ரீதியாக அப்பணியினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. டில்டன் வத்த தேயிலை தொழிற்சாலையை குத்தகைக்கு விடல்

1. 1997ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30 ம் திகதி வ/ப சுப்பர் இன்டஸ்ரீஸ் எனும் நிறுவனத்திற்கு குத்தகை மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள குறித்த காணிக்குரிய வரைபட இல. 1701ல் 2ஏக்கர் 1ரூட் 14.05 பேர்ச்சஸ் என அளவிடப்பட்டுள்ளது. அதில்

ஒன்றரை ஏக்கர் அளவான காணி மீதமாக இருக்கும் வரையில் அத்துமீறி பிரவேசித்துள்ளோர் பயன்படுத்தி வருவதனால் காணி சீர்திருத்த ஆணைக்குழு மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு இடையில் குத்தகை ஒப்பந்தங்களில் கைச்சாத்திட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இதனை இச்சிக்கலை தீர்த்துக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2. குறித்த ஒப்பந்தம் 1995ம் ஆண்டிலே இரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக கருத்துக் கூற முடியாத நிலை உள்ளது. எவ்வாறாயினும் வ/ப சுப்பர் இன்டஸ்ரீஸ் நிறுவனம் குறித்த குத்தகை தொகையினை குறித்த காலப்பகுதியினுள் செலுத்த தவறும் பட்சத்தில் சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதற்கு தயாராக உள்ளது.
3. உரிய துணை குத்தகைக்கு விடல் சட்டரீதியற்றதாக காணப்படுவதனால் ஆணைக்குழுவுக்கு கடைக்க வேண்டிய உரிய வரித்தொகையினை குறித்த நிறுவனத்திடம் இரந்து பெற்றுக் கொள்வறத்கு சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

11. ஓராயன் வத்த

இது தொடர்பாக பிரதான விலை மதிப்பீட்டாளர்களிடம் விலைமதிப்பீட்டு அறிக்கை ஒன்றினை பெற்றுக் கொண்டதுடன் அது பற்றிய மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

12. இம்புல் பிட்டிய வத்த

கண்டி மாவட்டத்தின் பசுபாகே கோரளை பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள இம்புல்பிட்டிய தோட்டம் 1982.03.12ம் திகதி இல. 103/10 வர்த்தமானி அறிவித்தல் ஊடாக மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி வர்த்தமானி அறிவித்தல் ஊடாக ஒப்படைக்கப்பட்டுள்ள அளவு கஹவத்தை பெருந்தோட்ட கம்பனிக்கு மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையினால் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. இக்காணியில் இடையிடையே அமைந்துள்ள கருங்கல் உடைத்தல் கருத்திட்டத்திற்காக அப்பிரதேசத்தைச் சேர்ந்த நபர்கள் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் கோரிக்கை விடுத்துள்ளனர். குறித்த காணியில் காணப்படுகின்ற மாணிக்கக் கல் வளம் அதிகார சபைக்கு சொந்தமாக காணப்படுகின்ற போதிலும் அப்போது காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பொறுப்பில் காணப்பட்ட பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சரினால் வெளியிடப்பட்ட கடிதம் மற்றும் வரி ஒப்பந்தம் என்பன பொதுத் திறைசேரியினால் வெளியிடப்பட்டுள்ள கடிதங்கள் காரணமாக அதன் உரிமை கம்பனிக்கு சொந்தமாக

காணப்படுகின்றது எனக்கூறி அ வர்கள் உரிமை கோருகின்றனர். இப்பிரச்சனையானது இன்னமும் தீர்க்கப்பாடமல் காணப்படுகின்றது. எவ்வாறாயினும் 2012.01.04ம் திகதி மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் தலைவரின் கடிதமொன்றின் ஊடாக கனிய வங்கள் மற்றும் மரங்களின் உரிமைகள் என்பன காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவுக்கு உரியவை எனவும் 50ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள கருங்கல் உடனான பகுதியை காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடம் ஒப்படைக்குமாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வரையில் அது தொடாபான சட்ட ரீதியான நடவடிக்கைகளை மெற்கொள்ள முடியாதுள்ளது. அவ்வாறான நிலையின் கீழ் அத்துமீறிய நபர்கள் கல் உடைத்தல் காரணமாக ஆணைக்குழுவுக்கு பாரிய வருமானம் ஒன்று இல்லாமல் போகின்றது. எனவே அதனைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

13. இது தொடர்பாக பிரதான விலை மதிப்பீட்டு அறிக்கையொன்று எதிர்பார்க்கப்படுவதுடன் அது கிடைக்கப்பெற்றதன் பின்னர் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்..

14. 18 வருடங்களுக்கு மேலாக அனுபவித்து வருவதாக பொல்கொல்ல என்பவரினால் கூறி வருகின்ற போதிலும் 2007ம் ஆண்டிலே ஆணைக்குழுவின் இல. 6374 உடைய தீர்மானித்தின் பிரகாரம் 2007ம் ஆண்டிலே விலை மதிப்பீட்டின் மீது குத்தகைக்கு விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. யாதேனும் ஓராண்டிலே அதனுடன் தொடர்புடைய மதிப்பீட்டு பெறுமதியினை கணிப்பிடும் போது அன்றைய தினம் முதல் அது அமுலுக்கு வரும். அல்லது 18 ஆண்டுகளுக்கு முன்னர் அது பற்றிய மதிப்பீடுகளை பெற்றுக் கொள்ள வேண்டியதுடன் அந்நிலையானது ஆணைக்குழுவுக்கு நிதிசார் நட்டத்தை ஏற்படுத்தும். எவ்வாறாயினும் இது பற்றி கவனம் செலுத்து நடவடிக்கை எடக்கப்பட்டுளஞ்ளது.

அதன் பின்னர் மேற்படி கோரிக்கைக்கு ஏற்ப 2007.03.26ம் திகதிய இல. 6374 உடைய ஆணைக்குழு பத்திரத்தின் மூலம் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் தீர்மானத்தின்படி 39.25 பேர்ச்சஸ் அளவுடைய காணி ஏ.எம்.எல்.பி. பொல்கொல்ல என்பவருக்கு தற்போதைய காணிப் பெறுமதிக்கு ஏற்ப 22(அ) (ஆ) பிரிவின் கீழ் 30 வருட காலத்திற்கு குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்காக 2009.08.25ம் திகதி அதி மேதகு ஜனாதிபதி அவர்களின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. 5 வருடங்களுக்குரிய குத்தகை தொகையாக மதிப்பிடப்பட்டுள்ள ரூபா 86,315 பெறுமதியான தொகை 2011.06.30ம் திகதி செலுத்தப்பட்டுள்ளது.

15. உடுநுவர தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள சிந்துரன் கந்த எனும் பெயருடைய காணியின் 1 ஏக்கர் 15பேர்ச்சஸ் பெறுமதியான பிரதேசம் எஸ்.எம்.பி. பண்டா என்பவரினால் 29 வருட காலமாக அனுபவித்து வருவதாகவும் எனினும் காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவினால் 20 பேர்ச்சஸ் மாத்திரமே சிபாரிசு செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது. எனினும் மீதிக் காணியை காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளரினால் இல. 15/6/4 கருங்கல் 7 மற்றும் 2003.01.03ம் திகதிய அளவைக் கட்டளைக்கு ஏற்ப 10 பேருக்கு துண்டு படுத்தி 16 பேர்ச்சஸ் வீதம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதனை துண்டு இல. 1620 எனும் காணி வரைபடத்தை தயாரித்து அதன் காணித்துண்டுகளுக்கு உரித்தானவர்களிடம் 2002.01.07ம் திகதி ரூபா 10,000 வீதம் விலைமதிப்பீட்டு முற்பணம் அறவிடப்பட்டுள்ளது.

கருங்கல் உடைப்பதற்கு முன்னர் வழங்க வேண்டியுள்ள மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் சுரங்கப் பணியகத்தின் சிபாரிசு அறிக்கை இதுவரை கிடைக்கப்பெறவில்லை. அதற்கான காரணம் இக்காணியில் புராதன விகாரை ஒன்று காணப்படுவதும், அதை அண்டி வாழுகின்ற மக்கள் கருங்கல் உடைக்கும் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவதிது அதி மேதகு ஜனாதிபதி அவர்களுக்கும் அதனுடன் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு முறைப்பாடு செய்துள்ளமையாகும். மேற்படி காரணங்களின் மீது இதன் பணிகளை முன்னெடுத்துச் செல்ல முடியாதுள்ளது.

4.4 இனங்காணப்பட்டுள்ள நட்டங்கள

1. குறித்த வெளிப்படுத்தலில் இது பற்றி இந்த ஆண்டிலே உள்ளடக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

2. இந்த வாகன விபத்து தொடர்பாக நி.பி. 104இன் பிரகாரம் ஆரம்ப கட்ட விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் மூலம் வாகனத்தின் தொழில்நுட்ப கோளாறு காணப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளதனால் அதன் பிரகாரம் இது பற்றிய மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

4.5. பதவி அணி நிர்வாகம்

1. மேலதிக ஊழியர் தொகை பற்றிய தகவல்களை அனுமதிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்குமாறு ஜனாதிபதி செயலாளரது சிபாரிசின் மீது சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டதன் பின்னர் அதன் சிபாரிசின் மீது மேற்படி தகவல்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

2. சம்பந்தப்பட்ட வெற்றிடங்களை புதிய ஆட்சேர்ப்பு நடைமுறை அனுமதிக்கப்பட்டதன் பின்னர் முழுமையாக நிரப்புவதற்க நடவடிக்கை எடுக்கப்படும்.

4.6. வாகனங்களின் பயன்பாடு

1. 2011ம் ஆண்டு காலப்பகுதியில் 5 சந்தர்ப்பங்களில் வாகன திருத்தப்பணிகளுக்காக ரூபா 100,000 இற்கும் மேற்பட்ட தொகை செலவிடப்பட்டுள்ளது. ஆணைக்குழுவிடம் காணப்படுகின்ற பழைய வானங்கள் தற்போது பயன்படுத்தப்படுகின்றமையால் இச் செலவினமானது முன்னைய ஆண்டைவிடவும் சிறிய அளவு அதிகரிப்பினையே காட்டுகின்றது.

2. காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் குழுமத்தில் காணப்படுகின்ற அனைத்து வாகனங்கள் தொடர்பாகவும் இடம்பெறுகின்ற யாதேனுமொரு விபத்து தொடர்பில் நி.பி. 104 (3) இன் பிரகாரம் ஆரம்பகட்ட விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதுடன் இது வரையில் உங்களிடம் சமர்ப்பிக்கப்படாத அறிக்கைகள் இருப்பின் அது பற்றி பரீட்சித்து மிக விரைவில் பெற்றுத் தருமாறு குறித்த பிரிவுகளிடம் அறிவிக்கப்பட்டுள்ளன.

3. இதன் போது குறித்த விபத்தானது சாரதியின் கவனயீனம் காரணமாக ஏற்பட்டதென உறுதிப்படுத்தப்படாத சந்தர்ப்பங்களில் குறித்த நடவடிக்கை முறை பின்பற்றப்பட்டுள்ளது.

5. கணக்கு அலுவல்கள் மற்றும் நல்லாட்சி

1. இணைந்த திட்டம்

1. 2011-2012 ஆண்டு காலப்பகுதிகளுக்காக தயாரிக்கப்பட்ட இணைந்த திட்டத்தில் காணப்படுகின்ற குறைபாடுகள் அனைத்தையும் மட்டுப்படுத்தி மிகவும் சரியான தகவல்களை உள்ளடக்கி 2012 – 2016 ஆண்டு காலப்பகுதிக்கான உரிய தொழிற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

2. இவ்வாறான குறைபாடுகள் எதிர்வரும் காலங்களில் இடம்பெறக்கூடாது எனவும் குறித்த பிரிவுகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளன.

5.2. தொழிற்பாட்டுத் திட்டம்

1. எதிர்வரும் காலத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கின்ற நடவடிக்கை முறைகளை பின்பற்றுவதற்கு குறித்துக் கொண்டேன்.

2. தொழிற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத நுவரெலியா மாவட்ட பணிப்பாளரிடம் இதன் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், அவர் தற்போது அது தொடர்பாக கவனம் செலுத்தி அப்பணியை பூர்த்தி செய்துள்ளார்.

3. எதிர்வரும் காலங்களில் மதிப்பீடு செய்யப்படுபகின்ற செயற்பாடுகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்குமாறு ஒவ்வொரு பிரிவிற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

4. எதிர்வரும் காலங்களில் முறையாக மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளன.

5. சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் கலந்துரையாடி எதிர்வருதம் காலங்களில் முறையாக மேற்கொள்வதற்கு விழிப்பூட்டப்பட்டுள்ளன.

5.3. உள்ளக கணக்காய்வு

ஆட்சேர்ப்பு நடைமுறை அனுமதிக்கப்படுவதற்கு தாமதம் ஏற்படுவதன் காரணமாக இப்பதவிக்கு உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்ப்பு செய்ய முடியாதுள்ளது.

2. 2012ம் ஆண்டிலே சீராக்கம் செய்து துரிதமாக நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அறிறுவுறுத்தப்பட்டுள்ளன.

5.4. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

ஜனாதிபதி செயலாளர் அவர்களை விழிப்பூட்டி ஜனாதிபதி செயலதக்கை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் அங்கத்தவர் ஒருவரை நியமிப்பது தொடர்பாக துரிதமாக செயற்படுமாறு சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளன.

5.5. வரவுசெலவுத்திட்ட கட்டுப்பாடு

இது தொடர்பாக தீவிர கவனம் செலுத்துமாறு சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளன.

6. முறைமை மற்றுமு் நிர்வாகம்

1. வருமான பிரிவு அறிக்கைகள் மற்றும் கணக்கு பிரிவு வருமான அறிக்கைகள்.

2. நிதி பற்றிய நிர்வாகம்

(அ) மற்றும் (ஆ)

கணக்காய்வு விசாரணைகள் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்த கணக்கீட்டு குறைபாடுகளை இயன்றளவு சரி செய்து கொள்வதற்கும் கடமைகளை நிறைவேற்றுமாறு அலுவலகத்தின் கணக்கு பணிகளுக்கு பொறுப்பான உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், கணக்கு பொறுப்புகளை மாத்திரம் ஒப்படைக்குமாறும், வேறு வெளி கடமைகளை அவரிடம் ஒப்படைக்க வேண்டாம் எனவும் சகல மாவட்ட பணிப்பாளருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

மேலும் காசு அறவிடும் பணிகளை வாரத்தின் திங்கள் மற்றும் புதன் கிழமைகளில் மாத்திரம் மேற்கொள்ளுமாறும் சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை ஒவ்வொரு நாளும் குறித்துக்

கொண்டதன் பின்னர் காசேட்டினை முறையாக பேணி வருமாறும் அலுவலகத்திடம் காணப்படும் காசு மற்றும் காசுப் பெட்டகத்தில் வைப்பில் இடப் பட வேண்டுமெனவும் மாவட்ட அலுவலகங்களில் கணக்குப் பணிகளுக்கு பொறுப்பான அதிகாரிகளுக்கு அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணிகளை உரியவாறு மேற்கொள்வது தொடர்பாக பின்னூட்டல் பணிகளை மேற்கொள்ளுமாறும் தலைமை அலுவலகத்தின் சம்பந்தப்பட்ட பிரிவுகளிடம் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

3. விடுமுறை ஆவணம் மற்றும் வரவுக்கான ஆவணம்

(அ) வரவுக்கான ஆவணம் (ஆ) விடுமுறை ஆவணம்

கணக்காய்வு விசாரணைகள் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தவாறு மாவட்ட அலுவலக உத்தியோகத்தரின் வருகைக்கான ஆவணத்தை சரியாக பேணி வருமாறு அறிவுறுத்தப்பட்டள்ளதுடன் அதில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த குறைபாடுகள் அனைத்தையும் நிவர்த்தி செய்து விடுமுறை ஆவணத்தை இற்றைப்படுத்தி பேணி வருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அலுவலகத்தின் கடமைகளை பகிர்ந்தளிக்கும் போது விடுமுறை ஆவணத்தை பேணி வருவதற்காக ஒரு உத்தியோகத்தரை நியமித்து அவரிடம் அப்பணியை எழுத்துமூலம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கடமைகளை கண்காணிப்பு செய்வதற்கு பதவிநிலை உதவியாளர் ஒருவரை நியமிக்குமாறும் மாவட்ட பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளன.

மேலும் மாவட்ட அலுவலக உத்தியோகத்தரின் வருகை வெளிச்செல்லல் என்பவற்றினை பதிவதற்காக விரல் அடையாள இயந்திரம் ஒன்றினை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையால் 2012ம் ஆண்டிலே வரவுக்கான ஆவணம் தொடர்பாக முன்னர் ஏற்பட்ட பிரச்சினைகள் பெரும்பாலும் நிவர்த்தி செய்யப்படுவதற்கு காரணமாக அமையும் என்பதனை கூற விரும்புகின்றேன்.

4. எதிர்கால நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட பணிகள் பற்றிய அறிக்கை

கணக்காய்வு விசாரணைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு வெளிக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட பணிப்பாளர்களின் எதிர்கால வேலைத்திட்டங்களை முன்னைய மாதத்தின் 25ம் திகதிக்கு முன்னர் சமர்ப்பித்து அதற்கான அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் ஏனைய உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட பணிப்பாளர்களின் சமர்ப்பிக்கப்படுகின்ற மாதாந்த எதிர்வரும் காலப்பகுதிக்கான நிகழ்ச்சித்திட்டங்களை திருத்தம் செய்து நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் என்ற வகையில் முறையாக சமர்ப்பிப்பதற்கு உரிய அறிவினை பெற்றுக் கொடுப்பதற்கும் பணிப்பாளரிடம்

பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டதுடன் அதன் பின்னூட்டல் பணிகளை மேற்கொள்ளுமாறு உள்ளக கணக்காய்வு பிரிவுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

5. மாவட்ட அதிகார சபைகளின் காணி ஆவணங்கள்

இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் பணி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் நாயகத்தினால் பல மாவட்ட அலுவலகங்களின் பணிகள் கண்காணிக்கப்பட்டள்ளதுடன் குறித்த மாவட்டத்துடன் ஒப்படைக்கப்பட்டுள்ள காணி பற்றி ஆவணங்கள் மற்றும் வரி தொடர்பான ஆவணங்கள், அத்துமீறி பிரவேசித்தல் பற்றிய ஆவணங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கு சொந்தமான கோப்புகள் என்பவற்றை தெளிவாக இனங்காணக்கூடிய வாறு பேணி வருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன.

சகல மாவட்ட செயலகங்களுக்கும் கோப்புகளை பாதுகாப்பாக வைத்திருப்பதற்கான களஞ்சிய வசதிகளை ஏற்படுத்தும் பொருட்டு கோப்பு கெபினட் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதுடன் கடமை கோப்புகள் அனைத்தையும் இற்றைப்படுத்தி அதில் வைத்து பேணி வருவதற்கும் தற்போது பணியாற்றி வருகின்ற கோப்புகளை பிரித்து கோப்பு பற்றிய ஆவணமொன்றினை தயாரித்து உரிய முறையில் இலக்கமிட்டு பிரதேச செயலக வாரியாக அதனைப் பிரித்து கோப்புகளை பேணிவர வேண்டுமென ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட விரும்புகிறேன்.

6. காணி கோப்புகளை பேணி வருதல் மற்றும் களஞ்சியப்படுத்தல்

சட்டத்தரணி நிமல் பி. புஞ்சிஹேவா
தலைவர்
காணி சீர்த்திருத்த ஆணைக்குழு